64.
III.A.6.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

இயற்றிய

விக்கிரம சோழனுலா

(குறிப்புரையுடன்)

கலாக்ஷேத்திரம்

அடையாறு.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

இயற்றிய

விக்கிரம சோழனுலா

(குறிப்புரையுடன்)

அத்யக்ஷர்:

ஸ்ரீமதி ருக்மிணிதேவி அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது

நந்தன ௵ ஆவணி ௴

அடையாறு

சென்னை 20.

1952

இரண்டாம் பதிப்பு—1952
(உரிமைப்பதிவு)

விலை ரூ. 1-8-0.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.

கணபதி துணை

முகவுரை

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

உலாவென்பது தமிழ் மொழியிலுள்ள பலவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலா வரு தலைச் சிறப்பித்துப் பாடப்படுதலின் இஃது இப்பெயர் பெற்றது. உலா—பவனி. இது கலிவெண்பாவால் இயற்றப் பெறும்; தலைவன் வீதியில் பவனி வரும்போது அவ்வீதியில் இருந்த பேதை முதற்பேரிளம் பெண் ஈறாக ஏழு பருவப் பொது மகளிரும் அவனைக்கண்டு காமுற்றதாகப் பாடப் பெறுவது.

காப்பியங்களில் அவ்வற்றின் தலைவர்கள் உலாவருங் காட்சிகளைப் புனைந்து அமைத்தல் கவிமரபு. அவ்விதம் காப்பியங்களிற் சுருக்கமாக அமைக்கப்பெறும் செய்தியையே விரிவு பெறக்கூறும் பிரபந்தமே உலாவாகும். உலாவில் தலைவன் பெயர் கூறப்படுதலாலும், அவனைக் கண்டு மகளிர் மாத்திரம் காதல் கூர்ந்த ஒருதலைக் காமச்செய்தியை உரைப்பதாலும் இது புறப்பொருளைச்சார்ந்த பெண்பாற் கைக் கிளையுள் அடங்கும்; பாடாண்திணைக் குரியதுமாம். தாம் வழிபடும் தெய்வங்கள்மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள் மீதும் புலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கின்றனர். புற நிகழ்ச்சிகளை வருணிப்பதினும் அகநிகழ்ச்சியாகிய காம வுணர்ச்சியை வருணித்தல் அரியது. இதனை, "பேசுமுலாவிற் பெதும்பை புலி" என்ற ஆன்றோர் கூற்று வலியுறுத்தும்.

கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருமான், விக்கிரமசோழன், இரண்டாங்குலோத்துங்க

சோழன், இரண்டாம்இராசராசசோழன் ஆகிய மூவர் மீதும் தனித்தனியே உலாக்கள் பாடியுள்ளார். அம்மூன்று உலாக்களும் *மூவருலா என்று வழங்கப்பெறும். அவற்றுள் ஒன்றே இந்த விக்கிரம சோழனுலா ஆகும்.

மாணவர்களின் நலனைக்கருதி இவ்வுலா இப்பொழுது தனியாக வெளியிடப்பெற்றது. இப்பதிப்பில், சோழசரித்திர சம்பந்தமான மற்றும் பல குறிப்புக்களும், பிற குறிப்புக்களும் ஆங்காங்குச் சேர்க்கப் பெற்றுள்ளன.

அடையாறு,
சென்னை,
11—8—52

ரா. விசுவநாதன்,
கௌரவ அமைச்சர்.

---

* இந்த மூவருலா 2-ம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியரான ஒட்டக்கூத்தருடைய இயற்பெயர் கூத்தரென்பது ; இவர் கூத்தமுதலியார் என்றும் வழங்கப் பெறுவர். கூத்தரென்பது ஸ்ரீநடராஜப்பெருமானைக் குறிப்ப தாகும். இவர் பிறந்த ஊர் மலரி என்பர். "மலரி வருங் கூத்தன்" (தண்டி. மேற்.) என்பது இதனை வலியுறுத்தும். மலரி, என்பது திருவெறும்பியூரின் பழம் பெயர், (சாஸனத் தமிழ்க்கவி சரிதம் பக். 68.) இவர் அம்பர் நாட்டைச் சேர்ந்தவர். அம்பர் என்னும் ஓர் ஊர். தஞ்சாவூர் ஜில்லா, பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்துக்கு அருகே உள்ளது.

ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் ஆட்சிக் காலத்தில் அவனது ஆஸ்தான பண்டிதராகவும், இரண்டாங்குலோத்துங் கனுக்கு வித்தியாகுருவாகவும், பின் அவன் குமாரன் இரண் டாம்இராசர்ராசனுக்கும் ஆஸ்தானபண்டிதராகவும் விளங்கி அவர்களால் பல சிறப்புக்களுடன் ஆதரிக்கப் பெற்றுப் பல நூல்களை இயற்றியவர். அம்மூவேந்தருள் ஒருவன் இவருக்கு மேற்கூறிய பூந்தோட்டம் என்னும் ஊருக்கருகே, அரிசி லாற்றங்கரையில் உள்ள ஓரூரை அளித்தான் ; இவர் பெயரால் அவ்வூர் கூத்தனூர் என்று இக்காலத்தும் வழங்கப் பெறுகின்றது. இவர் கலைமகளுடைய திருவருள் பெற்றவராதலின், அவ்வூரில் அத்தேவியின் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து கோயில் எடுப்பித்து வழிபட்டு வந்தனர். இஃது "ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே" (தக்க. 813) என்பதனால் விளங்கும் ; இக்கோயில் இன்றும் நல்ல நிலைமையில் விளங்குகின்றது.

தன்மீது இவர் பாடிய உலாவிலுள்ள ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றும்படி விக்கிரமசோழன் கேட்க, அவ்வாறே விரைவிற்பாடினமையால் இவர் ஒட்டக்கூத்தர் என்னும் பெயர் பெற்றார் என்பர். பந்தயம் வைத்துக் கவி பாடுதலிற் சிறந்தவராதலின் இவர் இப்பெயர் பெற்றா ரென்றும் கூறுவர் ; ஒட்டம்—பந்தயம்.

மூவருலாவையன்றி இவர் இயற்றியவையாக இப்பொழுது தெரிய வரும் நூல்கள் :—அரும்பைத்தொள்ளாயிரம், ஈட்டி யெழுபது, காங்கேயன் நாலாயிரக்கோவை, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி என்பனவாம். இவையன்றி விக்கிரமசோழன்மீது கலிங்கவெற்றியைக் குறித்து இவர் ஒரு பரணிநூல் பாடியுள்ளார் என்றும் தெரிகிறது. அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. மற்றும் இவருடைய வரலாறுகள் விரிக்கிற் பெருகும்.

விக்கிரமசோழன் வரலாறு

இந்நூலின் பாட்டுடைத் தலைவனான விக்கிரமசோழன் முதற் குலோத்துங்கசோழனுடைய குமாரர்களுள் நாலாமவன் என்று தெரிகிறது. இவனுடைய தாயார் தீனசிந்தாமணி என்று வழங்கப்பெற்ற மதுராந்தகி என்பவள். இவன் கி. பி. 1118 ஜூன்மீ 29உ யன்று பட்டம் எய்தினான். இவன் தன் தந்தையோடு சேர்ந்தே சோணாட்டு அரசியலை மேற்கொண்டு நடத்தி வந்தவன். இவன்மீது ஒட்டக்கூத்தர் பரணிநூல் ஒன்று இயற்றினார் என்று சில குறிப்புக்களால் தெரிகிறது. அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

இவன் தன் குலதெய்வமாகிய தில்லை ஸ்ரீநடராஜப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் புரிந்தவன். ஸ்ரீநடராஜப் பெருமான் கோயில் வெளிப்பிராகாரம் விக்கிரமசோழன் திருமாளிகையென்றும், திருவீதிகளில் ஒன்று விக்கிரம சோழன் தெங்கு திருவீதியென்றுங் கூறப்பெற்றுள்ளன. ஸ்ரீரங்கம் கோயிலொழுகு என்னும் நூலால், விக்கிரமசோழனால் அத்திருவரங்கம் கோயிலில் ஒரு மதிலும், ஸ்ரீராமன் கோயிலும், வேறு சில கட்டடங்களும் அமைக்கப்பெற்றன என்பது தெரிகிறது.

கொள்ளிடத்தின் வடக்கேயுள்ள கங்கைகொண்ட சோழபுரமே இவனது ஆட்சிக் காலத்தில் தலைநகராக விளங்கி வந்தது.

விக்கிரமசோழனது பட்டப்பெயர்களுள் மிகப் பிரசித்தமானது தியாகசமுத்திரம் என்பது; இது இவனது சாஸனங்களிலும் உலாவிலும் காணப்படுகின்றது. இவனுக்கு அகளங்கன் தியாகவாராகரம் என்னும் பட்டப்பெயர்களும் உண்டு. இவ்வேந்தனுக்கு, முக்கோக்கிழானடி, தியாகபதாகை என்னும் இருதேவியர் இருந்தனர். இவ்விருவருள் முக்கோக்கிழானடி 1126—27-இல் காலஞ் சென்றபின், தியாகபதாகை என்பவளே பட்டத்துத்தேவியாக விளங்கிவந்தனள். இவ்வுலாப் பாடிய காலத்தில் மேற்கூறிய தியாகபதாகையே பட்டத்துத் தேவியாக இருந்தாள். திருவிடைமருதூர்ச் சாஸனமொன்றால் இவ்வேந்தனுக்கு, நேரியன்மாதேவியார் என்றொரு மனைவியுமிருந்தாளெனத் தெரிகிறது. அவள் மூன்றும் மனைவி போலும். இவனது ஆட்சிக்காலம் 18 வருஷங்கள் ஆகும். இவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவன் இவனது மைந்தன் இரண்டாங்குலோத்துங்கன் என்பவன்.

ஸ்ரீ

கணபதி துணை

விக்கிரம சோழனுலா

1. சீர்தந்த தாமரையாள் கேள்வன் திருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்—பார்தந்த

2. ஆதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனும்—மேதக்க

3. மையறு காட்சி மரீசியும் மண்டிலஞ்சேர்
செய்ய தனியாழித் தேரோனும்—மையல்கூர்

4. சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும்—பைந்தடத்

குறிப்புரை

1. சீர்தந்த : இது விக்கிரம சோழனென்னும் பெயருக்குப் பொருத்தமான மங்கல முதன்மொழி. தாமரையாள் கேள்வன் - திருமால்; தாமரையாள் - திருமகள். திருவுருவக்கார் - அழகிய உருவமாகிய மேகம். பார்தந்த - பூமியைப் படைத்த.

(பி - ம்.) 'திருவுருவாம்', 'திருவுதரக்'

2. ஆதிக்கடவுளாகிய திசைமுகன். ஆங்கவன்: ஒருசொல். குலமைந்தன் - சிறப்பமைந்த மைந்தன். மேதக்க - மேன்மைபொருந்திய.

3. மையறு காட்சி - குற்றமற்ற அறிவையுடைய ; காட்சி-தோற்றமும் ஆம். மண்டிலம் - வட்ட வடிவம். செய்ய - சிவந்த. தனியாழி - ஒற்றைச் சக்கரம். தேரோன் - தேரையுடைய சூரியன்; குலோத். உலா, 1; இராசராச. 2.

(பி - ம்.) 'மண்டிலஞ்'

4. சிந்தனை - கவலை. முற்ற - முடியும்பொருட்டு. மறவோன் - வலியோன் ; நீதியைத் தளரா வலிமையுடன் நிலைநாட்டினு னாதலின் ; இவன் ஆதிமனுவல்லன் ; அந்த வைவசுவத மனுவினும் வேறானவன். இவன் மனுநீதிகண்ட சோழன்; 'மெய்ம்மனுப் , பெற்ற நீதியுந் தன்பெயராக்கினான்', 'தொன்மனு நூல் ,தொடை மனுவால், துடைப்புண்டது' (பெரிய புராணம். திருவாரூர்ச். 14,37.) ; குலோத் : உலா - 2; இராசராச. 3 ; கலிங்கத். இராசபாரம். 10.

(பி - ம்.) ', திருத்தேருள்' 'ஊர்ந்த மனுவோனும்'

5. தாடு துறையி லடுபுலியும் புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவனும்—நீடிய

6. மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக புரிபுரந்த பூபதியும்—மாகத்துக்

7. கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனும்—மாறழிந்

---

5. ஆடுதுறையில்-நீராடுந் துறையில். அடுபுலி - கொல்லும்கொடிய புலி. புல்வாய்-மான். கொற்றவன்: மாந்தாதா; குலோத். உலா. 7; இராசராச. 5; கலிங்கத். இராசபாரம். 12; கம்ப. 1. குலமுறை. 5.

6. மாகவிமானம் - தெய்வ விமானம். தனிஊர்ந்த - பிறர் எவர்க்குமில்லாத தனிச்சிறப்புடன் ஊர்ந்துசென்ற. இந்திர விமானம் ஊர்ந்த சோழன் என்று ஒருவன்பெயர் சோழ ராஜாக்கள் சரிதம் என்னும் பழைய நூலில் காணப்படுகிறது எனக் கலிக்கத்துப்பரணி இராசபாரம்பரியம் உரையில் ஸ்ரீ. வை. மு. சடகோபராமானுஜாசாரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். போகபுரி - அமராவதி. பூபதி - அரசன். இவன் முசுகுந்த சோழன்: குலோத். உலா. 4; கலிங்கத். இராசபாரம். 12. கம்ப.: 1. குலமுறை; 6. மாகத்து - தேவலோகத்தில்.

(பி - ம்.) 'விமானந்தனை' 'மன்னவனப்' 'போக புவிபுரந்த பூபதியு மியாகத்துக்'

7. மனு - மந்திரம். தேற - தெளியும்படி. செம்பியன் - சோழன்; இவனைப் பெருநற்கிள்ளி என்பர் குலோத். உலாப். பழைய உரையாசிரியர்; குலோத். உலா, 6; கலிங்கத். இராசபாரம். 15, மாறு - பகைமை.

8. தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும்—கூடார்தம்

9. தூங்கு மெயிலெறிந்த சோழனு மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடற்கு விட்டோனும்—ஆங்குப்

---

8. மறலி - யமன். முதுமக்கட்சாடி வகுத்தவன்; சுரகுரு; இவனை நாபாகன் என்பர் குலோத் உலாப் பழைய உரையாசிரியர்; குலோத். உலா-12. உரை; 'அணிபெற வெழுதிய வழகிய குலைகவி னுட்செறி மட்சாடி, குடிபுக முடிபுனை சுரகுரு வழிமுதல் கொட்டுக சப்பாணி' குலோத். பிள்ளைத். 39); 'சித்தமகிழ்ந் தினைமறச் செங்கோ னடத்தகமன், உத்தம னென்றந்நா ளுயிர்கொடுபோ காமையினால், மொய்த்த முதியோர்க்கு முதுமக்கட் சாடிபல, வைத்தகுல தீபனே மன்னுகோ மன்னுகோ' (திரு வெண்காட்டுப் புராணம், சத்திய நல்விரதச். 9.) முதுமக்கட்சாடி: வயது முதிர்ந்து நடமாட்டமில்லாது வலிகுறைந்த முதுமக்களை ஒரு பெரிய சாடி யுள்வைத்துக் காப்பாற்றுவது பண்டை வழக்கம் எனத்தெரிகிறது. இது பிணங்களை அடக்கஞ்செய்து மேலே கவிழ்க்கும் சாடியினும் வேறானது. மறலி ஒளித்தது, சுரகுருவின் ஆற்றலுக்கு அஞ்சி. தராபதி - உலகுக்குத் தலைவன்: அரசன்; தரா - தரை; இவனை மிருத்யுஜித் என்று திருவாலங் காட்டுச் செப்புப்பட்டயம் கூறும். கூடார் - பகைவராகிய அசுரர்.

(பி - ம்.) 'மறலியொழிய' 'யொளிய'

9. தூங்குமெயில் - ஆகாயத்தில் திரியும் மதில்களாகிய கோட்டை; 'திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த, விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்' (தொல். களவு. 11. ந. மேற்.); குலோத். உலா: 13; புறநா. 39; பழமொழி. 155; சிலப். 3:29. அம்மானைவரி; மணி. 1: 3. இவன் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் என்பவன். விட்டோன்: ஸம் ஹர்ஷண சக்கரவர்த்தி என்பவன்; இவனை ஸமுத்ரஜித் என்றும், இவன் மேல் கடலையும் கீழ் கடலையும் ஒன்றுசேர்த்த அருஞ்செயல்புரிந்து ஓர் அரசகுமாரியை மணம்புரிந்தனன் என்றும் கன்யாகுமரிச் சிலாசாஸனம் கூறும்; குலோத். உலா. 14; இராசராச. 14. கலிங்கத். இராசபாரம், 16

(பி - ம்.) 'கீழ்கடலில்'

10. பிலமதனிற் புக்குத்தன் பேரொளியா ளுகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவும்—உலகறியக்

11. காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும்—மேக்குயர்க்

12. கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும—தெள்ளருவிச்

---

10. பிலம்-பாதாள வுலகம். கோ - அரசன். சூரவாதித்த சோழன் என்பான் நாகலோகஞ்சென்று நாகராஜகுமாரி காந்திமதி என்பாளை மணந்து அங்கிருந்து வெற்றிலைப்பயிரைச் சோழநாட்டிற்குச் கொண்டு வந்தான் என்று தெரிகிறது ; செவ்வந்திப் புராணம். உறையூர்ப் புராணம். இவன் கரிகாலனின் புதல்வனை கிள்ளிவளவனின் வேருனவனும், காலத்தால் முற்பட்டவனும் ஆவன். வெற்றிலைக்கு நாகவல்லி என்னும் வடமொழிப் பெயர் உள்ளமை நோக்குக; பெரும்பாண். 29—37. ந. உரை. இச்சரித்திர வரலாறு வேறு பெயர்களுடன் நாகைக்காரோணப் புராணத்திலும், வடமொழியில் தாலவன புராணமென்னும் திருப்பனந்தாள் புராணத்திலும் கூறப்பெற்றுள்ளன.

11. தூக்குந் துலை - புறுவைவைத்து நிறுத்த தராசு. மேக்கு - மேலே. தூயோன் : சிபிசக்கரவர்த்தி ; இவனைச் சிபிச்சோழன் என்பர் தமிழ் நூலோர், குலோத் - உலா. 17 ; இராசராச. 6 ; கலிங்கத் ; இராசபாரம் 13. புறநா. 37, 39, 43, 46 ; சிலப். 20: 52, 23: 58. 27: 166-8'.

(பி - ம்.) ' துலைப்புக்க '

12. குடகக் குவடு - குடக மலையை. பொன்னி - காவிரியை. தந்தோன்-சிவூகன் ; குலோத். உலா, 15 ; இராசராச. 15, 85. தெள்ளருவி-தெளிந்த அருவிகளையுடைய. இவனைக் காவிரிச் சோழன் என்று சோழ ராஜ சரித்திரமும், கவேரராஜன் என்று சிலப்பதிகாரமும், காந்தமன் என்று மணிமேகலையும் கூறுவதோடு, திருவாலங்காட்டுச செப்புப்பட்டயம் சித்திரதன் என்றுகூ றுகிற்கும் ; குலோத். உலா, 15 ; இராசராச, 15 ; கலிங்கத். இராசபாரம். 15.

(பி - ம்.) ' ' குடகைக் '

13. சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்—இன்னருளின்

14. மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்—மீதெலாம்

15. எண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்—கண்கொண்ட

16. கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்—தூதற்காப்

---

13. சென்னி - சிகரத்தில். புலியேறு இருத்தி - புலிக் கொடியை நாட்டி. கிரிதிரித்து-மேருமலையைத்திரியச் செய்து ; 155 ; இராசராச. 17. கரைகண்ட பூபதி: கரிகாலன்; குலோத், உலா, 18; "தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில், மிக்க கரிகால வேந்தனுந்தான் - பக்கம், அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை கண்டான், மலைக்கும் புயத்தானும் வந்து," (சோழமண்டல. மேற்.); 'கரிகாலக் கரை' (திருச்செந்துறைச் சாஸனம்.) இவன் கரிகாலன்.

14. பொய்கை கவி கொண்டு - பொய்கையார் பாடிய களவழி நாற்பதைக் கொண்டு. வில்லவன் - சேரமான் கணைக்காலிரும்பொறை; குலோத். உலா, 20 ; இராசராச. 18 ; "பாடிய பொய்கை களவழி கேட்டுப் பழம்படியேபடிப் படிந்து, வாடிய பொறைய னைச்சிறை விட்ட மன்னவ னொரு திருமருகன்" (குலோத். பிள்ளைத். 103) ; "சேரமான், தன்னடிக் கண்டு தளைவிடுத்தா யேழ்தளையுன், பொன்னடிக்குண் டென்பதென்ன புத்தியோ" (தமிழ் விடுதூது, 88-9.) பார்த்திவன் : கோச் செங்கட் சோழன் என்னும் சோழன் செங்கணன் ; கலிங்கத். இராசபாரம். 18. மீதெலாம் - மார்பு முழுவதும்.

(பி - ம்.) 'தளைவிடுத்த' 'மீதெல்லாம்', 'ஈதல்லால்'

15. எண்கொண்ட - மதித்தல் கொண்ட. தொண்ணூற்றாறு புண் கொண்டவன் ; குலோத். உலா, 21 ; இராசராச. 19. விஜயாலய சோழன் பல பெரும்போர்களில் எதிர்த்துப் பகைவர்களை ஒடுக்கிய வீர வாழ்க்கையைக் கொண்டவன். இவனே தொண்ணூற்றாறு புண்கொண்ட வீரன்.

16 தேறல் - சிவபெருமான். குனிக்கும் - கூத்தாடும். திருமன்றம் - சிற்றம்பலம். பொன் வேய்ந்த - பொன்னோடுகளை வேய்ந்த. காவலன் : இவன் முதற் பராந்தகன், இவன் முதலாம் ஆதித்தன், என்று நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி (65) கூறும். தூதற்கா-மேலாடையைக் களையும்படி சேரனால் அவமதிக்கப்பட்ட தன் தூதன்பொருட்டு.

(பி - ம்.) 'கோதிலாத் தெற்குக்'

17. பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமும
கொண்டு மலைநாடு கொண்டோனும்—தண்டேவிக்
18. கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும்—வங்கத்தை
19. முற்று முரணடக்கி மும்மடிபோய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்—பற்றலரை
20. வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமும்
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனும்-அப்பழநூல்
21. பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால்
ஆடரவப் பாய லமைத்தோனும்—கூடலை

---

17. பண்டு - முற்காலத்தில். ஈரொன்பது சுரம் - பதினெட்டுக் குறும்புகள்; குலோத். உலா, 24; இராசராச. 21. மலைநாடு - சேரநாட்டை. கொண்டோன்: முதல் இராசராசன். தண்டு ஏவி - சேனையை யனுப்பி.

(பி - ம்.) 'ஈரொன்பது சிரமும்' 'தண்டினால்'

18. கடாரம் - மலேயாவிலுள்ள 'கெடா' என்னும் நாடு. செம்பியன்: இராஜேந்திர சோழன் என்னும் கங்கைகொண்ட சோழன். வங்கத்தைமுற்றும் - காந்தளூர்ச்சாலை என்னும் இடத்தில் இருந்த சேரர் கப்பற் படை முழுவதையும்; குலோத். உலா, 25, உரை; வங்கதேசத்தை என்றலும் ஆம்.

(பி - ம்.) 'கடாரமுங் கைவரக், கங்கா புரிபுரந்த கற்பகமும்'

19. மும்மடி - மூன்றுமுறை. கல்யாணி - சாளுக்கியருக் குரிய தலைநகரான கல்யாண புரம். சேவகன்: இராஜாதிராஜன். பற்றலரை - பகைவரை. வெப்பத்து-கோபத்தையுடைய. வேழங்கள் ஆயிரம்-ஆயிரம் யானைகளை; இவ்விதம் கூறுதல் ஒரு மரபு; "கண்ட நாயகர் காக்கு நவிலையில், கொண்ட வாயிரங் குஞ்சர மல்லவோ" (கலிங்கத். 385.)

(பி - ம்.) 'மும்முடி போய்க் கல்யாணம்' 'தனி யானைச்'

20. கொப்பத்து - கொப்பம் என்ற ஊரில்; இவ்வூர் கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள ஒரு தீர்த்தமென்றும், தற்காலத்தில் 'கித்ராபூர்' என வழங்கும் ஊராயிருக்கலாம் என்றும் கூறுவர்; (சோழர்கள். பக். 307); இராசராச. 24. கொண்டோன்: இராசேந்திரன் அப்பழநூல் என்றது வேதத்தை.

21. பாடுஅரவம் - ஓதப்படும் ஓசையையுடைய; அரங்கத்திற்கு அடை. அரங்கமேயாற்கு - அரங்கநாதருக்கு. அரவப்பாயல் - சேஷசயனம். அமைத்தோன்: இராஜமகேந்திரன்; இவன் பெயரால் ஸ்ரீரங்கத்தில் இராஜமஹேந்திரன் திருவீதி என ஒரு பிராகாரம் உள்ளது.

(பி - ம்.) 'கூடலர்', 'கூடலார்'

22. சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும்—அங்கவன்பின்

23. காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தம்

24. சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகால்
சாலைக் கலமறுத்த தண்டினான்—மேலைக்

---

22. கூடல சங்கமம்: இது துங்கபத்திரையும் கிருஷ்ணாநதியும் கூடுமிடத்திலுள்ள ஓரூர் (சோழர்கள். பக். 321.) பரணி-பரணி யென்னும் நூல். துங்கம் - உயர்வு. துணித்தோன்: வீரராஜேந்திர சோழன்; இராசராச. 25. வீரராசேந்திரன் பரணிகொண்ட வரலாறு தெரியவில்லை. அப்பரணி நூல் இறந்துபட்டது போலும்.

(பி - ம்.) 'சங்கமத்தைக்' 'துங்கமத்த'

23. அவனி காத்தவன்; அதிராஜேந்திரன்; இவன் அதிககாலம் ஆளாமல் இறந்தனன் ஆதலானும், இவன் ஆட்சியில் குறிப்பிடத்தக்க அருஞ்செயல் இன்மையாலும், அவனி காத்தவன் என்று பொதுப்படக் கூறினர். மேவலர்தம் - பகைவருடைய.

(பி - ம்.) 'முற்றும் புரிந்தவனும் மேவலார்'

24. சேல் - பாண்டியருக்குரிய மீனக்கொடி. சிலை - சேரருக்குரிய விற்கொடி. இரு கால் - இரண்டு முறை. சாலைக்கலம் - சாலை என்னுமிடத்திலிருந்த கப்பற் படை; கலம் - மரக்கலம். சாலை திருவனந்தபுரத்தைச் சார்ந்த ஒரு துறைமுகம். இது காந்தளூர்ச்சாலை எனப்படும். முதல் இராசராச சோழனைப்போல முதற்குலோத்துங்க சோழனும் இக்காந்தளூர்ச்சாலைக் கலமறுத்த செய்தி, தென்னிந்திய சாஸனங்களால் அறியலாம். தண்டு - படை. தண்டினான்: இவன் முதற் குலோத்துங்கன்; இவன் பாண்டியரையும் சேரரையும் வென்றமை, "விட்ட தண்டினின் மீனவ ரைவரும், கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ", "போரின் மேற் றண்டெடுக்கப் புறக்கிடும்,சேரர் வார்த்தை செவிப்பட்ட தில்லையோ", "வேலைகொண்டு விழிஞ மழித்ததுஞ், சாலை கொண்டதுந் தண்டுகொண் டேயன்றோ" (கலிங்கத். 380-82) என்னும் தாழிசைகளால் விளங்கும். "மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர" என்ற முதற் குலோத்துங்கனது மூன்றும் மெய்க்கீர்த்திப் பகுதியும் இதனை வலியுறுத்தும். இதுமுதல் 27ஆம் கண்ணிமுடிய விக்கிரமசோழன் தந்தையாகிய முதற் குலோத்துங் சோழன் சிறப்புகள் கூறப்படுவன.

(பி - ம்.) 'சிலையைக் கடிந்து'

25\. கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் டரசை—உடலை

26\. இறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—அறத்திகிரி

27\. வாரிப் புவனம் வலமாக வந்தளிக்கும்
ஆரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்

25\. மேலைக் கடல்கொண்டு - மேல்கடலைத் தனக்கு உரிமையாகக் கொண்டு. கொங்கணம் - வடகன்னடம் ; இது சங்க நூல்களில் 'கொண்கானம்' என வழங்கும். கன்னடம் - தென்கன்னடம். கன்னட தேசத்தரசர்களுக்கும் சோழர்களுக்கும் பகைமை இருந்து வந்ததென்பது 'சோழனுடைய ஐசுவரியத்தின் பெருமை கண்டு சகியாதே வெம்பித்திரியும் கன்னட ராசனான சந்த்ர கௌரீவல்லபன் யுத்தம் செய்ய, அவனைக் கலியாணபுரத்தினின்றும் தாக்க, அவனும் தாப்புண்டு விந்தாடவியிற் சென்று புக' (நக்க. 62, உரை) என்னும் பகுதியால் அறியப்படும். மாராட்டரசை - பெரிய ராஷ்டிரகூடர்களுக்கு அரசனை ; 72.

(பி - ம்.) 'அடல்கொண் டமரா டரச ருடலை' 'மாரட்டரசை'

26\. வடவரை - இமயமலை. எல்லையா - தன் நாட்டிற்கு எல்லையாக. மறக்கலி - கொடுமையுடைய செருக்கை ; கலி - துன்பமும், வறுமையும் ஆம். சுங்கமும் மாற்றி - பரதாழ்வான் முதலாக வந்த சுங்கத்தையும் தவிர்த்து: தவிர்த்தவன் முதற் குலோத்துங்க சோழன்: குலோத். உலா, 26 ; இராசராச. 26. இதனால் முதற் குலோத்துங்கனுக்குச் சுங்கம் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர் என்ற பெயருண்டாயிற்று. அறத்திகிரி - தருமத்தை வளர்க்கும் ஆக்ஞாசக்கரம்.

27\. வாரிப் புவனம்-கடலை எல்லையாக உடைய உலகத்தை. வலமாக வருதல் ஒரு மரபு; 'குணகடல் பின்ன தாகக் குடகடல், வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப, வலமுறை வருதலு முண்டென்று (புறநா. 31 : 13-5) ; 'வங்க மறிகடல் சூழெழு பார்வலம் வந்த மனுகுல சோழனை' (வி. பா, 17-ஆம் போர். 66.) ஆரிற்பொலி - ஆத்திமாலையால் விளங்கிய. அபயற்கு - முதற்குலோத்துங்க சோழனுக்கு. அபயன் கலிங்கத். 2, 13, 16.

(பி - ம்.) 'வாரித் திகிரி' 'வலமாகத் தந்தளிக்கும்,'

28. தோன்றியகோன் விக்கிரம சோழன் றொடைத்தும்பை
மூன்று முரசு முகின்முழங்க—நோன்றலைய
2 . மும்மைப் புவனம் புரக்க முடிகவித்துச்
செம்மைத் தனிக்கோ றிசையளப்பத்—தம்மை
30. விடவுட் படுத்து விழுக்கவிகை யெட்டுக்
கடவுட் களிறு கவிப்பச்—சுடர்சேர்
31. இணைத்தார் மகுட மிறக்கி யரசர்
துணைத்தா ளபிடேகஞ் சூடப்—பணைத்தேறு

---

28. தொடைத்தும்பை - தும்பை மாலையை அணிந்த. மூன்று முரசும் - வீர முரசும், நியாய முரசும், தியாக முரசும்; 121, 272; மண முரசுடனே ஏனை யிரண்டு முரசென்பாருமுளர்; புறநா. 58: 12, உரை. முகில் முழங்க - மேகத்தைப் போல ஒலிக்க. வாத்தியங்களுக்கும் போருக் குரிய பூவைச் சூட்டுதல் மரபு: "பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக், குருதி வேட்கை யுருகெழு முரசம" (புறநா. 50 : 4-5); "தினது, தாம முரசு" (294) என்பர் பின். நோன்தலைய - வலிய இடத்தையுடைய.

(பி - ம்.) 'முரச முகில்'

29. மும்மைப் புவனம்-தமிழ் நாட்டின் மூன்று பிரிவுகள். இதனுற் சில சோழ அரசர்கள் திரிபுவன சக்கரவர்த்திகள் என்று வழங்கப்பெறுவர். மும்மை எண்ணின் மேல் நின்றது. "ஒருமைச் செயலாற்றும்" (குறள், 835) என்பதுபோல. திசை அளப்ப - எட்டுத் திசைகளையும் தனக்கு உள்ளாக்க. தம்மை என்றது திசைகளை.

(பி - ம்.) 'முடிசூடிச,' 'முடிசூட்டிச்' 'தம்முள் விட

(30.) விட உட்படுத்து - மிகவும் உள்ளே அடக்கி. விழுக்கவிகை - சிறந்த குடை. எட்டு கடவுட்களிறு-எட்டுத் திசைகளிலுமுள்ள தெய்வத் தன்மை பொருந்திய யானைகளை. கவிப்ப - உள்ளே அடக்க; "காத்துக் குடையொன்று லெட்டுத் திசைகவித்த, வேத்துக் குலகிரியின் மேருவே" (330.)

(பி - ம்.) 'விடவுட் படுத்த' 'களிறுங்'

31. இணைத்தார் மகுடம் - இரண்டு மாலைகளை யணிந்த கிரீடத்தை; என்றது சூடும் பூவையும் அடையாளப்பூவையும்; "கண்ணியுந் தாரு மெண்ணின ராண்டே" (தொல். மரபு. 79.) இறக்கி - நீக்கி. அரசர்-மற்ற சிற்றரசர். துணைத்தாள் அபிடேகம் - விக்கிரம சோழனது இரண்டு கால்களாகிய கிரீடத்தை; "பலர்முடிமேல், ஆர்க்கும் கழற்கா லனகன்"(69-70) பணைத்து ஏறு - பெருத்து மேற்கிளம்பும்.

(பி - ம்.) 'சூட்டப்'

32. நீராழி யேழு நிலவாழி யேழுந்தன்
போராழி யொன்றுற் பொதுநீக்கிச்—சீராழி

33. மேய திகிரி கிரிமே கலையல்குல்
தூய நிலமடந்தை தோள்களினும்—சாயலின்

34. ஓது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும்—போதில்

35. நிறைகின்ற செல்வி நெடுங்கண் களினும்
உறைகின்ற நாளி லொருநாள்—அறைகழற்கால்

---

32. நீராழி எழும்-கடல்களேழும். நிலவாழியேழும்-எழு தீவுகளும்; ஆழி - மண்டலம். கடலேழு, பூமி எழு: குலோத். உலா, 150 - 51, போராழி ஒன்றால் - போரைச் செய்யும் தனது சக்கரம் ஒன்றால், பொது நீக்கி - மற்ற அரசருக்கும் பொது என்பதை விலக்கி; 58; "பொதுமட்க, வாங்கெயி னேமி வரையாக மண்ணாண்டு" (குலோத். உலா, 12-3.) சீராழி - சிறப்புற்ற புறக்கடல்.

(பி - ம்.) 'சீாரும்'

33. மேய - அப்பாலுள்ள. திகிரிகிரிமேகலை - சக்கரவாளகிரியாகிய மேகலையையணிந்த. நிலமடந்தை தோள்களில் இருத்தல்; "தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற், சுடர்மணிக் கேயூரஞ் சூழ" (46.) சாயல் - அழகு.

(பி - ம்.) 'விரிமேகலை'

34. உலகங்களேழும் தனித்துடைய குலமங்கை: விக்கிரமசோழன் தேவியின் பெயர்; இவள் பெயர் தியாகபதாகை என்று வழங்கும்; 39;
இந்த உலா விக்கிரம சோழனது ஆட்சியின் பிற்பகுதியில் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது. அவன் முதன்மனைவியும் பட்டத்துத் தேவியுமான முக்கோக் கிழானடி என்பாள், அவன் ஆட்சியின் ஐந்தாறு ஆண்டுகளுக்குள் இறந்திருக்கவேண்டும்; (S. I. I. III பக். 181-2) ஆதலின், இக்கண்ணியில் கூறப்பெறும் உலகங்களேழுடைய குலமங்கை அவனது இரண்டாவது மனைவியும், பின் பட்டத்துத்தேவியுமான, தியாக பதாகை என்பவளே ஆவள். கண்ணிகள், 39, 40 இல், உலகமேழுடைய பெண்ணணங்கு, பெண் சக்கரவர்த்தி என்று கூறிப்பிட்டுள்ளவையும் மேற் கூறிய தியாகபதாகையையே குறிப்பனவாம்.

35. போதில் நிறைகின்ற செல்வி: திருமகள்.
(பி - ம்.) 'நாளி னொருநாள்'

36. தென்னர் திறையளந்த முத்திற் சிலபூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து—தென்னர்

37. வரவிட்ட தென்ற லடிவருட வாட்கண்
பொரவிட்ட பேராயம் போற்ற—விரவிட்ட

38. நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயலின்மேல்
தொத்தலர் மாலைத் துணைத்தோளும்—மைத்தடங்

---

36. தென்னர் - பாண்டியர். திறையாக அளந்த முத்து. மலை - பொதியில் மலை. ஆரச்சேறு - சந்தனக் குழம்பை ; " தன்கடற் பிறந்த முத்தி னாரமும், முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத், தெறலரு மரபிற் கடவுட் பேணிக், குறவர் தந்த சந்தி னாரமும், இருபே ராரமு மெழில்பெற வணியும் " (அகநா. 13: 1-5); " கோவா மலையாரங் கோத்த கடலாரம், தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே" (சிலப்.17: உள்வரி வாழ்த்து.)

(பி - ம்.) 'சேறளைந்து'

37. தென்னர் வரவிட்ட தென்றல் என்றது பாண்டிநாட்டிலுள்ள பொதியில்மலையில் தோன்றி வடக்கே செல்லுதல் பற்றி; " மலையத் தோங்கி மதுரையின் வளர்ந்து, புலவர் நாவிற் பொருந்திய தென்றல்", "புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற், பொதியிற் றென்றல் போலா திங்கு, மதுரைத் தென்றல் வந்தது காணீர்" (சிலப். 13: 25 - 6, 130-32.) பேராயமென்றது மகளிரை; " இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி " (சிறுபாண். 220) ; 'இவர் அரசனுக்குப் பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும் மகிழ்ச்சியைச் செய்யும் மகளிர்' (பொருந. 84-5, ந), விரவிட்ட - கலந்த.

(பி - ம்.) 'போராயம் போற்ற' 'வரவிட்ட'

38. நிலாப் பாயல் - நிலாவைப் போன்ற வெண்மையான படுக்கை. பாயலின் மேல் எய்திய (40) என இயைக்க. தொத்து அலர்மாலை - பூங் கொத்துக்கள் அலர்ந்த மாலையை அணிந்த. துணை - இரண்டு ; இதனைக் கண்ணோடும் முலையோடும் கூட்டுக.

(பி - ம்.) 'பாயன்மேற்'

39. கண்ணு முலையும் பெரிய களியன்னம்
எண்ணு முலகங்க ளேழுடைய—பெண்ணணங்கு

40. பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுடன்
எய்திய பள்ளி யினிதெழுந்து—பொய்யாத

41. பொன்னித் திருமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிர றுகின் காப்பணிந்து—முன்னை

42. மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மோலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக்—கறைக்களத்துச்

---

39. தோளும், கண்ணும், முலையும் பெரிய என்றது இவை பெருத்திருத்தல் உத்தம இலக்கணம் என்பதுபற்றி; "அகலல்குல் தோள் கண்ணென மூவழிப்பெருகி" (கலி. 108 : 2.) களியன்னம் என்றது அன்பின் மிகுதிக்குக் கூறியது; "ஆதரம் பெருகு கின்ற வன்பினு லன்ன மொத்தும்" (சீவக. 189.) உலகங்க ளேழுடைய பெண்ணணங்கு : உலக முழுதுடையாள்; 34 குறிப்.

40. ஓதி - கூந்தலையுடைய. பெண் சக்ரவர்த்தி: பட்டத்துத் தேவி; இவள் 34 ஆம் கண்ணியிற் குறிப்பிட்ட தியாகபதாகை என்பவள். பட்டத்துத்தேவியைப் பெண் சக்ரவர்த்தி என்றல்; : குலோத். உலா, 31, உரை; "பெண் சக்ரவர்த்தி முகத்திரண்டு, விழியும் புருவமு மாகியிப் போதுன்னை வெல்கின்றவே" (தமிழ் நாவலர் சரிதை, 145.) பள்ளி - இங்கே துயில்.

(பி - ம்.) 'உடனெழுந்து'

41. பொய்யாத (40) பொன்னி - பருவம் பொய்த்தலில்லாத காவிரியாற்றின்; "வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற் காவிரி" (பட்டினப். 5-6.); 'தவாநீர்க் காவிரிப்பாவை' (மணி. 3 : 55.) பூசுரர் - அந்தணர். கன்னித் தளிர் அறுகு - இளைய தளிராகிய அறுகின். அறுகு: மங்கலப் பொருள்; காப்புப் பொருள்களில் ஒன்றுமாம்; "அறு கெடுப்பா ரயனுமரியும்" (திருவா. திருப்பொற் சுண்ணம். 5); "அறுகு வெண் மலரளாய வாசநீர்" (சீவக. 2428.)

(பி - ம்.) 'பொன்னித்துறை மஞ்சனம்' 'புதுமஞ்சனம்' 'முன்னர்'

42. மோலி; மௌலி என்பதன் விகாரம். கறை - நஞ்சு. களம் - கழுத்து.

(பி - ம்.) 'மௌலிப் பிறைக்'

43. செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி—மிக்குயர்ந்த

[அலங்காரங்கள் செய்துகொள்ளுதல்]

44. தானத் துறைமுடித்துச் சாத்துந் தகைமையன
மானக் கலன்கள் வரவருளித்—தேன்மொய்த்துச்

45. சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழு மகரக் குழைதயங்க—வாழும்

46. தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்
சுடர்மணிக் கேயூரஞ் சூழப்—படரும்

47. தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகங் கையில் வயங்கப்—பிணிப்பின்

---

43. செக்கர்ப்பனிவிசும்பு என்றது சிவந்த நிறமுடைமை பற்றி; "செவ்வா னன்ன மேனி" (அகநா. கடவுள். 8); "செக்க ரீசனை யொத்தது" (கந்த. குமாரபுரி. 3.) கனி - கனிபோல் இன்பமளிப்பவர். 42-3 ஆம் கண்ணிகளிற் சிவபெருமானை வணங்கியமை கூறப்பட்டது.

(பி - ம்.) 'செக்கர்த் தனிவிசும்பைத்'

44. தானத்துறை - தானத்தின் கூறுபாடுகள். சாத்தும் தகைமையன - தான் அணிந்து கொள்ளும் பெருமையை யுடையனவாகிய. மானக்கலன்கள் - பெருமையையுடைய ஆபரணங்களை. தேன் - வண்டு.

(பி - ம்.) 'தானத் தொழின்முடித்து' 'தகைமையென', 'தகைமையால்' 'மாநற் கலன்கள்'

45. மலர் முகத்து - தாமரைமலரைப் போன்ற முகத்தில். சொன்மாமகள் - சரசுவதி; 3 : 367. மகரக்குழை தயங்க - மகரகுண்டலம் விளங்க.

46. பார்மடந்தை தன்னுடனே - பூமியாகிய பெண்ணோடு. அரசர் தோளில் பூமி இருப்பதாகக் கூறுதல் மரபு; "மண்முழுது மோங்கிய, கொற்றப் புயமிரண்டாற் கோமா னசளங்கன், முற்றப் பரித்ததற்பின்" (58 9.) கேயூரம் - தோள்வளை. படரும் கீர்த்தி என்க; "கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்தன்" (கம்ப. 1.5 : 59.)

47. கீர்த்திமகள் கையிலிருப்பதாகக் கூறியது கொடையினாற் புகழ் பெறுதல் பற்றி. தணிப்பு - குறைவு. வயங்க - விளங்க. பிணிப்பின் - ஆசையினால்.

(பி - ம்.) 'பணிப்பின்', 'பணிப்பெண்'

48. முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க—உயங்கா

49. அருங்கொற்ற மாக்கு மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடைவாள் வாய்ப்பப்—பொருந்திய

50. அண்ணற் படிவத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைந்து—கண்ணுதலோன்

51. காமன் சிலைவணக்க வாங்கிய கட்டழகு
தாம முடிவணங்கத் தந்தனைய—காமருபூங்

---

48. திரு - லக்ஷ்மி. முந்நீர்: இங்கே திருப்பாற்கடல். மணி - கௌஸ்துபம். உயங்கா - வருந்தாமல்.

(பி - ம்.) 'வயங்கா', 'முயங்கா'

49. கொற்றம் ஆக்கும் அணங்கு: துர்க்கை. துர்க்கை ஆயுதத்தில் இருத்தல்; "தன்னிடத்து உறையும் கொற்றவையுடைய கோபத்தின் மிகுதியினாலே தான் விளக்கும் அச்சம் தோன்றும் நெடிய வேலினையும்" (சிறுபாண். 94, ந.) மருங்கு - இடை. 45 முதல் 49 முடிய உள்ள கண்ணிகளில் சொன்மகள் முதலியவர்கள் அரசன் அங்கங்களில் அமைந்திருப்பதாகக் கூறப்பெற்றுள்ளது.

(பி - ம்.) 'கொற்ற மார்க்கும்' 'வாய்ப்பத் திருந்திய'

50. அண்ணற்படிவத்து - சிறந்த தன்வடிவத்தில். பேரணி; 170. அளவில் வண்ணத்து வனப்பு அமைந்து - அளவில்லாத நிறங்களையுடைய பேரழகு அமைந்து. வனப்பு - பல உறுப்பும் திரண்டவழிப் பெறும் அழகு; தொல். செய்யுள். 235, பேர். கண்ணுதலோன் - சிவபெருமான்.

(பி - ம்.) 'வண்ணப் படிவத்து', 'அண்ணற் பருவத்து' 'வனப் பமைத்து'

51. காமன் சிலை வணக்க - தன் தவத்தைக் கலைக்கும் பொருட்டு மன்மதன் சிலையை வளைக்க. கண்ணுதலோன் வாங்கிய கட்டழகு; கட்டழகு - மிகுதியான அழகு. தாமமுடி வணங்கத் தந்தனைய - கண்ணுதலோன் காமனிடமிருந்து வாங்கிய அவன் கட்டழகை விக்கிரமன் அக் கண்ணுதலோனைத் தன் தாமமுடியினால் வணங்க, அச்சிவபிரான் அவனுக்குத் தந்தருளியது போல. தாமமுடி - மாலையணிந்த கிரீடம்; தாமம்: ஒளியுமாம்.

(பி - ம்.) 'சிலைவாங்க' 'முடிபுனையத்', 'முடிவணங்கித்' 'காமருசீர்க்'

[பட்டத்து யானை]

52. கோலத் தொடும்பெயர்ந்து கோயிற் புறநின்று
காலத் ததிருங் கடாக்களிறு—ஞாலத்துத்

53. தானே முழங்குவ தன்றித் தனக்கெதிர்
வானே முழங்கினுமவ் வான்றடவி—வானுக்

54. கணியு மருப்பு மடற்கையு மின்மை
தணியும் யமராச தண்டம்—தணியாப்

55. பரிய பொருங்கோ டிணைத்துப் பணைத்தற்
கரிய தொருதானே யாகிக்—கரிய

---

52. காமருபூங் கோலத்தொடு - விருப்பம் மருவிய அழகிய அலங்காரத்தோடு. பெயர்ந்து - அலங்கார மண்டபத்தினின்றும் நீங்கி. கோயிற்புறம் - அரண்மனைக்கு வெளியே. காலத்து - தனக்குரிய காலத்தில். கடாக் களிறு - மதத்தையுடைய ஆண்யானை; இஃது அயிராபதம் என்று கூறப்படும்; "பாழி யயிரா பதப்பகடும்", "பரிக்கு மயிரா பதமே", "அயிரா பதமேகீ யன்றே" (272, 289, 304.) அரசர் ஏறும் யானையை அயிராவணம் என்றலும் மரபு; "ஆம்பான் மயிர்வேய்ந் தயிராவண மேறி னானே" (சீவக 3046.)

(பி - ம்.) 'காலத்திருக்கும்'

53. வான் - மேகம்.

(பி - ம்.) 'தனக்கெதிரே', 'தனக்கெதிர' 'வானிற்'

54. அணி - ஓடை முதலியன. மருப்பும் கையும் இல்லாமையால்; கை - துதிக்கை. தணியும் - தன் கோபம் தணியும். யமராஜதண்டம் போன்றது.

(பி - ம்.) 'அடர்க்கையுமன்றித்'

55. பரிய - பருத்த. பணைத்தற்கு - தன்னிடமிருந்து பகைவர் தப்புவதற்கு; "பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்" (தொல். உரி. 41); "அமர்க்க ணுமா னருநிற முள்காது, பணைத்துவீழ் பகழி" (நற். 165 : 1–2.)

(பி - ம்.) 'பெருங்கோ டணைத்துப்', 'பெருங்கோ டிணைத்துப்' 'பூணைத்தற் குரிய' 'யாகிப் பெரிய'

56. மலைக்கோ டனைத்து மடித்திடியக் குத்தும்
கொலைக்கோட்டு வெங்கால கோபம்—அலைத்தோட

57. ஊறு மதந்தனதே யாக வுலகத்து
வேறு மதம்பொறா வேகத்தால்—கூறொன்றத்

58. தாங்கிப் பொறையாற்றாத் தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுதும்—ஓங்கிய

59. கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதாம்—உற்ற

60. வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப்—பெருக்கத்

---

56. மலைக்கோடு - மலையின் சிகரங்கள். அலைத்து ஓட. கால கோபம் - யமனது கோபமே ஓர் உருவெடுத்தது போன்றது; முன் 54 யமராச தண்டம் என்றதும் நோக்குக.

(பி - ம்.) 'மலைக்கோ டிணைத்து', 'மலைக்கோ டடித்து', 'மலைக் கோ டடைய'

57. தனது என்றது விக்கிரம சோழனது பட்டத்து யானையை. வேறு மதம் பொறா வேகத்தால் - வேறு யானைகளின் மதத்தைப் பொறுக்காத கோபத்தால்; யானை வேறுயானையின் மதங்களைப் பொறாமை: "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாற, காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாகக், காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" (கம்ப. 1. வரைக் காட்சி. 6.) கூறு ஒன்ற - தம்முடைய கூறு பொருந்த.

(பி - ம்.) 'மதன்றனதே' 'மதம் பெறா' 'கூறொன்றால்'

58. பொறையாற்றா - சுமத்தல் முடியாத. தத்தம் பிடர் - திக்கு யானைகளின் கழுத்து. பொது நீக்கி : 32. மண்முழுதும் புயமிரண்டால் பரித்ததற்பின் என இயைக்க; 288–9.

(பி - ம்.) 'பொறை நீக்கி' 'வாங்கிப் பொறையை மனமுழுதும்'

59. அகளங்கன் : 256. பரித்தல் - தாங்குதல்.

(பி - ம்.) 'பரிப்பதற்கு முன்புதாம்'

59–60. முன்புதாம் உற்ற வருத்தம் - அகளங்கன் உலகத்தைத் தாங்குவதற்கு முன்பு தாமடைந்த வருத்தம். மாதிரத்து வேழம் - திக்கு யானைகள். கடாம் - மதம். மதம் பொறாவேகத்தால் சுவடு பிடித் தோடி (61.) என்று கூட்டுக.

(பி - ம்.) 'வருத்த மதுமறந்து', 'வருத்த முறமறந்து' 'கடாந் திளைத்துப்'

61. துவற்று மதுரச் சுவடுபிடித் தோடி
அவற்றி னபரங்கண் டாறி—இவற்றை

62. அளித்தன னெங்கோமா னுதலா வின்று
களித்தன வென்றுவக்குங் காற்று—நெளித்திழிய

63. வேற்றுப் புலத்தை மிதித்துக் கொதித்தமரில்
ஏற்றுப் பொருமன்ன ரின்னுயிரைக்—கூற்றுக்

64. கருத்து மயிரா பதநின் றதனை
எருத்தம் பிடிபடியா வேறித்—திருத்தக்க

---

61. துவற்றும் - தூற்றும்; "தூஉ யன்ன துவலை துவற்றலின்" (மலைபடு. 361.) மதுரச்சுவடு - இனிமையான மதத்தின் சுவட்டை. சுவடு என்றது மணத்தை. அபரம் கண்டு - தோற்றோடினமையால் அவற்றின் பின்புறத்தைப் பார்த்து; அபரம்; சீவக. 806, 2154. ஆறி - கோபந்தணிந்து.

(பி - ம்.) 'சுவடு மிதித்' 'னவரங்கண்'

62. இவற்றை அளித்தனன் என்றது திக்கு யானைகள் சுமந்த உலகைத் தானொருவனே தாங்கி அவற்றின் வருத்தத்தைத் தீர்த்தமை பற்றி. களித்தன: களித்தவை திசையானைகள். யானைக்குக் காற்று உவமை: முருகு. 82, அடிக்.

(பி - ம்.) 'உவக்கும் காலி'

63. நெளித்தலும் இழிதலும் வேற்றுப் புலத்தின் தொழில். வேற்றுப் புலத்தை - பகையரசரது நாட்டை. பொரும் மன்னர் - போர் செய்யும் பகையரசரது.

(பி - ம்.) 'கொதித் தமருன்' 'பொதுமன்னர்'

64. கூற்றுக்கு அருத்தும் - யமனுக்கு உண்பிக்கும். அயிராபதம்: பட்டத்து யானையின் பெயர்; 52, குறிப்.; 'அகளங்கா வுன்ற னயிராபதத்தின், நிகளங்கால் விட்ட நினைவு' (தமிழ் நாவலர் சரிதை, 126.) பிடிபடியா - பெண்யானை படியாக உதவ. நின்றதனை - வந்து நின்றதை. கோயிற்புறம் நின்று அதிரும் களிறுகிய (52), அயிராபதம் நின்றதனைப் பிடிபடியா ஏறி என இயைக்க;

(பி - ம்.) 'அயிராவதம்' 'இருக்தும் புடிபிடியா', 'இருத்திப் பிடிபடியா'

65. கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவரியிளங் காலசைப்ப—ஒற்றை

66. வலம்புரி யூத வளைக்குல மார்ப்பச்
சிலம்பு முரசஞ் சிலம்பப்—புலம்பெயர்ந்து

67. வாட்படை கொட்ப மறமன் னவர்நடுங்கக்
கோட்புலிக் கொற்றக் கொடியோங்கச்—சேட்புலத்துத்

[உடன் வருவோர்]

68. தென்னரு மாளுவருஞ் சிங்களருந் தேற்றுதகை
மன்னருந் தோற்க மலைநாடு—முன்னம்

---

65. கொற்றக் கவிகை - அரசுரிமைக்குரிய குடை. இளங்கால் அசைப்ப - மெல்லிய காற்றை வீச. ஒற்றை வலம்புரி : 256.

(பி - ம்.) 'கவரிகளின்'

66. வலம்புரி ஊத அதன் பின் மற்ற சங்குகள் ஊதப்படுதல் : குலோத். உலா, 84; இராசராச. 49. "ஒருவலம்புரி தழங்கொலி முழங்கியெழவே, உடன் முழங்கு பணிலம் பலமுழங்கி யெழவே" (கலிங்கத். 283.) சிலம்புமுரசம் - ஒலிக்கும் மூன்று முரசங்கள். சிலம்ப - ஒலிக்க. புலம்பெயர்ந்து - தம்முடைய நாட்டைவிட்டு நீங்கி.

(பி - ம்.) 'வளைக்குலங்கள்' 'புலம்பயில்', 'புலம்பெயர்', 'புலம்பெயர'

67. வாட்படை கொட்ப - வாளையேந்திய சேனை சுற்றிவர. கொடி ஓங்க - கொடி மேலாக விளங்க. சேட் புலத்து - நெடுந்தூரத்திலுள்ள.

(பி - ம்.) 'வாட்படை தோற்ற' 'னவர் நெருங்க'

68. தென்னர் - பாண்டியர். மாளுவர் - மாளுவதேசத்தவர். சிங்களர் - இலங்கையரசர். உதகை மன்னர் - குடகு நாட்டரசர்; குலோத். உலா, 24; இராசராச. 21; கலிங்கத். 201. மலைநாடு - சேரநாடு. தென்னர் முதலியோர் சேரனுக்குத் துணையாயிருந்த அரசர் போலும்.

(பி - ம்.) 'தென்னவரு மாளவருஞ் சிங்களருங் கொங்கணத்து, முன்னவருந்' 'மலை நாடர்', 'மலை நாட்டார்'

69. குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்—பலர்முடிமேல்

70. ஆர்க்குங் கழற்கா லனகன் றனதவையுள்
பார்க்கு மதிமந்த்ர பாலகரிற்—போர்க்குத்

71. தொடுக்குங் கமழ்துமபை தூசினொடுஞ் சூடக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனும்—முடுக்கரையும்

---

69 குலைய - அழியும்படி. பரணி மலைய - பரணியென்னும் நூலைச் சூடும்படி; மலைதல் : சூடுதல், 'பாணர் தாமரை மலையவும்' (புறநா. 12); 'வேங்கையொடு தொடுத்த விளங்கு விறன்மாலை, மேம்பட மலைதலும்' (சிலப். 25 : 139.) தொண்டைமான் : கருணாகரத் தொண்டைமான்; முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில் இவன் கலிங்கம் எறிந்தவன். இவனே விக்கிரம சோழன், ஆட்சியிலும் இருந்து, பாண்டிமண்டலம், ஈழமண்டலம், மலைநாடு என்னும் சேரமண்டலம், மாளவதேயம் இவற்றை வென்று சோழ ஆட்சிக்கு உட்படுத்திய பெரும் போர்த்தலைவன்; இவன் பிற்காலத்தில் பாண்டி மண்டலத்துப் பிரதிநிதியாக இருந்தவன் என்று அறியப்படுகிறது; S. I. I. 262 of 1929. பலர் - பல அரசர். முடிமேல் - தம்முடைய முடிமேல்.

(பி - ம்.) 'பலமுடிமேல்'

70. ஆர்க்கும் கழற்கால் - சூடிக்கொள்ளும் கழலையணிந்த காலையுடைய. அனகன் - பாவமற்றவன் : விக்கிரமசோழன்; 299, 306. மதிமந்த்ர பாலகரில் - இயற்கையறிவையுடைய மந்திரிமாருள்.

(பி - ம்.) 'கழற்கா லபயன்' 'பார்க்குமதி மந்திர பாலகரிற்'

71. தூசு - ஆடை. போருக்குச் செல்வோர் புதிய ஆடை உடுத்தல்; "வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇ.........செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (புறநா. 279 : 8-11.) முனையர்கோன் - முனைய தரையன். ஆனை வாரி தொண்டைமண்டல முனைய தரைய பல்லவ ராயன் என்றொரு அரசியல் அதிகாரி, விக்கிரமசோழன் ஆட்சியில் இருந்தவன்; S. I. I. 378 of 1913. இவனைப்பற்றிய மற்றை வரலாறுகளைத் : தமிழ் நாவலர் சரிதையிற் காண்க. முடுக்கர் - கன்னடர்.

(பி - ம்.) 'தொடுக்கப் புனைதும்பை', 'தொடுத்துச்', 'சூடிக், கொடுத்த', 'கொடுத்துப் புனைமுனையர்'

72. கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையும்
கொங்கரையு மேனைக் குடகரையும் - தங்கோன்

73. முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச்சோழ கோனும் - சனபதிதன்

74. தோளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளு வலியு மதியமைச்சும் - நாளுமா

75. மஞ்சைக் கிழித்து வளரும் பொழிற்புரிசைக்
கஞ்சைத் திருமறையோன் கண்ணனும் - வெஞ்சமத்துப்

---

72. கங்கர்: இவர்களுடைய ராஜதானி தலைக்காடு; இப்பரம்பரையில் வந்தவனே நன்னூல் செய்வித்த சீயகங்கன். மாராட்டர்: 25. கொங்கர் - கொங்கு நாட்டிலுள்ளவர். குடகர் - குடக நாட்டார்.

(பி - ம்.) 'மாருட்டரையும்'

73. முனியும் பொழுது - கோபிக்கும் பொழுது. முரி புருவத்தோடு குனியும் - வளைகின்ற புருவத்தோடு தானும் வளையும்; குனிதல் சிலையின் தொழில். சனபதி - சோழர்களுக்குப் பெயர்; நரபதி, சனநாதன் என்பனபோல; தக்க. 9, உரை. சோழகோன்: இவன் விக்கிரம சோழனது சிற்றரசர்களுள் ஒருவன்; சிறந்த போர் வீரனுமாவன்; (S. I. I. விருத்தாசலம் சாஸனம்.) 63 of 1918.

(பி - ம்.) 'முரிபுருவக் கோடு'

74. தோள் - கை; "தோளுற்றொர் தெய்வந் துணையாய்த்துயர் தீர்த்த வாறும்" (சீவக. 10) சுற்றம் - மந்திரச் சுற்றம். மதியமைச்சு - இயற்கை யறிவையுடைய மந்திரி. நாளும் ஆம் கண்ணன் என இயைக்க.

(பி - ம்.) 'வாளும் புலியும்' 'மதியமைத்து' 'நாளுமாய்'

75. மஞ்சை - மேகத்தை. வளர்தல் பொழிலின்தொழில். புரிசை-மதிலையுடைய. கஞ்சை-கஞ்சாநகரம் என்று இப்பொழுது வழங்குகின்றது; இது கஞ்சாறு நகரம் என்பதின் மரூஉ போலும். அங்ஙனமாயின், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான மானக்கஞ்சாறர் என்பார் இவ்வூரினர் என்று தெரிகிறது. கஞ்சை - கஞ்சாறு; 'மலைசெய் மதிற் கஞ்சை மானக்கஞ் சாறெனும் வள்ளலே' (நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி: 13.); கஞ்சாறு நகரம்; S. I. I. 139 of 1926. வெஞ்சமத்து - கொடிய போரில்.

(பி - ம்.) 'பெரும்புரிசை' 'வெஞ்சமரில்'

76 புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப் - புல்லார்வம்

77. தாங்கு மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கு வரிசிலைக்கை வாணனும் - வேங்கையினும்

78. கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும் - நாடா

---

76. புல்லாத மன்னர் - பகையரசரது. ஒல்லாத கூற்றம் - முன்பு அவ்வரசரைப் பார்த்தற்கும் இயலாத யமன்.

(பி - ம்.) 'ஒல்லார்தம் கூற்றம்' 'புல்லார்தம்'

77. புல்லார்வம் தாங்கும் - நீடித்திராத அன்பைத்தாங்கிய. மடமகளிர் - பகையரசருடைய தேவியர். குழைவாங்க - காதணியைக் கழற்ற; மிக்க ஆர்வமுடைய பத்தினி மகளிர் தம் கணவர் இறப்பத் தாமும் உடனே இறப்பர் ஆதலின் இதனைப்புல்லார்வம் என்றார்; காதணியும் மங்கலநாணைப் போன்ற சிறப்புடையதாதலின், கணவனையிழந்த மகளிர் அதனையும் களைதல் மரபு; குலோத். உலா, 4; "மாற்றரசர் மணிமுடியுந் திறலுந்தேசும் மற்றவர்தங் காதலிமார் குழையுந் தந்தை, காற்றளையு முடன்கழல வந்து தோன்றி" (பெரிய திருமொழி 4. 4: 1.) வாங்கும் - வளைக்கும். வாணன் - சுத்தமல்லன் முடிகொண்டான் அல்லது வாண கோவரையன் என்னும் பெயருடைய தலைவன் என்பர்; இவன் கருணாகரத் தொண்டைமானுடன் சென்று கலிங்கப்போர் நடத்திய படைத்தலைவருள் ஒருவன்; கலிங்கந். காளிக்குக். 54. இவனது விசேடச் சிறப்புக்களை, ஸ்ரீ. மு. ராகவ ஐயங்கார், எழுதிய கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி. பக். 23-24, பார்க்க. இவன் மனைவி ஏலவார்குழலி என்பவன்; இவள், கி. பி. 1120-இல், திருவரத்துறைக் கோயிலில் நுந்தாவிளக்கு வைத்தாள்; சோழர்கள், Vol. 2; பக். 69. வேங்கை - வேங்கிநாடு.

(பி - ம்.) 'மடமாதர்'

78. கூடார் - பகைவரது. விழிஞம்: மலை நாட்டிலுள்ள ஊர். கொல்லம்: 87. கொங்கத்து - கொங்க ராஜ்யத்து. இரட்டம் - இரட்டபாடி; ராஷ்டிரகூடமென்பர். ஒட்டம் - ஒட்ரதேசம். இராடத்தும் என்ற பாடத்திற்கு, லாடதேசம் என்று கொள்க.

(பி - ம்.) 'ஓடா விராடத்தும்'

79. தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும் - கடியரணக்
80. செம்பொற் பதணஞ் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும் - வெம்பிக்

79. காலிங்கர்கோன் - இவன் நரலோக வீரன்; அரும்பைகிழான் பொன்னம்பலக் கூத்தன் என்றுங் கூறப்பெறுவன். இவன் செய்த திருப்பணிகளும் வீரச செயல்களும், சிதம்பரத்திலும் திருவதிகையிலு முள்ள சாஸனத் தமிழ்ப்பாட்டுக்களால் விளங்கும். இவன் மணவில் காவலன். இவன் முதற் குலோத்துங்கனது தலைமை அமைச்சனாகவும், சிறந்து விளங்கிப் பல புகழும் பட்டங்களும் எய்தியவன்; சிதம்பரம், திருவதிகை (S.A.) முதலிய ஸ்தலங்களில் பல திருப்பணிகள் செய்தவன்; இவன் முதற் குலோத்துங்கனது சேரபாண்டியப் போர்களிற் படை தாங்கிச் சென்று வெற்றி பெற்றவன்; S. I. I. 405 of 1930 & 374 of 1908. கடியரணம் - காவலையுடைய அரண்.

(பி - ம்.) 'அடியெடுத்த'

80. பதணம் - மதிலுள் மேடை. செறி இஞ்சி - நெருங்கிய மதில். காடவர் பல்லவருள் ஒருவகையார். வெம்பி - கோபங்கொண்டு; விலக்கிய (81) என்பதனோடு இயையும். விக்கிரம சோழன் தந்தையாகிய முதற் குலோத்துங்கன் தேவியருள், காடவன்மாதேவி என்று ஒருத்தி பெயர் காணப்படுகின்றது; S. I. I. 111 of 1912. அவள் இக்காடவன் மகள் போலும். புகழேந்திப்புலவர் செஞ்சியர்கோன் ஒருவன் மீது, *ஒருகலம்பகம் பாடியதாகத் தொண்டைமண்டல சதகம் 63-வது பாட்டால் தெரிகின்றது. அக் காடவர் கோனுக்குக் கொற்றந்தை என்பது இயற் பெயர் என்பதும் அப்பாடலால் அறியலாம். இனி, புகழேந்தியார் ஒட்டக் கூத்தருக்குச் சமகாலத்தவர் ஆதலின், அக்காலத்துச் செஞ்சியர் கோனாக இருந்த காடவன், விக்கிரம சோழன் காலத்தும் விளங்கிய அவனது சிற்றரசர்களுள் ஒருவன் போலும்.

(பி - ம்.) 'பதணச் செறியிஞ்சி' 'கடாயானைக் காடவனும்'

* இக்கலம்பகப் பாடல்களுள் ஒன்றென,
"வையும் படியென்னுங்கொற்ற நகோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண ணிடைமடவா யகிலின் றூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே",
என்ற செய்யுளை, மகாவித்வான். ஸ்ரீ. ரா. ராகவ ஐயங்கார் அவர்கள், செந்தமிழ்த் தொகுதி II. பக். 401-இல் குறிப்பிட்டுள்ளார். இவ்வரலாறு தொண்டைமண்டல சதகம், 17-வது செய்யுளிலுங் காண்க.

81. கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில்
விலக்கிய வேணுடர் வேந்தும் - தலைத்தருமம்

82. வாரிக் குமரிமுதன் மந்தா கினியளவும்
பாரித் தவனனந்த பாலனும் - பேரமரில்

83. முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலும்
மட்டித்த மால்யானை வத்தவனும் - அட்டையெழக்

---

81. கலியதனை - கலியின் கொடுமையை. வேணுடு - திருவாங்கூர் இராச்சியத்தின் தென் பகுதி ; 'திருவடிராச்சியம்' என வழங்குமென்பர். தலைத்தருமம் - சிறந்த தருமத்தை.

(பி - ம்.) 'வஞ்சக் கலியாணர்,' 'வஞ்சிக் கலியானைப் போரில்' 'வஞ்சிக் களியரணர்', 'வஞ்சிக் களியரணை' 'தலைத்தரும வாரி'

82. வாரிக்குமரி முதல் - குமரிக்கடல் முதல். மந்தாகினியளவும் - கங்கை நதி வரையிலும். பாரித்தவன் - நிறைத்தவன். அனந்தபாலன் : இவன் சேனுபதி பேராவூர்நாட்டு இளங்காரிக் குடையான், சங்கரனம் பலங்கோயில் கொண்டான் அனந்தபாலன் என்னும் பெயருடைய வன் என்றும், இவனுல் திருவாவடுதுறையில் அறச்சாலைப்புறமாகச் சில நிலங்கள் விடப்பட்டன என்றும் தெரிகிறது ; சோழர்கள், Vol. II. 8 Part 1, பக். 70 ; S. I. I. 158 of 1925.

(பி - ம்.) 'பாரமரில்', 'ஆரியரில்', 'ஆரமரில்'

83. முட்டி - தாக்கி. வடமண்ணை - வடக்கேயுள்ள 'மாண்ய கேதம்' என்னும் ஊர் என்பர் ; கலிங்கத். 202. மும்மதில் - புறமதில், இடைமதில், உள் மதில் ; பதிற். 16, உரை. மட்டித்த : இது மர்த்தித்த என்பதன் சிதைவு ; வர்த்தனை, வட்டணை என வந்தாற் போல்வது. மதிலை மட்டித்தது யானையைக் கொண்டு ; இது 'ஊசெரித்த நெருப்பனை' (சிற். 137, பேர்.) என்பதைப் போன்றது. வத்தவன் - வத்த நாட்டரசன். அட்டை எழ - கவந்தங்கள் எழுந்து ஆட ; தொல். புறத். 16, ந

(பி - ம்.) 'முட்டிப் பொருத வடமன்னர்'

84\. காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் சேவகனும் - பூதலத்து

85\. முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய காரானைக் காவலனும் - ஓட்டிய

84\. காதி - கொன்று. கட்டரணம் - மிக்க காவலையுடைய கோட்டை ; கட்டரணம் வல்லவன் ; தக்க. 237. அடிக். சேதித்திருநாடர் சேவகன் - மலையமான் : சேதிநாடு திருக்கோவலூரைத் தலைநகரமாகக் கொண்ட மலைநாடு ; மலையமான்களுக்கும் சோழர்களுக்கும் சங்ககால முதற் கொண்டே நட்பிருந்து வந்ததென்பது 'சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் பொருத வழிச் சோழர்க்குத் துப்பாகிய தேர்வண் மலையனை' (புறநா. 125.) என வரும் தொடரால் அறியப்படும். தென்னார்க்காடு ஜில்லா கீழூர் என்னும் இடத்தில் விக்கிரம சோழன் ஆட்சி 5-ஆம் ஆண்டில் மலையமான் விக்கிரம சோழ சேதிராயன் என்னும் ஓர் அதிகாரியின் பெயரா குறித்த சில சாஸனங்கள் காணப்படுகின்றன. S. I. I. Vol. VII. பக். 915 ; 349 of 1921.

(பி - ம்.) 'காதித்திருநாடர்' 'காட்டரணம்' 'திருநாடர் செல்வனும்'

85\. முட்டிய-போர் செய்த. சடைகட்ட-தப்பியோடுதற்கு முனிவர் போலத் தோன்றச் சடையைக் கட்டிக்கொள்ளும்படி ; "செங்குட்டுவன் றன் சினவலைப் படுதலும், சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர், பீடிகைப் பீலிப் பெருநோன பாளர், பாடு பாணியர் பல்லியத் தோளினர், ஆடு கூத்த ராகி யெங்கணும், ஏந்துவா ளொழியத் தாந்துறை போகிய, விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர" (சிலப். 26 ; 224-30.) ; தோற்ற கலிங்கவீரர், தப்பிப் பிழைக்கத் தவசிகள் போல மாறு வேடம் புனைந்து சென்றமை காண்க ; கலிங்கத். போர் பாடியது : 63-6. கழல் கட்டிய என்றது, போர்தோறும் வீரக்கழல் கட்டிக்கொள்ளுதல் வழக்க மாதல் பற்றி ; 'காலன புனைகழலென்பது, வீரத்துக்கும் வென்றிக்கும் கட்டின ; போர் தோறும் வென்று கட்டின எனவுமாம்' (புறநா. 100 ; 1, உரை.) கழல் கட்டிய : "கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை, நெடுங்கடைய நோரார் நிரை" (பு. வெ. 2.) காரானை : இப்பெயருள்ளது கசசிபூர் நாட்டைச் சேர்ந்த ஓர் ஊரென்று காஞ்சீபுரம் சாஸனம், 468 of 1919 கூறுகின்றது. பிற்காலத்தில் 'காரானை விழுப்பரையர்' என்பா ரொருவர் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய வாயிற் புலவராக விளங் கியவரென்பது பாண்டி நாட்டுப் பெருச்சிகோயில் என்ற ஊரிலுள்ள சிவாலயத்துச் சாஸனத்தால் அறியப்படுகின்றதென்பர் ; (சாஸனத் தமிழ்க் கவிசரிதம், 105.) 'காரானை விழுப்பரையன் மடல்' என்னும் நூல் ஒன்றும் உண்டு. ஓட்டிய - வஞ்சினம் கூறிய.

(பி - ம்.) 'மொய்கழல்கால் கட்டிய காரானை காவலனும்'

86. மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை துணித்த வதிகனும் - மீனவர்தம்

87. கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட கொடைநுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனும் - மோட்டரணக்

88. கொங்கைக் குலைத்துக் குடகக் குவடிடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனும் - அங்கத்து

---

86. மான அரசர் - பெருமையுடைய அரசர். இரிய - கெட்டோடும்படி. கலிங்கம் யானையிற் சிறந்ததென்பர். அதிகன்: இவன் நெடுமானஞ்சியின் பரம்பரையில் வந்தவன் போலும். இவனும் கலிங்கப்போரில் ஈடுபட்ட போர்ப்படைத் தலைவருள் ஒருவன். மீனவர்தம் - பாண்டியருடைய.

87. கோட்டாறு: இவ்வூர் இக்காலத்தில் நாகர்கோவில் என வழங்கும். நுளம்பனாகிய வல்லவன். நுளம்பன்; இவன் கொடை நுளம்பன் என விசேடிக்கப் பெறுவதால், ஈகையிற் சிறந்தவனாகவேண்டும். இப்பெயருடையான் ஒருவன் தக்கயாகப்பரணியில்; "கட்டரணம் வல்லவனை நடைகொண்டார் காவிரிப்பூம், பட்டினமும் பாடாதார் பசியன்ன பசியினமே" (237) என்று கூறப்படுகிறான். வாள்தார் - வாளாலுண்டான தழும்பின் மாலையையுடைய; வாட்டு ஆர் எனப்பிரித்து, வாட்டுதல் ஆர்ந்த என்னலுமாம்; வாள்தார் - வாள்வீரர் அடங்கிய படை என்னலும் பொருந்தும்; தார் - சேனை; "தாரொடுங்கல் செய்யாதது" (கம்ப. 2: 2: 13.) வாட்டானை - வாட்படை; 2: 379. மோடு - பெருமை. கோட்டரணம் என்ற பாடத்துக்கு மலைகளாகிய இயற்கையரணையுடைய என்று கொள்க; 'கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி என்றது மலையுள்ள இடங்களிலே அம்மலைதானே மதிலாகவும் மலையில்லாத இடங்களில் மதிலே அரணாகவும் இவ்வாறு மலையொடு மாறுபட எடுத்த வளைந்த இடத்தையுடைய புறமதில் என்றவாறு' (பதிற். 14: 1, உரை.)

(பி - ம்.) 'குடைநுளம்பன்', 'குடனுளம்பன்' 'வாட்டா மதயானை' 'கோட்டரணக்'

88. கொங்கை-கொங்குநாட்டை. குடகக் குவடு-குடகு நாட்டிலுள்ள மலைச் சிகரங்களை. இடித்தல் யானையின் தொழில். திகத்தன்-த்ரிகர்த்தன்; 'வெண்ணெய்த் திரிகர்த்தன்' என்னுமொருவன் பெயர் கம்பராமாயணத்தில் வந்துள்ளது. அங்கத்து - அங்கநாட்டையுடைய.

(பி - ம்.) 'குடகு குவடொடித்த', 'குடகைக் குவட்டிடித்த', 'குடகக் குவடடித்த' 'த்ரிகர்த்தனும்' 'அங்கவன்பின்'. 'அங்கவனும்

89. வல்லவனுங் கோசலனு மாளுவனு மாகதனும்
வில்லவனுங் கேரளனு மீனவனும்—பல்லவனும்

90. என்னும் பெரும்போ ரிகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்டப்—பன்மணிசேர்

[குழாங்கள்]

91. சோதி வயிர மடக்குஞ் சுடர்த்தொடியார்
வீதி குறுகுதலு மேலொருநாள்—மாதவத்தோன்

---

89. வல்லவன்: வல்லபன் என்பதன் மரூஉப் போலும்; வல்லபன் - சாளுக்கியன். கோசலன் - கோசலநாட்டரசன். மாகதன் - மகதநாட்டரசன்; "பூசதனாகிய வன்றே பகைவரெல்லாம் போற்றவளர்ந் துலகாளப் புனைந்த மௌலி, மாகதனும் வில்லெடுத்து" (வி-பா. திரௌபதி மாலையிட்ட. 52.) வில்லவன் கேரளன் என்பவர் சேரரில் இருவகையார் போலும். பல்லவன் இரண்டாம் இராசராசன் காலத்துக் கூறப்படுகின்ற குளத்தூரார் குடிப்பிறந்த பல்லவராயனை நம்பிப்பிள்ளையின் முன்னோன் போலும்; தக்க. 236, உரை.

90. வேந்தர் - முடியுடையரசர். மண்டலிகர் - சிறுமண்டலங்களையாளும் குறுநில மன்னர்.

(பி - ம்.) 'பெரும் பேரிகல்'; 'பெரும்பெயர்க ளெண்ணிலி மண்டலிகர்', 'பெரும்பெயரி வியல்வேந்தர்' 'பன்மணிச் சோதி'

91. சோதி - ஒளி. வயிரத்தைத் தன் ஒளியினால் அடக்கும்; அடக்குதல் தொடியின் தொழில். தொடியாரென்றது பரத்தையரை. மேலொருநாள் - கிருஷ்ணவதாரத்தில். மாதவத்தோன் - நாரதமுனிவன். இக்கண்ணி, இ. வி. பாட்டியல், 98, மேற்.

(பி - ம்.) 'அடர்க்குஞ் சுடர்க்குழையார்'. 'சுடர்க்கொடியார்' வீதியிலே தோன்றுதலும்'

92. சார்ந்த பொழுதனகன் றன்னை யறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன்றும் - ஏந்திப்
93. பரக்குங் கலையல்குற் பாவையரே யாணை
புரக்குந் திருநாடு போன்றும் - வரக்கருதா
94. ஏனை முனிக்குறும்பு கொல்ல விகன்மாரன்
சேனை திரண்ட திரள்போன்றும் - கானலங்
95. கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம்போன்றும்
கொண்டலின் மின்னுக் குழாம்போன்றும் - மண்டும்

---

92. அனகன் - கண்ணபிரான். பூந்துவரை - அழகிய துவாரகையிலுள்ள. இக் கண்ணியிலுள்ள வரலாறு, பாகவதம், 10-ஆம் கந்தம், பதினாறுயிரம் திருவிளையாட்டுரைத்த அத்தியாயத்தால் விளங்கும். ஏந்தி - உயரவேண்டிய இடம் உயர்ந்து. 'அனங்கன் றன்னை' என்ற பாடத்திற்கு அனங்கனுடைய அம்சமாகிய பிரத்யும்னன் தன்னை' என்றுபொருள் கொள்ளவேண்டும்; பிரத்யும்னன் காணமற் போயிருந்து பின்னர் வந்த போது, துவாரகாபுரி அந்தப்புரத்து, உருக்குமிணிதேவி முதலிய மடந்தையர் பெருமகிழ்வுற்ற செய்தி; ஸ்ரீ பாகவதம், தசம ஸ்கந்தம், அத்யாயம், 55.

(பி - ம்.) 'அனங்கன் றன்னை'

93. கலை - மேகலை; துகிலுமாம். பாவையரே - பெண்களே. ஆணை புரக்கும் - ஆணை செலுத்தும். திருநாடு: "எண்ண லாகத்துப் பெண்ணுல கேய்ப்ப", "விண்ணுறை தேவரும் விழையும் போகத்துப், பெண்ணுறை யுலகம்", "பொன்னியற் புரிசையோர் பெண்ணுறை பூமி" (பெருங். I. 42 : 151, 3 14 : 3-4, 24 : 58); இதனை மணித் தீவம் என்பர். வரக் கருதா - தன் வழியிலே வரக் கருதாத.

(பி - ம்) 'தானைபுரக்கும்' 'வரற்கரிதாம்'

94. முனிக் குறும்பு - முனிவர்களாகிய பகைவர்களை. இகல்மாரன் - மாறுபாட்டையுடைய மன்மதன். சேனை - மகளிர்; "செல்வப்போர்க் காமன் சேனை செம்மன்மே லெழுந்த தன்றே" (சீவக. 458.) கானல் - கடற்கரைச் சோலையிலுள்ள.

(பி - ம்.) 'இயன்மாரன்'

95. கண்டல் மணற்குன்றத்து - தாழையையுடைய மணற்குன்று களில். அன்னக்கணம் - அன்னப் பறவைகளின் கூட்டம்; [கம்ப. 4. பம்பைப். 4.] கொண்டல் - நீருண்டமேகம். மின்னுக்குழாம் - மின்னலின் தொகுதி.

96. திரைதொறுந் தோன்றுந் திருக்குழாம் போன்றும் [ராய்
வரைதொறுஞ் சேர்மயில்கள் போன்றும் - விரைவின
97. இந்து நுதல்வெயர்ப்ப வெங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும் - வந்தீண்டி
98. உத்தி சுடர வொளிமணிச் சூட்டெறிப்பப்
பத்தி வயிரம் பரந்தெறிப்ப - முத்தின்
99. இணங்கு மமுத கலசங்க ளேந்தி
வணங்கு தலையினராய் வந்து - கணங்கொண்டு
100. பார்க்குங் கொடுநோக்கு நஞ்சுறைப்பக் கிஞ்சுகவாய்
கூர்க்கு மெயிறுவெறுங் கோளிழைப்ப - வேர்க்க

---

96. திரை - அலை. வரை - மலை. விரைவினராய் - இவனைக் காண வேண்டுமென்னும் இராக வேகத்தை யுடையவராய். வரையில் மயில் சேர்தல். 253; தூளா. அரசியல். 270.

(பி - ம்.) 'திரைதோறும்' 'வரைதோறும்'

97. இந்து நுதல் - பிறையைப்போன்ற நெற்றி. நுதல் வியர்த்தல்: 'பொறிநுதல் வியர்த்தல்' என்னும் மெய்ப்பாடு. ஈண்டி - நெருங்கி.

(பி - ம்) 'திசையெங்கும்'

98. உத்தி - தெய்வஉத்தி என்னும் ஆபரணம். சுடர-பிரகாசிக்க. சூட்டு - உச்சிக்கொண்டை. எறிப்ப - பிரகாசிக்க. பத்தி - வரிசை. முத்தின் - முத்துக் கச்சோடு.

(பி - ம்.) 'சூட்டெரியப்'

99. இணங்கும் - பொருந்திய. அமுதகலசங்கள் - நகில்கள்; தக்க. 41. உரை. வணங்கு தலையினராய் வந்து என்றது நிலத்தை நோக்கி வருதல்பற்றி.

(பி - ம்.) 'தலைவிரிய', 'தலையிரிய'

100. கொடுநோக்கு - கொடுமையான பொதுநோக்கம். நஞ்சு உறைப்ப - விஷத்தைத் துளிப்ப. மகளிர் விழிக்கு நஞ்சு: தக்க. 28. கிஞ்சுகவாய் - முள்ளு முருங்கைப் பூவைப்போன்று சிவந்த வாயில். வெறுங் கோள் இழைத்தல் என்றது கருத்து ஒன்றுமில்லாமல் சிரித்தல்பற்றி.

(பி - ம்.) 'கொடுநோக்கம்' 'எயிறுபெருங்', 'எயிறுபெறுங்' 'எயிறுபற்றுங்', 'எயிறுபற்றுங்' 'இழைப்பப் போக்க'

101. வரைகொ ணெடுமாடக் கீணிலையின் மல்கி
உரக வரமகளி ரொப்பார் - விரல்கவரும்
102. வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்
பாணி பெயர்ப்பப் பதம்பெயர்த்துச் - சேணுயர்
103. மஞ்சிவரும் வெண்பளிக்கு மாடத் திடைநிலையில்
விஞ்சையர் மாத ரெனமிடைவார் - அஞ்சனக்
104. கண்ணிற் சிறிது மிமையாத காட்சியும்
மண்ணிற் பொருந்தா மலரடியும் - தண்ணென்ற
105. வாடா நறுஞ்செவ்வி மாலையுங் கொண்டழகு
வீடா நிலாமுற்ற மேனிலையிற் - கூடி

---

101. வரைகொள் - மலையின் தன்மையைக் கொண்ட. கீழ்நிலை - கீழேயுள்ள தளம். உரகவரமகளிர் - மேன்மையான நாகலோகத்து மகளிர். விரல் கவரும் - விரலினால் விரும்பி வாசிக்கும்.

(பி - ம்.) 'கீணிலைமேல்', 'கீழ்நிலையின்'

102. வீணை வேறு யாழ் வேறு; "வேய்ங்குழல் விளிகொ ணல்யாழ் வீணையென் றினைய நாண" (கம்ப. 4 : அரசியற். 3.) விசிமுழவு - வாராற்கட்டிய மத்தளம். பாணி பெயர்ப்ப-தாளத்தைப் பெயர்த்துச் செய்ய. பதம் பெயர்த்து-சதி மிதித்து. சேணுயர்-ஆகாயத்தினுயர்ந்த.

(பி - ம்.) 'பாணியும் பொறப்ப', 'பாணி பெயரப்' 'நீணிலா'

103. மஞ்சு - வெண் மேகம். இவரும் - எறி விளங்குகின்ற. விஞ்சையர் மாதர் - வித்தியாதர மகளிர். வெண்பளிக்கு மாடத்தில் நிற்றலால் வித்தியாதர மகளிருக்கு ஒப்பாயினர்; "வெள்ளிவே தண்டத் தங்கண் வீவிறென் சேடிப் பாலில்.....வெள்ளிவேற் கலுழவேகன் வேதண்ட வேந்தர் வேந்தன்" (சீவக. 546); "வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடி.....விஞ்சை வீரன்" (சிலப். 6 : 1-4.)

(பி - ம்.) 'மஞ்சிவர் வெண்பளிங்கு' 'இடை நிலையே', 'இடை நிலையின்', 'திடை மலையில்' 'அஞ்சன வேற்'

104. (பி - ம்.) 'தண்மலர்', 'தண்ணென்று'

105. செவ்வி - அழகு. கண்கள் இமைத்தலும், அடிகள் பூமியிற் படிதலும், சூடியமாலை வாடுதலும் மானிடர்க்கியல்பு; "கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால், வண்ண மலர்மாலை வாடுதலால்" (நள. 1 : 153.) வீடா - நீங்காத. நிலா முற்றமாகிய மேல்நிலையில்,

(பி - ம்.) 'கொண்டங்கு'

106. உருவி ளொளியி னுணர்வி னுரையிற்
பொருவி லரமகளிர் போல்வார் - அருகணைந்து

[குழாங்களின் கூற்று]

107. சீரள வில்லாத் திருத்தோ ளயன்படைத்த
பாரள வல்ல பணைப்பென்பார் - பாருமின்

108. செய்ய வொருதிருவே யாளுஞ் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார் - கையிரண்டே

109. ஆனபோ தந்த முருகவே ளல்லனிவன்
வேனல்வேள் கண்டீ ரெனமெலிவார் - யானெண்ணும்

110. எண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார் - மண்ணளிக்கும்

---

106. உருமுதலிய நான்கினுலும் தெய்வமகளிர் போல்வார். பொருவில் - பிறமகளிர் ஒப்பாகாத.

உரக வரமகளி ரொப்பாரும் (101) விஞ்சையர் மாதரென மிடைவாரும் (103) அரமகளிர் போல்வாரும் அருகணைந்து (106) எனஇயைக்க.

(பி - ம்.) 'உருவி லொளியி லுணர்வில்'

107. தோளின் பணைப்பு பூமியின் அளவையும் கடந்ததென்பது கருத்து; பணைப்பு - பெருப்பு, செழிப்பு; "யாரள வல்ல பணைத்தோளவு" (சிலாசாஸனப் பாட்டு.)

(பி - ம்) 'சீரளவல்ல' 'பரப்பென்பார்' 'பாருமிவன்', 'பாருமிவண்'

108. ஒரு திரு என்றது திருமகளை. மார்பு சிறுமைத்தோ என்றது மார்பு மற்ற மகளிரும் தமக்கு இடமாகக் கொள்ளும் பெருமையுடையது என்பது கருத்து.

(பி - ம்.) 'ஆளுஞ் சிறுமையதோ'

109. கை இரண்டே..... முருகவே ளல்லன்: "அந்தரத்துக், கோழி யானென்னின் முகமொன்றே கோதையை, ஆழியா னென்றுண ரற் பாற்று" (தொல். உவம. 32, பேர். மேற்.) வேனல் வேள் - வேனிற் பருவத்தைத் தனக்குரிய காலமாகக்கொண்ட மன்மதன்.

(பி - ம்.) 'ஆனபொழுதம்ம' 'வேனில்' 'மெலிவார் மானனையார்'

110. எண்ணுக்கு - கருத்திற்கு. வருமே: ஏகாரம் வினா.

(பி - ம்.) 'எண்ணுக் கியைய வருமோ விவ'

111. ஆதி மனுகுலமிவ் வண்ணலான் மேம்படுகை
பாதியே யன்று லெனப்பகர்வார்—தாதடுத்த
112. கொங்கை பசப்பார்தங் கோல்வளைகள் காப்பார்போல்
செங்கை குவிப்பார் சிலர்செறிய—அங்கொருத்தி

[பேதை]

113. வந்து பிறந்து வளரு மிளந்திங்கள்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து—பைந்தழைத்
114. தோகை தொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன்மேல்
வாகை புனைய வளர்கரும்பு—கோகுலத்தின்
115. பிள்ளை யிளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை—கள்ளம்

---

111. ஆதிமனுகுலம்: 4; "ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்" (கம்ப. 1: குலமுறை. 1.) அண்ணலான்......பாதியேயன்று; "பாதிம் முழுதும் மிவற்கேபணிகேட்ப மண்ணே" (கம்ப. 1. அரசியற். 9.); முழுவதும் ஆம் என்றபடி. தாது - பூந்தாது.

112. கோல்வளைகள் - திரண்ட வளைகளை; சித்திர வேலைகள் அமைந்த வளையல்களை என்றலும் ஆம். காப்பார்போல் - கைகளை விட்டுக் கழலாமற் காப்பவர் போல; காமவிகாரத்தால் மகளிர் உடல் மெலியக் கைவளையல்கள் கழலும் என்பது நூல் வழக்கு; "வாங்குவளைக் கையார் வதனமதி பூத்த". (நள. 1. 20.) செங்கை குவிப்பார் - சிவந்த கைகளைக் குவித்து வணங்குவாராய்.

(பி - ம்.) 'பசப்பார்தம்'

113. இளந்திங்கள் என்றது பிறை; "குளிராத திங்கட் குழவி" (குலோத். உலா, 125.) கொந்து - பூங்கொத்து; (146.) முகிழா - அரும்பாத. பைந்தழையாகிய தோகை.

(பி - ம்.) 'திங்கட் கொந்து' 'கொந்து முகுளாக்'

114. தோகை தொடாமஞ்ஞை - தோகை முளைக்காத இள மயில்; பேதையின் கூந்தல் முடிக்கும்படி கூடாத இளமைத் தன்மை பற்றி; "கூழைச்சுருண் முடிக்கக் கூடுவதுங் கூடாதாம், ஏழைப் பருவத் திளம்பேதை" (குலோத். உலா, 127.) சூடுண்டு தோற்றவன் - சிவபெருமானுல் எரிக்கப்பெற்றுத் தோற்ற மன்மதன்; எழுவாய். மேல் வாகை புனைய - பிற்காலத்தில் வெற்றிமாலையைச் சூடுவதற்கு

(பி - ம்.) 'கொடாமஞ்ஞை', 'கோகிலத்தின்'

115. கோகுலத்தின் பிள்ளை - குயிற் குஞ்சு; "கோகுலமாய்க் கூவுநருமாகுல மாகுநரும்" (பரி. 9: 56.) பிறந்தணிய - மிக இளைய; "பிறந்தணிய கிள்ளை" (இராசராச. 116.)

116\. தெரியாப் பெருங்கட் சிறுதேற ருயர்ப்
பிரியாப் பருவத்துப் பேதை – பரிவோடு

117\. பாவையு மானு மயிலும் பசுங்கிளியும்
பூவையு மன்னமும் பின்போதக்—காவலன்

118\. பொன்னிப் புகார்முத்தி னம்மனையுந் தென்னாகை
நன்னித் திலத்தி னகைக்கழங்கும்—சென்னிதன்

119\. கொற்கைக் குளிர்முத்த வல்சியுஞ் சோறடுகை
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப்—பொற்கொடியார்

116\. பெருங்கட் சிறுதேறல் - பெரிய கண்ணையுடைய சிறிய தெளிவு; தேன் என்றலும் ஆம்; பெருங்கள்ளினது சிறிய தெளிவு என்றும் ஒரு பொருள் தோற்றியது. தாயர் என்றது ஐவகைத் தாயரை; அவர்கள், ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் எனப்படுவர். தாயரைப் பிரியாத.

117\. பாவை - பேதையின் விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று; இதன்மேலுள்ள அன்பின் மிகுதியால் இதனை முதலிற் கூறினர்; 139; "இது வென் பாவை பாவை" (ஐங். 375.) பின்போத - தனக்குப் பின்னேவர.

(பி - ம்.) 'மானும் பயிலும்'

118\. புகார் - காவிரிப்பூம் பட்டினம். நாகை - நாகபட்டினம். நகைக்கழங்கு - ஒளியையுடைய கழற்சிக்காய்; நித்திலமாகிய கழங்கு என்க. சென்னிதன் - சோழனது.

119\. வல்சி - அரிசி. நித்திலத்தின் வல்சி: "தேறலுலை, வாக்குங் குடக்கூன் குழிசியிலம் மதுவார்த் தரித்த நித்திலத்தின், வல்சிபுகட்டி" (குமர. 25.) சோறடுகை கற்கைக்கு - சிற்றில் இழைத்துச் சிறு சோறு சமைத்தலைக் கற்பதற்கு. பொற்கொடி ஆர் - அழகிய கொடிகள் நிறைந்த. பேதை (116), போதக் (117), கைப்பற்றி (119) வீதி புகுந்து விளையாடும் எல்லைக்கண்.

(பி - ம்.) 'குளிர்முத்தின் கோலமணி வல்சியும்' 'சோறடவும்', 'சொற்றாய்கைக்' 'பொற்றொடியாள்', 'பொற்றொடியார்'

120. வீதி புகுந்து விளையாடு மெல்லைக்கண்
ஆதி யுகம்வந் தடிக்கொள்ள—மேதினிமேல்
121. ஊன்று கலிகடிந்த வுத்துங்க துங்கன்றன்
மூன்று முரச முகின்முழங்க—வான்றுணைத்
122. தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள்—சேயோன்
123. படியின் மதியும் பகலவனுந் தோற்கும்
முடியி லொருகா லுமூளா—வடிவில்
124. மகிழ்ந்து மலராண் மலர்க்கண்ணு நெஞ்சும்
நெகிழ்ந்த திருநோக்கி னேரா—முகிழ்ந்து

---

120. ஆதி யுகம் - கிருத யுகம், "வேதமு மெய்மையு மாதியுகம் போலத் தலை சிறப்ப வந்தருளி" (விக்கிரம. மெய்க்கீர்த்தி.); "ஆதியுகம், கொழுந்துவிட்டுத் தழைத்தோங்க" (இரண்டாம் இராசராசன் மெய்க்கீர்த்தி); "உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முத லூழியின்பம், வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்" (தஞ்சை. 286.)

(பி - ம்.) 'எல்லைவக்கண்' 'மேதினியில்'

121. ஊன்றுகலி - அழுந்திய கலியை. கடிந்த - தவிர்த்த; 26, 156. உத்துங்கதுங்கன் - உயர்ந்தவர்களுக்குள் உயர்ந்தவன்; 342. மூன்று முரசு: 28, குறிப்; முரசமுகில்-முரசாகிய மேகம்; இரு பெயரொட்டும் ஆம்; முகிலைப்போல முழங்க. வான்துணை - சிறந்த துணையாகிய.

(பி - ம்.) 'கலிகடந்த வுத்துங்க சோழன்றன்' 'மூன்று முரச முழங்குதலும்' 'வான்றுணையாத்'

122. தாயர்: 116, குறிப். தாயர் தொழத் தொழுது: "புக்கார், வணங்க வணங்கி வழுத்த வழுத்தி" (குலோத். உலா, 129-30); "ஓகைய ராகி யுலப்பில் பலகோடித், தோகைய ரோடத் தொடர்ந்தோடித் - தாகந் தணியத் தணியத் தமரும் பிறரும், பணியப் பணியப் பணிந்தாள்" (இராசராச. 128-9.) சேயோன் - முருகக்கடவுள் போன்ற சோழனது.

123. படி - ஒப்பு. மூளா - சேராவாய்; பின் வருவனவற்றிற்கும் இவ்வாறே எதிர்மறைப் பொருள் கொள்க.

(பி - ம்.) 'படியின் மதியின்'

124. மலராள் - திருமகளது. நெகிழ்ந்த திருநோக்கில் - நெகிழ்வதற்குக் காரணமான பார்வையில். கண்ணும் நெஞ்சும்: 129. முகிழ்ந்து - அரும்பி; முகிழ்ந்து சிரித்தல் - புன்சிரிப்புக் கொள்ளல்,

(பி - ம்.) 'மகிழ்ந்த' 'நோக்குநேரா'

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

125. சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திருநிலவின் வீழா—பரிக்கும்
126. உலகம் பரவுந் திருப்புருவத் தோடா
திலக முகாம்புயத்துச் சேரா—பலவும்
127. திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
இசையுந் திருமார்பத் தெய்தா—வசையிலாக்
128. கைம்மலரிற் போகா வடிமலரின் கண்ணுரு
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதுரு—அம்மகள்
129. கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுதும்
நண்ணுந் தொடையன்மே னாட்செய்ய—உண்ணெகிழா
130. வம்மின்க ளன்னைமீர் மாலை யிதுவாங்கித்
தம்மின்க ளென்றுரைப்பத் தாயரும்—அம்மே
131. பெருமானை யஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வேம்—திருமாலை

---

125. சேயொளியூடு - சிவந்த ஒளியில். திருநிலவு என்றது சிரிப்பை.

126. பரிக்கும் உலகம் - விக்கிரம சோழன் தாங்கும் உலகம். திலக முகாம்புயத்தில் - திலகத்தை யணிந்த முகமாகிய தாமரையில்.

(பி - ம்.) 'புருவத் தோரா'

127. பலவும் திசையை நெருக்கும் - திசைகள் பலவற்றையும் நெருக்குகின்ற. வசைஇலா - பழிப்பில்லாத.

(பி - ம்.) 'மணிமார்பத்' 'வசையுரு'

128. பேரொளி : கரியநிறம் ; 187. அம்மகள் - பேதை.

(பி - ம்.) 'கைம்மலரிற் போதா வடிமலரிற் கண்ணுரு' 'மீதுரா'

129. கழுநீர் - கழுநீர்ப்பூ ; குலோத். உலா, 115. தொடையல்மேல் - மாலையினிடத்தே. நாட்செய்ய - ஆரம்பஞ்செய்ய. உள்நெகிழா - மனம் நெகிழ்ந்து. கண்ணும் மனமும் : 124.

130. மாலையிது - இந்தக் கழுநீர்மாலையை கழுநீர்மாலை : 225 ; 2 : 76, 176. அம்மே என்றது பேதையை விளித்தது.

(பி - ம்.) 'அன்னையீர்' 'மாலையது வாங்கி'

131. பெருமானை அஞ்சாதே - விக்கிரம சோழனுக்கு அஞ்சாமல் ; "தேயத்தார், மன்னனை யஞ்சாதே" (குலோத். உலா, 209-10.)

(பி - ம்.) 'செல்வோம்'

132. யாங்கொள்ளும் வண்ண மெளிதோ வரிதென்னத்
தேங்கொள்ளு மின்சொற் சிறியாளும்—ஆங்குத்தன்
133. மார்வத்துக் கண்ணினீர் வாரப் பிறர்கொள்ளும்
ஆர்வத்துக் கன்றே யடியிட்டாள்—சேர
134. இருத்தி மணற்சோ றிளையோரை யூட்டும்
அருத்தி யறவே யயர்த்தாள்—ஒருத்தி

[பெதும்பை]

135. மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து கொண்டாள்—நிழல்விரவு
136. முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்—கன்னி

---

132. என்ன - என்று தாயர் சொல்ல. தேம்கொள்ளும் - இனிமையைக் கொண்ட. சிறியாள் - பேதை.

133. மார்வத்து - மார்பில். மார்பம் என்றசொல் 'மார்வம்' என்றும் வழங்கும்; "ஆர்வமாளுசா ரணரனேகர்தம், மார்வ மாளுமா நவ்வி வவ்வியே" (தக்க. 500); "மார்விற்றிருவிற் பொலி மாலையினுன்" (கம்ப. 3. சரபங்கர். 9); "கான்மடங்கா மார்வத்தார் காணவிரும் பினர்மேல், நான்மடங்கா மார்வத்தார் நாடு" (திருவேங்கடமாலை, 45.) பிறர் - மற்றப் பருவத்து மகளிர். ஆர்வத்துக்கு - காதலுக்கு. அடியிட்டாள் - தொடக்கஞ் செய்தாள்.

(பி - ம்.) 'ஆர்வத்துக் கின்றே'

134. சேர இருத்தி - மற்றமகளிரை ஒன்ருகச் சேரும்படி இருக்கச் செய்து. இளையோரை - இளைய மகளிரை. ஊட்டும் அருத்தி - உண்பிக்கும் ஆசையை. அறவே அயர்த்தாள் - முழுவதும் மறந்தாள்.

(பி - ம்.) 'ஊட்டி யருத்தி நடுவே'

135. மழலை - மழலைச் சொற்களை. குழல் - புல்லாங்குழல். நிழல் - ஒளி.

(பி - ம்.) 'வாய்ந்த', 'வாய்க்கும்' 'இசைகவர்ந்து கொள்வாள்' 'நிழல்வரவு'

136. முன்னர் - பேதைப்பருவத்து. நகை - அரும்புகளை. தனது முல்லை என்றது பெதும்பை வளர்த்த முல்லைக் கொடியை; "எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த, முற்றிழையாள் வாட முறுவலிக்கும்" (தண்டி. 48, மேற்.) நகை கொண்ட - பற்களைக்கொண்ட,

(பி - ம்.) 'முன்னை நகை' 'பின்னை நகை'

137. மடநோக்கந் தான்வளர்த்த மானுக் களித்து
விடநோக்கம் வேலிரண்டிற் கொண்டாள்—சுடர்நோக்கும்

138. தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள்—பூநறும்

139. பாவைகள் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாள்—மேவும்

140. மடநடை யன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள்—சுடர்கனகக்

141. கொத்துக் குயின்ற கொடிப்பவள பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியாள்—எத்திறத்தும்

---

137. கன்னி மடநோக்கம் - இளைய அறியாமையோடு கூடிய பார்வையை. வளர்த்த மான் : 117. விடநோக்கம் - விஷம் போன்ற பார்வையை; கம்ப. 2. சித்திர. 8. வேல்இரண்டு என்றது இரு கண்களை; வேலுக்கு விடம் பூசுதல் உண்டு; கம்ப. 2. கைகேசி சூழ்வினைப் : 64. சுடர் நோக்கும் - சூரியனை நோக்குகின்ற.

(பி - ம்.) ‘மானுக்கு விட்டு’ ‘விடநோக்க வேலிரண்டு’

138. மெய்நுடக்கம் - உடம்பின் துவட்சியை. தன் மாதவிக்கு - தான் வளர்த்த மாதவிக் கொடிக்கு ; மாதவி - குருக்கத்தி. வானுடைய மின்னுடக்கம் - மேகத்தினுடைய மின்னலினது துவளுதலை. வாங்கினாள்- தான் வாங்கிக்கொண்டாள்.

(பி - ம்.) ‘தண் மாதவிக்கு’ ‘பூ நாறும்’

139. பூநறும்பாவைகள் - அழகிய மணமுடைய பாவைபோன்ற பூக்களை. குரவின் பூவைப் பாவை யென்றல் மரபு; 117. பூவை - நாகணவாய்ப்புள் ; 117.

140. அன்னம் : முன்தான் வளர்த்தது ; 117. கன்னிப்பிடி நடை- இளைய பெண்யானையின் நடையை. பெயர்வாள் - நடப்பாள்.

141. சுடர் கனகக் கொத்து - ஒளிவிடுகின்ற பொன்னின் தொகுதியிலே. பவள பந்தத்தின் - பவளமாகிய காலில். உச்சி முச்சியாள் - உச்சிக் கொண்டையை யுடையவள் ; “வார்குழற்கு மாடடைந்து, கொண்டல் சொரிமுத்தின் கொண்டையும்” (குலோத். உலா, 229.) எத்திறத்தும் - எல்லாவகையிலும்.

(பி - ம்.) ‘பந்தத்து’

142. வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேல்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள்—நேரொத்த

143. கோங்க முகையனைய கொங்கையா டன்கழுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்—பாங்கியரும்

[கனாக் கூறுதல்]

144. தாயரும் போற்றாமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென்—றியாயே

145. தளரு மிடையொதுங்கத் தாழுங் குழைத்தாய்
வளரு மொருகுமரி வல்லி—கிளரும்

146. கொழுந்து மளவிறந்த கொந்துங் கவினி
எழுந்து கிளைகலிப்ப வேறித்—தொழுந்தகைய

---

142. வீரவேள் போல்வாரை - வீரத்தையுடைய முருகக் கடவுளைப் போன்ற ஆடவரை. வீட்டி - கொன்று. விழுத்தவர்மேல் - சிறந்த தவத்தை யுடையவர்மேல். மாரவேள் - மன்மதன். கண்சிவப்ப - போர் செய்யும்படி. வாய் சிவப்பாள் : 139. நேரொத்த - மிகவும் ஒத்த.

143. கோங்கமுகை - கோங்கரும்பு. பூங்கமுகை - பொலிவுள்ள கமுக மரத்தை. பொற்பழிப்பாள் - அழகைச் சிதைப்பாள்.

(பி - ம்.) 'இப்போதே'

144. போற்றாமே - எழுப்பாதபடி. பாயல்புடைபெயர்ந்து - படுக்கையினின்றும் எழுந்து. யாயே : விளி.

145. குழைத்தாய் - தளிர்களையுடையதாகி. குமரி வல்லி - இளைய பூங்கொடி ; "குமரி வாழையின் குருத்தகம் விரித்து" (சிலப். 16 : 42.)

(பி - ம்.) 'யிடையொதுங்கித்'

146. கொழுந்து - மிக இளைய தளிர். கொந்து - பூங்கொத்து ;
113. கவினி - அழகு பெற்று. கிளைகலிப்ப - கிளைகள் தழைக்கும்படி.

(பி- ம்.) 'சினைகளிப்ப', 'சினைகலிப்ப'

147. கொங்குடைய பொன்னடருஞ் சென்னிக் கொழுங்கோங்கின்
பங்குடைய மூரிப் பணையணைந்து—தங்குடைய
148. வண்டு முரல மணநாற வைகுவது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக்—கொண்டு
149. வருக வருக மடக்கிள்ளை முத்தம்
தருக தருகவெனத் தாயர்—பெருக
150. விரும்பினர் புல்லி விரைய முலைவந்
தரும்பின வாகத் தணங்கே—பெரும்புயங்கள்
151. புல்லி விடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி யெனவழுத்தும்—எல்லை
152. அரச னபய னகளங்க னெங்கோன்
புரசை மதவரைமேற் போத—முரசம்
153. தழங்கு மறுகிற் றமரோடு மோடி
முழங்கு முகின்மாட முன்றிற்—கொழுங்கயற்கட்

147. கொங்கு - தேன். உடைய - பூ மலர்வதால் உடைந்து. பொன் அடரும் கோங்கு - கொங்கு செறிந்ததுபோல் விளங்கும்கோங்கு. சென்னி - உச்சியையுடைய. மூரிப்பணை அணைந்து - வன்மையையுடைய கிளையைச் சேர்ந்து. தங்குடைய - அக்கிளையில் தங்குதலுடைய.

(பி - ம்.) 'கொழுங்கொம்பின்' 'பணையணைந் தங்குடைய'

148. முரல - ஒலிக்கும்படி. குமரிவல்லி கவினி, எறி, அணைந்து, முரல, நாற வைகுவது கண்டு மகிழ்ந்தேனென முடிக்க. கனவு : 164-5.

(பி - ம்.) 'வைகுமது'

149. மடக்கிள்ளை : விளி. 'வருகவருக', 'தருக தருக' என்னும் அடுக்குகள் மகிழ்ச்சிபற்றி வந்தன. பெருக விரும்பினர்-மிக விரும்பியவராய்.

(பி - ம்.) 'தாயர் விரவி'

150. புல்லி - தழுவிக்கொண்டு. ஆகத்து அரும்பின - மார்பிலே தோன்றின.

151. பெரும்புயங்கள் புல்லி விடாத-சோழனுடைய பெரிய தோள்களைத் தழுவிக்கொண்டு பின்பு விடாமைக்குக் காரணமான ; "புல்லி விடாஅப் புலவியுள்" (குறள், 1324.) புதுவதுவை - புதிய மணம். சென்னியுடன் - சோழனோடு. வல்லி : விளி. வழுத்தும் எல்லை - சொல்லுகின்ற சமயத்தில்.

152. அகளங்கன்-விக்கிரம சோழன் பெயர் ; 59, 182, 209, 256, 284 ; இப்பெயர் இவன் தந்தைக்கும் உண்டு ; கலிங்கத். பேய்முறை. 7. புரசை - யானைக் கழுத்திலிடும் கயிறு ; "புரசை யானையின் வீதியிற்போகவும்" (கம்ப. 5. சூடாமணி. 36.) மதவரை - யானை ; இது அயிராபதம் என்னும் பட்டத்து யானை ; 52, 64, 272, 289, 304.

154. பொன்னென வெல்லா வழகும் புணைவதொரு
மின்னென வந்து வெளிப்பட்டு—மன்னருயிர்
155. உண்டாற் றியவேங்கை வைக்க வொருதிருக்கைச்
செண்டாற் கிரிதிரித்த சேவகனைத்—தண்டாத
156. வேகங் கெடக்கலிவாய் வீழ்ந்தரற்றும் பார்மகளைச்
சோகங் கெடுத்தணைத்த தோளானை—ஆகத்துக்

---

153. தழங்கு - ஒலிக்கின்ற. மறுகில் - வீதியில். தமரோடும் - சுற்றத்தாரோடும். முழங்குதல் முகிலுக்கு அடை. முகில் மாடம் - மேகங்கள் வந்து படிந்துள்ள மாடம்; மேகத்தைப்போன்ற குளிர்ந்த மாடம் எனினும் ஆம்; மலைபடு. 484; பெருங். 3-16; 27.

(பி - ம்.) 'மணிமாட,' 'நெடுமாட',

154. பொன் என - திருமகளைப் போலவும். மின் என - மின்னல் எனவும். மன்னர் உயிர் - பகையரசருடைய உயிரை.

(பி - ம்.) 'புணைந்தவொரு'

155. உண்டாற்றிய வேங்கை - உண்ட புலிக்கொடியை; உண்டாற்றிய: ஒரு சொல்; 'ஒறுத்தாற்றும் பொறுத்தாற்றும் என்பன ஈண்டு ஒரு சொல் நீர' (குறள், 579, பரிமேல்.) செண்டால் - செண்டு என்னும் ஆயுதத்தால். கிரி - மேரு மலையை. சேவகன் - வீரனை கரிகாற் சோழன். விக்கிரம சோழனுடைய முன்னோருள் ஒருவனது செயலை இவன்மேல் ஏற்றிக் கூறினர். செண்டால் கிரிதிரித்தது: "கச்சி வளைக் கைச்சி காமக்கோட் டங்காவல், மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் - கைச்செண்டு, கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான், செம்பொற் கிரிதிரித்த செண்டு" (சிலப். 5: 95-8, அடியார். மேற்.); "செண்டு கொண்டுகரி காலனொரு காலிமயச் சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப், பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற் பாய்புலிப்பொறி குறித்தது மறித்த பொழுதே" (கலிங்கத். இராசபாரம். 1.); 'பொன் மலை இவனதாதற்குக் காரணம் மகாமேருவின் அடிமுதல் முடிகாறும் சோழர்களால் எழுதப்பட்ட புலிப்பொறியே யாதலாலும், கரிகாலன் கைச்செண்டால் திரித்தான் என்னும் கதை உண்டாதலாலும், (தக்க. 185, உரை); "இலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன், வன்றிறற் புலி யிமையமால் வரைமேல் வைக்க வேகுவோன்" (பெரிய. திருக்குறிப்புத் தொண்ட. 85.); செண்டு: மகாமகோபாத்தியாயர். டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதிய செண்டலங்காரர் என்ற கட்டுரையைப் பார்க்க; நினைவுமஞ்சரி, I. 3வது கட்டுரை.

156. தண்டாத வேகம் - தணியாத வலிமை. கலிகெடுத்தவன்; 26, 121. ஆகத்து - மார்பிலுள்ள.

(பி - ம்.) 'வீழ்ந்தரற்றப்' 'கெடுத்தெடுத்த'

157. கொங்கை பிரியாத வீறேடுங் கோகனக
மங்கை பிரியாத மார்பானை—அங்கமலக்

158. கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும்
செய்ய கரிய திருமாலைத்—தையலும்

159. கண்டகண் வாங்காள் தொழமுகிழ்த்த கைவிடாள்
மண்டு மனமீட்கு மாறறியாள்—பண்டறியாக்

160. காமங் கலக்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்றுள்—நாமவேற்

---

157. வீறு - வீற்றுத் தெய்வம்; 'திரு - முலைமேற் றேன்றும் வீற்றுத் தெய்வம்' (சிலப். 2 : 69, அடியார்.); 'தம்மேல் உறையும் வீற்றுத் தெய்வம் இருப்பிடமாக இருக்கப்பட்டுச் சுணங்கு பரந்தன' (சீவக. 171, ந.); "அகிற், சேற ணிந்த முலைத்திரு மங்கைதன், வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே" (கம்ப. 1. ஆற்றுப். 2.) கோகனக மங்கை - திருமகள் ; கோகனகம் - தாமரை.

158. கையும்........செய்ய திருமால் : "கண்ணும், திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய, கரியவனை" (சிலப். 17 : படக்கைப் பரவல், 2.) விக்கிரம சோழனுலாப் பாடிய காலத்தில் இரண்டு கண்ணியை ஒரு பாட்டாகப் பாடென்றபோது பாடியது என்ற தலைப்பின் கீழ் உள்ள பாடலில் இக்கண்ணி முதலிரண்டடிகளாகக் காணப்படுகின்றது (தமிழ் நாவலர் சரிதை, 120.) திருமாலை - சோழனை.

159. வாங்காள் - மீண்டு வருவித்துக் கொள்ள முடியாதவளாய். முகிழ்த்த - குவித்த. மண்டும் மனம் - சோழன் மேல் மிக்குச் செல்லுகின்ற மனத்தை. மாறு - விதத்தை.

160. பண்டு அறியாக்காமம் - முன் பேதைப் பருவத்தில் அறியாத காமம். குழல் சரிய என்றது 'கூழை விரித்தல்' என்ற மெய்ப்பாட்டைக் குறிக்கும்; 'தொல். மெய்ப். 14; 'சரிந்துவீழ் குழல்கள் தாங்கார்' (கம்ப. 1. உலாவியற் : 2.) ; 'காரிருள்போற் சோரும் புரிகுழலைத் தாங்கும்' (நள. 1 : 121.) தாமம் சரிய - மாலைகள் நழுவ. தனிநின்றுள் - நாண முதலாகிய குணங்கள் நீங்கத் தனியளாய் நின்றுள் ; குலோத். உலா, 286. நாமவேல் - அச்சத்தைச் செய்யும் வேலையுடைய ; நாம் என்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது ; "நாமநீர் வைப்பில்." (குறள், 149.)

161. சேரனு மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்
வீரனு மவ்வெல்லை விட்டகன்ருன்—மாரனும்

162. தக்குத் தகாதாளை யெய்து தரைப்படுத்தப்
புக்குத் தொடைமடக்கிப் போயினுன்—மைக்குழல்

[மங்கை]

163. மங்கைப் பருவத் தொருத்தி மலர்பொதுளுங்
கங்கைப் புளினக் களியன்னம்—எங்கோனை

164. மன்னவனை மன்னர் பிரானை வரோதயனை
தென்னவனை வானவனைச் செம்பியனை-முன்ஞெருநாள்

165. கண்ட பெதும்பைப் பருவத்தே தன்கருத்தாற்
கொண்ட பரிவு கடைக்கூட்ட—புண்டரிகச்

---

161. மீனவன் - பாண்டியன். சேவிப்ப - தன்னை வணங்கி வர. செம்பியரில் வீரன் . சோழர்களில் சிறந்த வீரனுகிய விக்கிரம சோழன்.

162. தக்குத் தகாதாளை - காமத்திற்குச் சிறிது தகுதியுடையவளாய் முழுதும் தகுதியில்லாத பெதும்பையை ; "எந்திழையுந், தக்க தகாத வறியாத் தாத்தறிவோ" (திருவாரூருலா, 248-9.) தரைப்படுத்தப் புக்கு - தரையிலே விழுத்தப் புகுந்து. தொடை மடக்கி - அது முடியாமையால் தான் தொடுத்த அம்பை மடக்கி. மைக்குழல் - மேகத்தைப் போன்ற கூந்தலையுடைய.

(பி - ம்.) 'தரைப்படுத்துப்' 'தொடைமடக்கிப் போமெல்லை'

163. மலர் பொதுளும் - மலர்கள் நெருங்கிய. புளினம் - மணற்குன்று. கங்கை......அன்னம் : "மேவிப்பூங் கங்கையுள் விளைந்த வன்னமே" (சீவக. 1017.)

164. மன்னர் பிரானை - சக்கரவர்த்தியை. வரோதயன் - சிறந்த பிறப்பையுடையவன். தென்னவன் - பாண்டியன். வானவன் - சேரன். தமிழ் நாடு மூன்றையும் ஆண்டமைபற்றி இவ்வாறு கூறினர் ; திரிபுவன சக்கரவர்த்தி என்று சாஸனங்களில் கூறப்பெறுவதுங் காண்க.

165. கண்ட - கனவிலே கண்ட , கண்டது ; 159. பரிவு - காதல். கடைக் கூட்ட - முடிவு போக்க.

(பி - ம்.) 'பருவத்துத் தன் கருத்தில்', 'பருவத்துருவத்துக்'

166. செய்ய வடிமுதலாச் செம்பொன் முடியளவும்
மைய லகல மனத்திழைத்துக்—கையினல்

167. தீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாம்
காட்டுங் கனவு தரக்கண்டு—நாட்டங்கொண்

168. டியாதொன்றுங் காணு திருப்பாள் பொருகளிற்றில்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன்—வீதி

169. வருகின்ற னென்று மணியணிகள் யாவும்
தருகென்றுள் வாங்கித் தரித்தாள்—விரிகோதை

170. சூடினுள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
றூடினு டன்பே ரணியணிந்தாள்—சேடியர்

---

166. மையல் அகல - மயக்கம் நீங்கும்படி. மனத்து இழைத்து - மனத்திலே எழுதி.

(பி - ம்.) ‘ அகலா மனத்தெழுதிக் ’

167. தீட்டும் கிழி - எழுதிய துணிப் படத்தில். பகற் கண்டு - தலைவனைப் பகலிலே பார்த்து ; பகலிற்கிழியிலும், இரவிற் கனவிலுந் தரக்கண்டு. ஒப்பு : 190.

(பி - ம்.) ‘ தரக் காணுங்கால் ’

168. யாதொன்றும் - வேறு எப்பொருளையும். இருப்பாள் : மங்கை. பொருகளிற்றில் - போர் செய்கின்ற யானையின்மேல். தாது - மகரந்தம். தொங்கல் - ஆத்திமாலையை அணிந்த. சயதுங்கன் - வெற்றியினல் உயர்ந்தவன் ; இப்பெயர் இவ்வேந்தன் தந்தையாகிய முதற் குலோத்துங்கனுக்கும் உண்டு ; (கலிங்கத். காப்பு. 8, இராசபாரம். 34.)

(பி - ம்.) ‘ பொருகளிற்றுத் ’

169. விரிகோதை - மலர்ந்த மாலையை.

170. பொற்றுகில் - பொன்னுடை. சந்தனச் சேறு - சந்தனக் குழம்பை. பேரணி - மதாணி ; 50 ; “ மதாணியான பேரணிகலப் பதக்க முடைய மார்பினள் ” (தக்க. 105, உரை.) சேடியர் - பணிமகளிர்.

[மங்கை தன்னையே ஐயுறுதல்]

171. காட்டும் படிமக் கலத்துக் கமலத்தை
ஓட்டும் வதனத் தொளிமலர்ந்து—கேட்டு

172. விடைபோ மனங்கன்போல் வேல்விழிக டாமும்
படைபோய் வருவனபோற் பக்கம்—கடைபோய்

173. மறித்து மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
எறிக்குங் குழைக்காதிற் கேற்றும்—நெறிக்கும்

174. அளக முதலாக வைம்பாற் படுத்த
வளர்கருங் கூந்தன் மலிந்தும்—கிளர

175. அரியன நித்திலத்தி னம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்தும்—தெரியற்

---

171. படிமக்கலத்து - கண்ணாடியில்; "பூமபடிமக்கலம் பொற்படிமக்கல மென்றிவற்றால்" (தே. திருநா) கமலத்தை ஓட்டும் வதனம் - தாமரைப் பூவைப் போன்ற முகத்தில்; ஓட்டும்: உவம வுருபு; அழகில் தோற்று ஓடச்செய்யும் என்னலும் ஆம்.

(பி - ம்) 'கலத்திற் கலாமதியை'

172. விடைபோம் - விடைபெற்றுச் செல்லுகின்ற; 300. படை போய் வருதல் - போர்மேற்சென்று வருதல்; தக்க. 241. பக்கம் கடை போய் - பக்கத்திலும் இறுதியிலும் போய்.

(பி - ம்.) 'பக்கம் புடைபோய்'

173. வார் கடிப்பு வீக்கி - நீண்ட குதம்பை என்னும் காதணியை யணிந்து. எறிக்குங் குழை-ஒளியை வீசும் குழையை அணிந்த; "மையார் கடிப்பிணையும் வார்குழையுங் களைந்திடுவார்" (சீவக. 295.) நெறிக்கும் - வளைந்த.

(பி - ம்.) 'மிகமதர்த்து.' 'குழைகாதி லேற்றி'

174. அளகம் முன்னெற்றி மயிர். ஐம்பாற்படுத்த - ஐந்து வகை யாகச் செய்யும்படி; ஐம்பால்: பு. வெ. 223, உரை. மலிந்தும்-தழைத்தும்.

(பி - ம்.) 'மலிந்தும் மிளிர'

175. நித்திலத்தின் அம்பொற்றொடித்தோள் - முத்துக்கள் பதிக் கப்பெற்ற அழகிய பொன்னாலாகிய வளையையணிந்த தோள். பரியன காம் பின் - பருமையுடையனவாகிய மூங்கிலைப் போல. பணைத்தும் - பெருத் தும். மூங்கிலும் முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்றாதலின் முத்துத் தொடியை யணிந்த தோளுக்கு அதனை உவமை கூறினர்.

(பி - ம்.) 'நித்திலத் தம்பொற்'

176. சுவடு படுகளபத் தொய்யில்சூழ் கொங்கை
குவடு படவெழுச்சி கொண்டும்—திவடர

177. முந்துங் கலையல்குன் மூரித் தடமகன்றும்
நொந்து மருங்கு னுடங்கியும்—வந்து

178. மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
அடையுந் தனதுருக்கண் டஞ்சிக்—கொடையனகன்

179. பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துக்—
கண்டறியு மவ்வடிவு காண்கிலேன்—பண்டறியும்

180. முன்னை வடிவு மிழந்தேன் முகநோக்கி
என்னை யறிகலன்யா னென்செய்கேன்—தன்னை

---

176. தெரியல் சுவடுபடு - மாலையினுடைய சுவடு உண்டான. களபத் தொய்யில் - சந்தனக் குழம்பால் நகிலில் எழுதப்பட்ட கொடி முதலிய கோலங்கள். குவடுபட - மலைச்சிகரங்கள் தோற்கும்படி. திவள்தர- விளங்கும்படி; துவள என்னலும் ஆம்.

(பி - ம்.) 'தொய்யில்வாழ் கொங்கை' 'கொண்டுந் திவடாமம்', 'திவடாது'

177. முந்தும் - அல்குலுக்கு அடை. கலை - மேகலை. மூரித்தடம்- பெருமையுடைய உயர்ந்த இடம். மருங்குல் நொந்து நுடங்கியும் - தனக்கு இடமில்லாமையால் இடை வருந்தித் துவண்டும்.

178. மிடையும் - நெருங்குகின்ற. புது வனப்பு - முன் பருவங்களி லில்லாத புதிய திரண்ட அழகு. விண்ணோரும்: உம்மை உயர்வு சிறப்பு. வீழ - விரும்பும்படி. அனகன்: தலைவன் பெயர்.

(பி - ம்.) 'கொடியனகன்'

179. முன்னைப் பருவத்து - பேதை பெதும்பையாகிய பருவங் களில். உருவத்து - உடம்பில். அவ் வடிவு - அந்த அழகை; வடிவு உருவமும் ஆம்.

180. என்னை யறிகலன் யான்; "கானவர் தாந்தினை கொய்த னரோ கண்ட கண்ணலவோ, தேனமர் வண்டினங் காள்கிள்ளை காள் செழுங் கானவிட்டுப், போனவன் றனல்லவோ நெடுங்கானிப் புனமல் லவோ, கானவன் றனல்ல வோசொல்ல வேண்டுங் நடுக்கண்டதே" (தனிப்பாடல்.) தன்னை - விக்கிரம சோழனை. 171-180. கண்ணிகள் மங்கை தன்னையேதான் அறியாத நிலைமையை விளக்குவன.

(பி - ம்.) 'வடிவம்' 'அறிகிலே னென்செய்கேன்'

181. வணங்கி வருவ தறிவ னெனவந்
திணங்கு மகளி ரிடைநின்—றணங்கும்

182. இறைவ னகளங்க னெங்கோன் குமரித்
துறைவ னிருபகுல துங்கன்—முறைமையால்

183. காக்குங் கடல்கடைந்த கைம்மலரு முந்திமலர்
பூக்கு முலகளந்த பொற்கழலும்—நோக்கும்

184. திருக்கொள்ளு மார்பமுந் தெவ்வேந்த ரெல்லாம்
வெருக்கொள்ளு மூரித்தோள் வெற்பும்—உருக்கும்

---

181. *அறிவன் - சோழன் அறிவான். இணங்கு மகளிர் - தன்னை ஒத்த பெண்கள். அணங்கும் - மங்கையும்.*

(பி - ம்.) *'அறிவல்' 'அறிகுவென் முன்வந்து', 'அறியலேன்முன் வந்து'*

182. *அகளங்கன் - விக்கிரம சோழன். குமரித் துறைவன் - குமரித் துறைக்குத் தலைவன். நிருபகுலதுங்கன் - அரசர்களிற் மேம்பட்ட சோழன்.*

183. *காக்கும் - தான் காக்கின்ற; கடல் கடைந்த - பாற்கடலைக் கடைந்த; "தோளிணையாற், கோழியிற் சோழ குலத்தொருவன் முன் கடைந்த, ஆழியிற் கொண்ட வரம்பையரும்"* (இராசராச. 72); *"கடல் கலக்க வெழு மின்னமுது தன்னையொருவன், கடவுள் வானவர்களுண்ண வருள் செய்த கதையும்"* (கலிங்கத். 190); *"உரைகுறுக நிமிர்கீர்த்தி யிவர்குலத்தோ னொருவன்காண், நரைதிரைமூப் பிவைமாற்றி யிந்திரனு நந்தாமல், குரைகடலை நெடுவரையாற் கடைந்தமுது கொடுத்தானும்"* (கம்ப. 1. குலமுறை. 4.); *கடல் கடைந்ததும், உலகளந்ததுமான திருமால் செயல்களைச் சோழன்மேல் ஏற்றிக் கூறியது; கடல்கடைந்த பிருதுலாக்ஷன் என்னும் சூரியகுல மன்னன் செயலை இச்சோழன்மேல் ஏற்றியது, அரசரைத் திருமாலாகக் கொள்ளும் முறைபற்றியும் ஆம். பூக்கும் - பெற்ற. நோக்கும் - தன்னையே நோக்குகின்ற.*

(பி - ம்.) *'பூங்கழலும்,' 'பூமலரும்'*

184. *திருவைக் கொள்ளும் மார்பத்தையும். தெவ்வேந்தர் - பகையரசர். வெருக்கொள்ளும் - அஞ்சுதற்குக் காரணமான. மூரி - வன்மை. உருக்கும் - கண்டவர் மனத்தை உருகச் செய்கின்ற.*

185. மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்கும்—துகிரொளியை
186. வெளவிய கோல மணிவாயு மெப்பொழுதும்
செவ்வி யழியாத் திருமுகமும்—எவ்வுருவும்
187. மாறுபடா வண்ணமுந்தன் வண்ணப் படிவத்து
வேறு படுவனப்பு மெய்விரும்பித்—தேறும்
188. பிறையாம் பருவத்துப் பேருவகை யாம்பல்
நிறையா மதிக்கு நெகிழ்ந்தாங்—கிறைவனைக்
189. கண்டு மனமு முயிருங் களிப்பளவிற்
கொண்டு பெயர்ந்தது கொல்யானை—பண்டு

---

185. *மாதரார் மாமை* - மகளிருடைய பேரழகை ; 231 ; மாமையின் தன்மை; "*நீர்வள ராம்பற் றூம்புடைத் திரள்கால், நாருரித் தன்ன மதனின் மாமை*" (நற். 6 : 1-2) என்பதனுல் அறியப்படும். *நுகர* - உண்ணும்பொருட்டு. *நோக்கும்* - பார்வையும். *துகிரொளியை* - பவளத்தின் ஒளியை.

(பி - ம்.) '*மாதரார் மானம்*'

186. *எப்பொழுதும் செவ்வி யழியா* - துன்பக் காலத்திலும் அழகு கெடாத ; இது, "*மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும், இத்தி ருத்துறந் தேகென்ற போதினும், சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை, ஒத்திருந்த முகத்தினை யுன்னுவாள்*" (கம்ப. 5. காட்சி. 20) என்னும் செய்யுளை நினைப்பிக்கின்றது.

187. *மாறுபடா வண்ண*மென்றது சோழனுடைய மேனியின் தன்மையை. *வேறுபடு வனப்பு* என்றது உறுப்பின் வேறுபாட்டை. *மெய் விரும்பி* - மனத்தின் கண்ணே விரும்பி ; இதய உணர்ச்சியோடு விரும்பி.

(பி - ம்.) '*வண்ணமவ் வண்ணல்*', '*வண்ணமிவ் வண்ணல்*', '*வண்ணமு மண்ணல்*'

188. *பேருவகை ஆம்பல்* - பெரிய உவகையையுடைய ஆம்பல்மலர். *நிறைஆம் மதிக்கு* - கலைகளால் நிறைந்த பூரண சந்திரனுக்கு. *நெகிழ்ந்தாங்கு* - மலர்ந்தாற்போல. *இறைவனை* - சோழனை.

(பி - ம்.) '*தேறிற் பிறையாம் பருவத்துட்*' '*நிறைவாம் மதிக்கு*'

189. *பண்டு* - விக்கிரம சோழனைக் காண்பதற்குமுன். *கொல் யானை கொண்டு பெயர்ந்தது*.

(பி - ம்.) '*பண்டை*'

190. நனவு கிழியிற் பகற்கண்டு நல்ல
கனவு தரவிரவிற் கண்டு—மனமகிழ்வாள்

191. தீட்ட முடியாத செவ்வி குறிக்கொள்ளும்
நாட்ட முறங்கா மையுநல்க—மீட்டுப்

192. பெயர்ந்தா டமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தா ளவணிலையீ தப்பாற்—சயந்தொலைய

[மடந்தை]

193. வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினள்—அந்தமில்

194. ஓலக் கடலேழு மொன்று யுலகொடுக்கும்
காலக் கடையனைய கட்கடையாள்—ஞாலத்தை

---

190. நனவு - விழித்திருக்கும் நிலையில். கிழியில் - தான் தீட்டிய படத்தில்; 167. மகிழ்வாள் : மங்கை.

(பி - ம்.) 'தரவிரவு'

191, தீட்ட முடியாத - ஓவியருக்கும் எழுத முடியாத. செவ்வி - அழகை. குறிக்கொள்ளும் - தமக்கு இலக்காகக் கொள்ளும். நாட்டம் - கண்கள். உறங்காமையும் - தூக்கமில்லாமையையும். சோழனைக் கண்ட கண்களே இப்பொழுது உறங்காமையையும் கொடுத்தன என்பது கருத்து; "கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய், தாங்காட்ட யாங் கண் டது" (குறள், 1171.) மீட்டு - தன் மனத்தை மீட்டு.

(பி - ம்.) 'குறிகோளும்', 'குறிகொள்ள - வாட்டமுறங்காமையு நல்க', 'உறங்காமையை மீட்டும்'

192. பெயர்ந்தாள் - திரும்பிவந்தாள். அயர்ந்தாள் - சோர்ந்தாள். சயம் தொலைய - மற்றவரை வென்ற வெற்றி நீங்குதலால்.

193. கண்ணி, 193 : 142. அந்தமில் - முடிவில்லாத.

194. ஓலக்கடலேழும் - ஓசையையுடைய எழு கடல்களும். ஒன்றாய் - ஒன்றாகக் கூடி. உலகொடுக்கும் - உலகங்களை அழிக்கும். காலக் கடை - யுகத்தின் முடிவு. காலக்கடை கண்ணுக்கு; "ஓலக் கடனெருப்பி னுவகேழு முருகும், காலக் கடையினுங் கொடியகட் கடைகளே" (தக்க. 81.) ஞாலத்தை வீட்டி - உலகத்தை அழித்து.

(பி - ம்.) 'காலக் கடலனைய', 'காலக் கடலன்ன'

195. வீட்டி வினைமுடிக்க வெங்கால தூதுவர்கள்
கோட்டி யிருக்குங் குவிமுலையாள்—நாட்ட

196. வடிவின் மருங்குலாண் மாரனைப்போன் மேலோர்
முடிவி லுணர்வை முடிப்பாள்—கடிதொடிந்து

197. போகா தொழியா திடையென்று போய்முடியல்
ஆகாமை கைவளரு மல்குலாள்—பாகாய

[பந்தாடுதல்]

198. சொல்லி யொருமடந்தை தோழியைத் தோள்வருந்தப்
புல்லி நிலாமுற்றம் போயேறி—வல்லிநாம்

199. சேடிய ரொப்ப வகுத்துத் திரள்பந்து
கோடியர் கண்டுவப்பக் கொண்டாடி—ஓடினுல்

---

195. வினை முடிக்க - தம் தொழிலை நிறைவேற்ற. கோட்டியிருக்கும் - கூட்டமாக இருக்கும். நாட்ட - நாட்டுவதற்கு.

196. வடிவு இல் மருங்குலாள் - வடிவமில்லாத இடையையுடையாள். மாரனைப் போல் - மன்மதனைப் போல. மாரனைப்போல் நாட்ட வடிவில் மருங்குலாள் எனக்கூட்டுக. இடைக்கு மன்மதன் உவமை; உரு தோன்றாமைபற்றி; "பாரிலிடைக் காவும் பைங்கொடியும் பூங்கொம்பும், மாரனுடம்பும்" (உவமான சங்கிரகம், 10.) மேலோர் - முனிவருடைய. உணர்வை - அறிவை. கடிது - விரைந்து.

(பி - ம்.) 'கடிதோடிப்'

197. போகாதொழியாது - போய்விடும்; அதன் நுண்மை பற்றியும் தாங்கும் கொங்கை முதலியவற்றின் பாரம் பற்றியுமாம். முடியலாகாமை - முடிவில்லாதபடி. கைவளரும் - பக்கங்களில் இடமகன்று வளரும்; கை-பக்கம்; 230; 'இருகையு மிரைத்து மொய்த்தார்' (கம்ப, 2. 3 : 83.)

198. பாகாய சொல்லி - தேன்பாகைப்போன்ற சொல்லை யுடையாளாகிய. ஒரு மடந்தை - ஒப்பற்ற மடந்தைப் பருவத்தாள். புல்லி-தழுவி. நிலாமுற்றம் - நிலவொளி பரவும் மேற்றளம். வல்லி : விளி.

199. ஒப்ப வகுத்து - இரண்டு திறத்திலும் சமமாகப் பிரித்து. கோடியர் - கூத்தர்; (குலோத். உலா, 305; 'கோடியர் தலைவ கொண்டதறிந்' (பொருந. 57.) ஓடினுல் - யான் தோற்றால்; "ஓடாததானை" (சீவக. 7.); 'ஓடாததானை நளனென் றுளனொருவன்' நள. 1. 18.)

(பி - ம்.) 'கண்டிருப்பக்' 'ஆடினுல்'

200. என்மாலை நீகொள்வ தியாங்கொள்வ தெங்கோமான்
தன்மாலை வாங்கித் தருகென்று—மின்னனையாள்

201. வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கக்
கட்டிக் கனபந்து கைப்பற்றி—ஒட்டிப்

202. பொருதிறத்துச் சேடியர்தம் போர்தொலையத் தானே
இருதிறத்துக் கந்துகமு மேந்திப்—பெரிதும்

203. அழுந்து தரளத் தவைதன்னைச் சூழ
விழுந்து மெழுந்து மிடைய—எழுந்துவரி

204. சிந்த விசிறு திரையி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப—முந்திய

---

200. கொள்வது: வியங்கோள்; "கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" (சிற். 87.) எம் கோமான் மாலை: 209. மின்னனையாள்: மடந்தை.

(பி - ம்.) 'யான் கொள்வதென்' 'தரிலென்று பொன்னனையாள்'

201. வட்டித்து - சபதம் செய்து; 217; 'வெங்கிடு வார்போற் போவர் வட்டித்து விளித்து மீள்வர்" (திருவிளை. அங்கம்வெட்டின. 17.) அளகம் - முன்நெற்றியில் சுருண்டு தொங்கும் மயிர்; 174. பர்தாட அள கத்தைக் கட்டுதல்; "கன்னிக் கூழை, பொன்னிழைணிற் புடையெடுத் தியாத்து", (பெருங். 1. 34: 192-3.) வார் - கச்சு. கனபந்து - மிக்க பந்துகளை.

(பி - ம்.) 'வட்டித்த கொந்தளமும்'

202. ஒட்டிப் பொருதிறத்து - பந்தயம் வைத்து விளையாடுகின்ற போது. தானே - தான் ஒருத்தியாகவே. இருதிறத்துக் கந்துகமும் - இரண்டு வகையாருடைய பந்துகளையும்.

203. அழுந்து தரளத்து அவை - பதித்த முத்துக்களாற் செய்யப் பட்ட அப்பந்துகள். மிடைய - நெருங்குதலால். உவரி - கடல்; இங்குப் பாற்கடலைக் குறித்தது.

*(பி - ம்.) 'அழுந்துறு தாளத்து', 'அழுந்துறு தானத்து,' 'அழுந்து பூந்தாராமவை தன்னைச் சூழ', 'எழுந்து தரளத் திவைதன்னைச்'

204. விசிறு - வீசுகின்ற. திரை - அலை. வனசமகள்-தாமரையிற் றோன்றிய திருமகள்; 2: 69. ஏய்ப்ப - ஒப்ப. தன்னைச் சூழவுள்ள முத் துப் பந்துகளுக்குப் பாற்கடலும், அவற்றின் நடுவேயுள்ள மடந்தைக்குத் திருமகளும் உவமை.

(பி - ம்.) 'விசிறுந் திரையின்'

205. செங்காந்த ளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்பத்—தங்கள்
206. நுடங்குங் கொடிமருங்கு ளெந்தசைந்த தென்றென்
றடங்குங் கலாப மரற்றத்—தொடங்கி
207. அரிந்த குரலினவா யஞ்சீ றடிக்குப்
பரிந்து சிலம்பு பதைப்ப—விரிந்தெழும்
208. கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல வோதியின்மேல் வண்டிரங்க—அக்கோதை

204-5. முந்திய - முற்பட்ட : பந்தாடுதற்குக் கை இன்றியமையாத தாகலின் இவ்வாறு கூறினர். செங்காந்தளங்கை - செங்காந்தட் பூவைப் போன்ற உள்ளங்கை. அங்காந்து - வாய் திறந்து. தங்கள் என்றது, மருங்குல் தங்களுக்கு உரிய இடமானதுபற்றி.

(பி - ம்.) 'அங்காந்த'

206. நுடங்கும்-அசையும். கொடி மருங்குல் - கொடியைப்போன்ற இடை. அசைந்தது - முன் இருந்த தன்மை கெட்டது; 'அசைவென்பது பண்டை நிலைமை கெட்டு வேறொரு வாறாகி வருந்துதல்' (தொல்.மெய்ப்.5, பேர்.) அடங்குகலாபம் - இதுவரையிலும் ஓசையில்லாமல் அடங்கியிருந்த மேகலைகள் ; கலாபம் - பதினாறுமணி வடங்களாலான ஓர் அணி.

(பி - ம்.) 'நொந்தொசிந்த தென்று'

207. அரிந்த குரலினவாய் - மெல்லிய குரலையுடையனவாய். அஞ்சீறடிக்கு - அழகிய சிறிய பாதங்களுக்கு. பரிந்து - அன்புற்று. அடி பெயர்த்து ஓடிப் பந்தாடுவதால் பாதங்கள் நோமேயென்று சிலம்புகள் பதைப்ப. கலாபமும் (206.) சிலம்பும் தம் இருப்பிடங்களுக்கு உண்டாகும் கேட்டை உணர்ந்து அரற்ற, பதைப்ப. விரிந்து எழும் - விரல்கள் விரிந்து புறப்படுகின்ற.

(பி - ம்.) 'பரிந்த' 'விரிந்த மலர்க்'

208. மைக்கோல ஓதியின் மேல் - மையைப்போன்ற அழகை யுடைய கூந்தலின்மேல் : "மையுக் கன்ன மொய்யிருங் கூந்தல்" (மதுரைக். 417) ; மை - மேகமெனினும் ஆம். இரங்க - இரங்குவதுபோல ஒலிக்க. வண்டு இரங்கியது, கையும், இடையும் அடியும் வருந்துதல் கண்டு; ஓகார இடைச்சொற்கள் இங்குத் தெரிநிலைப் பொருளில் வந்தன;' 'அலகோ வில்லா வந்தண ரேயோ வறமேயோ, உலகோ வானோ வும்பர் கொலோவீ துணரேமால்' (கம்ப. 1. மிதிலைக் : 29) ; 'கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ, நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ' (நள. 3: 92) ; ஐயமும் ஆம். அக் கோதை - மாலைபோன்ற அம்மடந்தை.

209. பந்தாடி வென்று பருதி யகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று—பைந்துகிற்

210. றுகிலை பிடித்தலைக்கும் போதிற் றனிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்டச்—சேனை

211. மிடையப் பவளமு நித்திலமு மின்ன
அடையப் பணிலங்க ளார்ப்ப—புடைபெயர

212. வார்ந்து மகர வயமீன் குலமுழுதும்
போந்து மறுகு புடைபிறழச்—சேர்ந்து

---

209. பருதி அகளங்கன் - சூரியனைப் போன்ற ஒளியையுடைய விக்கிரம சோழன்; "செஞ்ஞா யிற்றுக் கவினை மாதோ" (புறநா. 4: 16.) பருதி குலத்து அகளங்கன் என்றலும் ஆம்; அகளங்கன்: 152. சந்தாடு தோள் மாலை-சந்தனத்தை அளைந்த தோளில் அணிந்த மாலையை. தா என்று - தோழியை வாங்கித் தா என்று; 200.

210. பைந்துகிற்றுகிலை பிடித்து - பசிய துகிலாகிய ஆடையைப் பிடித்து. அலைக்கும்போது - துன்புறுத்தும் சமயத்தில். தனிக் குடைக்கீழ் - ஒப்பற்ற குடையின்கீழ்; என்றது மற்ற அரசர் குடைக்கு முன்னே சோழன் குடை விளங்குதல்பற்றி; "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும், அறத்துவழிப் படூஉந் தோற்றம்போல, இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை, உருகெழு மதியி னிவந்துசேண் விளங்க" (புறநா. 31 : 1-4.) இரட்ட - மாறி அசைய.

(பி - ம்.) 'போதிற் சயதுங்கன்'

211. பவளம் - மகளிருடைய உதடு. நித்திலம் - அவருடைய பற்கள். அடைய - முழுவதும். பணிலங்கள் - சங்குகள். புடைபெயர - பக்கத்தில் பெயரும்படி.

212. வார்ந்து - நீண்டு. மகரவயமீன் - சுறுவாகிய வன்மையையுடைய மீன்; என்றது மகளிருடைய கண்களை; "இகல்விழி மகரமு மம்மகரம் பொரு விருமகரமு மாட" (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், 17.) மகரம் புடைபெயர்ந்து பிறழும் தன்மையுடைமையால் கண்ணுக்கு ஆகுபெயராயிற்று.

(பி - ம்.) 'மறுகும் வயமீன்', 'மகளிர் வயமின்'- 'மறுகும்படி பிறழ' 'மறுகின்புடை புரளச் சேர்ந்த'

213. பதலை முழங்கப் பகட்டேற்றி விட்ட
மதலையர் முன்னர் மலிய—விதலையராய்த்

214. தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் தன்னடைந்து
வாழும் பரதர் மருங்கீண்ட—வீழுந்திக்

215. கன்னியு நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் தோயும் புகார்விளங்க—மன்னிய

216. செங்கோற் றியாக சமுத்திர நண்ணுதலும்
தங்கோ மறுகிற் றலைப்பட்டுத்—தங்களில்

---

213. பதலை . ஒருவகை வாத்தியம்; "பதலை யொருகண் பையென வியக்குமின்" (புறநா. 152 : 17); "பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்" (குறுந். 59 : 1.) பகட்டு ஏற்றிவிட்ட - யானையின்மேல் ஏற்றிவிட்ட. மதலையர் - மைந்தர்; மதலை (பி - ம்.) - ஒருவகைக் கப்பல்; "மகரமால் கடலையல்லாற் சிறுகய மதலை சேரா" (சூளா. அரசியற் 42.) ஒரு வகை வாத்தியமும் ஆம்; புறநா. 152 : 18. விதலை - நடுக்கம்

(பி - ம்.) 'மதலைகண்'

214. கிளை - சுற்றத்தாரை. பரதர் - கூத்தர்; போர்க்களம் பாடும் பொருநரும் ஆம்; பரதவர் என்னும் வேறு பொருளும் தோற்றியது. வீழ் உந்தி - விரும்பப்படும் சுழிகளையுடைய.

(பி - ம்.) 'தண்டடைந்து'

215. கன்னி - குமரிநதி. புகார் - ஆற்றுமுகம்; "புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" (புறநா. 30 : 12); காவிரிப்பூம் பட்டினம். கண்ணிகள் 211-216 முடிய, புகார்த் துறைமுகச் சிறப்பமைந்த சிலேடை. இது, கன்னி முதலான நதிகள் தங்களைத் தூய்மை செய்துகொள்ளப் பொன்னி நதியில் வந்து படிகின்றன என்னும் புராண வரலாற்றை உட்கொண்டது.

(பி - ம்.) 'தோயப்புகார்'

216. தியாக சமுத்திரம்: விக்கிரம சோழன் பட்டங்களுள் ஒன்று; இப்பெயருடைய ஊரொன்று கும்பகோணத்தின் பக்கத்திலுள்ளது. 'இவ் ஊர் விக்கிரம சோழன் பட்டப்பெயரைக் கொண்டது: திருக்கோடி காவல் கோயில் தியாக சமுத்திரம் என்று பெயரிடப்பட்டது' (சோழர்கள், Vol. 2. பக். 631); 331.

210-16. இக்கண்ணிகளில் விக்கிரமசோழனைத் தியாகசமுத்திரம் என்னும் அவனுடைய பட்டப் பெயருக் கேற்பக் கடலாக உருவகம் செய்திருப்பது பாராட்டற்குரியது. கோ மறுகு-இராசவீதி. தலைப்பட்டு-கண்டு,

217. ஒட்டிய வொட்ட முணராதே தோள்வளையும்
கட்டிய மேகலையுங் காவாதே—கிட்டித்

218. தொழுதா ளயர்ந்தா டுளங்கிஞள் சோர்ந்தாள்
அழுதா ளொருதமிய ளாஞள்—பழுதிலாக்

219. காக்குந் துகிலு மிலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று—வீக்கும்

220. மணிக்கச்சுந் தம்முடைய வான்றூசுங் கொங்கை
படிைக்கக் கடைக்கண்கள் பாரா—அணிக்கமைந்த

221. குன்றுத நித்திலக் கோவையும் பொன்னிறத்த
பொன்றுத பட்டும் புனைகென்று—நின்று

---

217. தங்களில் ஒட்டிய ஒட்டம் - மடந்தையும் அவளுடைய சேடியரும் தம்முள் செய்த பந்தயம்; 199-200. 'ஒட்டினே னுன்பணைய மோதென்ன', (நள. உ. 45.) தோள்வளையும் மேகலையும் உடல் மெலிந்தமையால் நழுவின என்பது கருத்து. கிட்டி - விக்கிரம சோழனை நெருங்கி.

218. துளங்கிஞள் - நடுங்கிஞள். ஒரு தமியளாஞள் - நாண்முதலான குணங்கள் நீங்க மிகத் தனித்தவளாஞள்; 160.

219. கலை - மேகலை. போக்கும் நிதம்பம் - இழந்த அல்குல். புனைகென்று - அணிந்துகொள்ளுகவென்று. வீக்கும் - கட்டிய.

220. மணிக்கச்சு - இரத்தினங்கள் கோக்கப்பெற்ற முலைக்கச்சு; பொலன்கச்சு 244. வான்தூசு - சிறந்த உத்தரிய ஆடை; கச்சும் தூசும் கொங்கைக்கு; 'கச்சிட்டுக் கட்டுவது கொங்கைகள் தாம் காணமல்; துகிலிட்டு மறைப்பது அவற்றைப் பிறர் காணுமல்' (தக்க. 83, உரை.) கொங்கை பணிக்க - துகில்கள் நிதம்பத்துக்கு அளிக்க. பாரா - பார்த்து. அணிக்கு அமைந்த - ஆபரண மாதற்குப் பொருந்திய.

(பி - ம்.) 'தன்னுடைய வான்றூசும்' 'படைக் கண்கள் பாரி லணிக்கமைந்து'

221. நித்திலக் கோவை - முத்துமாலை; என்றது கண்ணீர்ப் பெருக்கை; "பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை பரக்கவைவேற், கண்பட்ட முத்த வடங்கண்டுங் காக்கிலன் காடவர்கோன்" (பெருந். 902.) பொன்னிறத்த பட்டு என்றது பசலையை.

(பி - ம்.) 'நித்திலத்த கோவையும்'

222. கொடுத்தன கொங்கைகளுங் கொண்டன தானும்
அடுத்தனர் தோண்மே லயர்ந்தாள்—கடுத்துக்

223. கவரு மனங்கனுடன் கைகலந்த தன்றித்
தவரு முதுகிளவித் தாய—ரவரெங்கும்

224. கூசினர் சந்தம் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினு ராலி பொழிந்தெழுந்தார்—வீசினர்

225. இட்டார் நிலவி லிளந்தென்ற லுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தணிந்தார்—விட்டாரோ

---

222. கண்கள் நித்திலக்கோவையையும் பட்டையும் கொடுத்தன. கொங்கைகளும் கோவையையும் பட்டையும் கொண்டன. தானும் - மடந்தையும். அடுத்தனர் - பக்கத்திலுள்ளார் கடுத்து - சினங்கொண்டு.

(பி - ம்.) 'அடுத்தன தோன்றுமல்,' 'அடுத்தன தோண்மேல்' 'தடுத்துக்', 'எடுத்துக்'

223. கவரும் - உயிரைக் கவரும். தவரும் = தவறும்; எதுகை நோக்கித் திரிந்தது. முதுகிளவி-முதுமையினல் தளர்ந்த சொல்லுடைய. தாயர் - ஐவகைத்தாயர்; (16.)

(பி - ம்.) 'கைகலந்த போரில்'

224. கூசினர் - மனம் நடுங்கினர். சந்தனத்தைப் பனி நீரிலே குழைத்து. ஆலி - நீர்த்துளியை; "ஆலிவெந்து", "ஆலியுங் கடிதிற் புலர்ந்து" (தக்க. 176, 184.) வீசினர் - ஆடையினல் வீசினர். சாமரை, விசிறி முதலியன கொண்டு வீசினர் என்றலும் ஒன்றும்.

(பி - ம்.) 'சாந்து பனிநீர்' 'பொழிந்தொழிந்தார்'

225. நிலவில் இட்டார், இளந் தென்றலும் கொணர்ந்து சுட்டாரென்றது மடந்தைக்குத் தென்றல் துன்பம் செய்தல் பற்றி; "இளந் தென்றலே வட வானல மென்னும்" (சங்கரநயினர் கோயி லந்தாதி, 9.) குளிரி - கல்லாரம்; பரி. 11 : 103, உரை; குளிரி - செங்கழுநீர்; பெருங். உ. 18 : III; நீர்ப்பூமோம. விட்டாரோ என்றது அவற்றின் மேலும் துன்பஞ் செய்தார் என்பது குறிப்பெச்சம்,

(பி - ம்,) 'குளிரி தொடுத்தெடுத்தார்,' 'குளிரத்தொடுத் தணிந்தார்'

226. பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போல்
உள்ள முயிரை யுடன்கொண்டு—வள்ளல்பின்
227. ஓதை மறுகி லுடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள்—மாதரில்

[அரிவை]

228. வாரி படுமமுத மொப்பாண் மதுகரஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி—மூரித்தேர்த்
229. தட்டுஞ் சிறுகப் பெருகி மரகதத்தாற்
கட்டுங் கனபொற் கலாபாரம்—பட்டும்
230. துகிலுங் கரப்பச் சுடர்பரப்பக் கைபோய்
அகல்கின்ற வல்கு லரிவை—இகலி
231. ஒருக்கி மருங்குகடிந் தொன்றினைவந் தொன்று
நெருக்கிய மாமை நிரம்பித்—தருக்கி

226, பள்ளத்திற் படரும் புனல்: "தள்ளரிய பெருநீதித் தனி யாறு புகமண்டும், பள்ளமெனுந் தகையானை" (கம்ப. 1. குலமுறை: 21;) 'பள்ளநீர் வெள்ளமன்ன பரதனை' (கம்ப, 2. திருவடி சூட்: 118,) உள்ளத்தையும் உயிரையு முடன்கொண்டு. வள்ளல் - சோழன்.

(பி - ம்.) 'பரியும் பெரும் புனல்' 'உள்ளவுயிரை' 'வள்ளல் பிரான்.

227. பேதை என்றது மடந்தையை; பருவப்பெயரன்று.

(பி - ம்.) 'போதுமறுகில்'

228. வாரி - பாற்கடல். மதுகரம் - வண்டுகள். வேரி - தேன்; இருவேரி யெனலுமாம். கோதை - மாலையை யணிந்த. மூரி - வன்மை.

(பி - ம்) 'அமுதை யொப்பாள்'

229. கலாபாரம் - மேகலை.

(பி - ம்) 'மாகதத்திற்' 'பெருகு மரகதத்தால்' 'கலாபமும்', 'கலாபாரப்'

230. பட்டும் துகிலும் - தானணிந்த பட்டாடையும் துகிலாடையும். கரப்ப - தம் ஒளி மறையும்படி. சுடர் பரப்ப - பச்சை யொளியைப் பரவச்செய்ய கலாபாரம் சுடர் பரப்ப என்க. கைபோய் - கை கடந்து அகன்று; இடமகன்று என்னலும் ஒன்றும். இகலி - மாறுபட்டு.

231. ஒருக்கி - நுணுகச் செய்து. கடிந்து - விலக்கி. மாமை - பேரழகு; (185).

(பி - ம்.) 'நெருக்கியவமைய'

232. இடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்—தடங்கொண்
233. டிணைத்துத் ததும்பி யிளையோர்க ணெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து—பணைத்துப்
234. பெருமை யுவமை பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னம்—கருமை
235. எறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு—மறித்து
236. மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத்—ததைத்த
237. கழுநீர் மலரின் கவினழித்து மானின்
விழிநீர்மை வாய்த்த விழியாள்—முழுதும்

---

232. இரண்டு குடமென்றது கொங்கைகளை. தடங்கொண்டு - மார்பி னிடத்தைக்கொண்டு,

233. இணைத்து - ஒன்றுக்கொன்று ஒப்பாகி. நெஞ்சம் பிணைத்து - மனத்தைக் கட்டி. முகடு - உச்சி. பணைத்து - பெருத்து.

234. உவமை - மற்றவற்றிற்குத்தான் உவமையாதல். அன்னம் - நடையால் அன்னம்போல்வாள்.

(பி - ம்.) 'பிறங்குநீர் ஞாலத்து'

234-5. கருமை எறித்து - கரிய நிறத்தை வீசி. இருபுடையும் - இரண்டு பக்கங்களிலும். குழையளவும் கொண்டு - காதணியினளவும் தனக்குரிய இடமாகக்கொண்டு; "குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா, உழைபொருதென் னுள்ளங் கவரா - மழைபோல், தருநெடுங் கைச் சென்னி தமிழ்நா ட்னையார், கருநெடுங்கண் போலுங் கயல்" (தண்டி. 33, மேற்.) மறித்து - மூக்கின்மேல் தாவி.

236. மதர்த்து - வன்மைகொண்டு. வரி-இரேகைகள். விழ - விழும் படி. நிறத்திற் பட்டு - உயிர் நிலையிலே தைத்து; 'நல்லார் கொழுங்கயற் றடங்கண் போலும், அம்புகொண்டு" (சீவக. 439.) ததைத்த - கையால் வலிய அலர்த்திய, இதழ்கள் அடர்ந்த.

(பி - ம்.) 'ததைத்துக்'

237. கழுநீர்மலர் கண்ணுக்கு உவமை: "கழுநீர் மலர்க்கண்ணாய்" (திணைமொழி ஐம்பது, 11); "கழுநீ ருண்கட் கடையி னோக்கி" (பெருங். 1. 40 : 43.) நீர்மை - தன்மை; என்றது மருட்சியை. 234-37. கண்ணி கன் கண்களின் சிறப்பு.

(பி - ம்.) 'கழுநீ ரிதழின்'

238. நெறிந்து கடைகுழன் று நெய்த்திருண்டு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி—நறுந்துணர்

239. வார்ந்து கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சோர்ந்து மிசையசைந்த சோலையாய்ச்—சேர்ந்து

240. திருவிருந்து தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள்—பொருகளிற்றின்

241. வந்து மறுகி லொருநாண் மனுகுலத்தோன்
தந்த பெரிய தனிமைக்கண்—செந்தமிழக்

---

238. நெறிந்து - நெளிப்புடையதாகி. கடை குழன்று - இறுதிப் பக்கம் சுருண்டு. நெய்த்து - எண்ணெய் பூசப்பெற்று. பெருமுருகு - பெரிய வாசனையை. தேக்கி - நிரம்பவுண்டு. 238 : "எண்ணெயு நானமு மிவை மூழ்கி...கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்" (சீவக. 164.) நறுந்துணர் - மணமுடைய பூங்கொத்துக்கள்.

(பி - ம்.) 'நெறித்துக்' 'நிறத்துணர்'

239. வார்ந்து - நீண்டு. வல்லி - கொடி. மாந்தளிரைத் தலையிற் சூடுதல் : தக்க. 625. கூந்தலுக்குச் சோலை : 'ஏலத் திமிரக் குழற்கா வில்" (திருவிளை. 3 : 2); "சொற்செறிந்த வம்புலாஞ் சோலையன்ன கூந்தலாள்" (தஞ்சைப் பெருவுடையாருலா, 151.)

(பி - ம்.) 'வாய்ந்து' 'கொழுங்தெழுந்து' 'மாந்தளிரைச்' 'அசைந்து'

240. திரு இருந்து - ஸ்ரீதேவி என்னும் ஆபரணம் இருக்கப்பெற்று; "செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்ப" (தண்டி. 33, மேற்.) மலர்களை அணிந்தமையால் 'வண்டுகளுக்கு விருந்தளிக்கும் குழலாள்' என்றார். 238-40 கண்ணிகள் குழலின் சிறப்பு.

(பி - ம்.) 'திருவிருந்த' 'சென்றிருந்த' 'பொருகளிற்று'

241. மறுகு - வீதி. ஒருநாளென்றது முன் பருவத்தில் வந்த நாளை. மனுகுலத்தோன் - வைவசுவத மனுவின் வழிவந்த சோழன்; மனுநீதிச் சோழனது குலத்தில் உதித்தவன் என்னலும் ஆம். செந்தமிழக்கோன் : 'தமிழப் பல்லவதரையர்' (நன். 224, மயிலை. மேற்.) என்பதைப் போன்றது.

(பி - ம்.) 'மனு குலக்கோன்' 'செந்தனிக்கோற்'

242. கோனே கவர்ந்தெம்மைக் கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோல்—பூநேர்
243. இணைக்கையுந் தோளு மிடுதொடிக ளேந்தா
துணைக்கண் டுயிற்றத் துயிலா—மணிக்கூந்தல்
244. போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள்—சோதி
245. அடுக்குங் கனபொற் றுகில்பேணு தல்குல்
கொடுக்குந் தெருணெஞ்சு கொள்ளா—நெடுக்கும்
246. கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழும்
நெருப்புக் குருகி நிறைபோய்—இருப்புழிப்
247. பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
ஆடிய தோகைக்கு மன்பின்றிக்—கூடிய

---

242. எம்மை யென்றது பின்னே வரும் தொடிகள் முதலிய வற்றை. தானே என்றது விக்கிரம சோழனை. பூநேர் - தாமரைப் பூவையொத்த.

(பி - ம்.) 'கவர்ந்தெம்மைக்' 'கொண்டன வெங்களுக்கு'

243. இணைக்கை - இரண்டு கைகள். துணைக்கண் - இரண்டு கண்கள். மணிக் கூந்தல் - நீல மணியைப்போன்ற கூந்தல்; "மணியறைந் தன்ன மாவீ ழோதி", "நீல மாமணி நிமிர்ந்தியன் றன்ன, கோலங் கொண்ட குறுநெறிக் கூழை" (பெருங். 2. 7 : 17, 15 : 90 - 91.)

(பி - ம்.) 'இடுதொடியு மேந்தாள்' 'துயிலாள்' 'மணக்கூந்தல்', 'பிணிக் கூந்தல்'

244. மறந்தும் புனையா என்றது மங்கலமாகச் சில மலர்கள் அணிதலையும் செய்யா என்றபடி; நெடுநல். 54, ந. தரியா-பொறுக்க மாட்டா.

(பி - ம்.) 'போதை' 'புனையாப் பொலங்கச்சு' 'படத்திரியா'

245. சோதி அடுக்கும் - ஒளி பொருந்திய. பேணுது - உடுத்தலை விரும்பாது. தெருள் - தெளிவு.

(பி - ம்.) 'கலை பேணுது' 'துகில் பெறு' 'ஒடுக்கும்'

246. அனங்கன் - மன்மதன். நெருப்பு என்றது காமத்தழல்; "கண்டர வந்த காம வொள்ளெரி" (குறுந். 305 : 1.) நிறை-மனத்தை ஒருவழியில் நிறுத்துதல். இருப்புழி - இருக்கும் சமயத்தில்.

(பி - ம்.) 'நெருப்புக் கருகி'

247. பூவைக்கும் - பூவையினிடத்தும். யாதும் பரிவின்றி-சிறிதும் அன்பில்லாமல். தோகைக்கும் - மயிலினிடத்தும். கூடிய - தன்னிடம் வந்து பேசக்கூடிய.

248. கிள்ளைக்குந் தம்மிற் கிளரு மிளவன்னப்
பிள்ளைக்கு மாற்றாள் பெயர்ந்துபோய்—கொள்ளை

249. பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படப்பை
நயக்கு மிளமரக்கா நண்ணி—வயக்களிற்று

250. மன்னன் குலப்பொன்னி வைகலு மாடுதிரால்
அன்னங்கா ணீரென் றழிவுற்றும்—சென்னி

251. பெருகும் புகாரடையப் பெற்றீரான் மற்றைக்
குருகுகா ளென்று குழைந்தும்—கருகிய

252. நீலக் குயிலினங்கா ணீர்போலுஞ் சோணாட்டுச்
சோலைப் பயில்வீ ரெனத்துவண்டும்—பீலிய

---

248. கிள்ளைக்கும் - கிளிப் பிள்ளையையும். இளவன்னப் பிள்ளைக்கும் - இளைய அன்னப் பார்ப்பையும். ஆற்றாள்-சமாதானம் செய்யாளாய். கொள்ளை - மிகுதியாக. 247-48 கண்ணிகளில் அரிவை வளர்க்கும் பறவைகள் கூறப்பெற்றன.

(பி - ம்.) 'மடவன்னப்', 'களியன்னப்'

249. பயக்கும் - கொடுக்கின்ற. பந்தர்ப் படப்பை - பந்தராக விளங்கிய தோட்டத்தையுடைய; "இடுமுட் படப்பை" (புறநா. 197 : 10.); "மூன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப், பந்தர் வேண்டாப் பலர் தூங்கு நீழல்" (புறநா. 320 : 1-2; 'பட்டமென் கமுகோங்கு படப்பை' (கம்ப. 1. நாட்டுப். 26.) நயக்கும் - விரும்பத்தக்க. இளமரக்கா-பூஞ்சோலை.

(பி - ம்.) 'பைந்தாட் படப்பை', 'பந்தர்ப் படாகை'

249-50. வயக்களிற்று மன்னன் - வலிய யானையையுடைய விக்கிரம சோழன். குலப்பொன்னி - சோழன்குலக்கொடியாகிய காவிரி. வைகலும் - நாள்தோறும். சென்னி - சோழன்.

251. புகார் - காவிரிப் பூம்பட்டினம். குருகு - நாரை.

(பி - ம்.) 'மற்றும், 'மாற்றிக்' 'கருதரிய '

252. நீர்போலும் - நீங்கள்போலும். சோணாட்டுச் சோலை - சோழ நாட்டிலுள்ள சோலைகளில். துவண்டும் - மெலிந்துவாடியும். பீலிய - தோகையையுடைய.

(பி - ம்.) 'ஞாலத்துப்'

253. பேரியன் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியும்
நேரியுஞ் சேர வெனநெகிழ்ந்தும்—நேரியன்

254. தண்டுணர்ப்பே ராரம் பலகா லுங் தைவந்து
வண்டுகாள் வாழ்வீ ரெனமருண்டும்-தொண்டிக்கோன்

255. மன்றன் மலயத்து வானருவி தோய்ந்தன்றே
தென்றல் வருவ தெனத்திகைத்தும்—நின்றயர்கால்

256. மன்னர்க்கு மன்னன் வளவ னகளங்கன்
முன்னர்ப் பணில முழங்குதலும்—மின்னிற்போய்ப்

257. பேணுந் திருமடனு மென்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பா னல்கூரக்—காணுங்கால்

---

253. பேரியல் - பெரிய மென்மையை யுடைய. மஞ்ஞை : விளி. கொல்லியும் நேரியும் சேரப் பெறுதிர் ; கொல்லியும் நேரியும் சோழனது மலைகள். நேரி - உறையூருக்குத் தெற்கேயுள்ள ஒரு மலை ; 271. மயில்கள் மலையில் வசிப்பன : 96. குறிப். நேரியன் - சோழன்.

(பி - ம்.) 'சேர்வீரென'

254. தண் துணர்ப் பேராரம் - குளிர்ந்த கொத்தாகிய பெரிய ஆத்தி மாலையை ; ஆரம் : 273. தைவந்து - தடவி. தொண்டிக்கோன் - தொண்டியென்னும் ஊருக்கு அரசன் ; தொண்டி : கீழ் கடற்கரையிலுள்ள ஓரூர் ; இது சோழர்க்குரியது (சிலப். 14 : 106-12. அடியார்.)

(பி - ம்,) 'தண்டுழாய் மாலை', 'தண்டுளவாம்பல்' 'வாழ்ந்தீரென' 'தெண்டிரைக்கோன்'

255. மன்றல் - சந்தன மரத்தின் மணத்தையுடைய. மலயத்து - பொதியில் மலையிலுள்ள. வானருவி-வானிலிருந்து விழும் அருவி; வாளருவி (பி-ம்.) - வாளைப் போன்ற வெள்ளிய அருவி ; "வாள்வனப் புற்றவருவி" (ஐங். 312); "வாணிறங்கொண்ட வருவித்தே" (கலி. 32 : 11.) நின்று அயர்கால் - நின்று சோரும் சமயத்தில்.

(பி - ம்.) 'வாளருவி' 'நின்றயர்வாள்'

256. அகளங்கன் : 59. பணிலம் - சங்கு. மின்னிற்போய் - மின்னலைப் போல விரைந்து சென்று.

(பி - ம்.) 'தன்னிற் போய்ப்' 'முன்னர்ப் போய்ப்'

257. மடன் - கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை; இது மகளிர் நாற்குணங்களுள் ஒன்று. என்றும் பிரியாத நாண்: "பெண்பாலவர்கட் கணியாய்ப்பிரி யாத நாணும்" (சீவக. 1967) நல்கூர-குறைய.

258. ஏய்ப்ப வெதிர்வந் திரவி யுருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்—போய்ப்பெருகும்

259. மீதா ரகலல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள்—சோதி

260. குழைய நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணைத்தாள்—பிழையாத

261. பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்—சென்னிக்குப்

262. பாராண் முலையாலும் பங்கயத்தா ளோளாலும்
வாரா விருப்பு வருவித்தாள்—ஓராங்கு

---

258. ஏய்ப்ப - இவளுக்கொட்ப. இரவி - சோழன்; "சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்" (தண்டி. 78, மேற்.); சூரியனென்னும் வேறொரு பொருள் தோற்றியது. இரவியைக்கண்டு பங்கயம் மலர்ந்தது; இரவி சோழனும், பங்கயம் அரிவை முகமும்.

(பி - ம்.) 'பொருவொளி' 'போய்ப்பெயா', 'போய்ப்பெயரும்'

259. அல்குல் புடைபெயர்ந்தாள்: சினைவினை முதலொடு முடிந்தது; அல்குலில் வீழ்கின்ற மேகலை என்னலும் ஆம்.

(பி - ம்.) 'மீதூர் கலையல்குல்'

260. நடு - இடை. பணைத்தாள்-பெருத்தாள்; அல்குல் கொங்கை தோள் இவை மூன்றும் பெருத்திருத்தல் உத்தம இலக்கணம்: 38 - 9. பிழையாத - பருவத்திற் பொய்யாமல் வெள்ளம் வருகின்ற. பிழையாத பொன்னி; 40-41; "வாழிய வற்றாத காவிரி" (தக்க 812); 'வான் பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி' (பட்டினப் 5-6); தவாநீர்க் காவிரிப்பாவை' (மணி 3: 56.)

(பி - ம்.) 'நடுவொதுங்குங்', 'நடுவொதுங்கக்'

261. பொன்னித் துறைவன் - சோழன். தன்னிற் பிறரின்மை - தன்னையன்றி வேறு சிலர் இல்லாமையை. சென்னிக்கு - சோழனுக்கு.

262. பாரான் - பூமிதேவி. பங்கயத்தாள்-திருமகள்; 33. ஓராங்கு-ஒருபெற்றிப்பட; "ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே" (புறநா. 46 : 19.)

(பி - ம்.) 'வாராத வின்பம்' 'வருவித்தாள் ஓரணங்கு'

[தெரிவை]

263. கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரீன்
போது புலராப் பொலங்கொம்பு—மீது

264. முயலா லழுங்கா முழுத்திங்கள் வானிற்
புயலா லழுங்காப் புதுமின்—இயல்கொண்

265. டெழுதாத வோவிய மேழிசைய வண்டு
கொழுதாத கற்பகத்தின் கொம்பு—முழுதும்

266. இருளாக் கலாபத் திளந்தோகை யென்றும்
தெருளாக் களியளிக்குந் தேறல்—பொருளால்

267. வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கும்
அருந்தத் தெவிட்டா வமுதம்—திருந்திய

268. சோலைப் பசுந்தென்ற றூது வரவந்தி
மாலைப் பொழுதுமணி மண்டபத்து—வேலை

---

263. கொழும்பாகு - கொழுவிய கரும்பின் பாகு. தளிரீன் - தளிரை ஈனுகின்ற. போது புலரா - மலர்கள் வாடாத. பொலங்கொம்பு - பொன்னலாகிய கொம்புபோல்வாள்.

(பி - ம்.) 'கொய்தளிரின்'

264. மீது முயலால் - தன் மீதுள்ள முயல்போன்ற கறையால். அழுங்கா - ஒளி கெடாத. புயலால் - மேகத்தால்.

265. எழுதாத - ஓவியர்களால் எழுதப்படாத. எழிசை - ஸப்த ஸ்வர பேதங்கள். கொழுதாத - குடையாத; 'கொழுதிவண் டிமிருந் தாரான்' (நைடத. சுயம்: 165.) கற்பகத்தின் கொம்பு; "கற்பகத்தின் பூக்கொம்போ" (பெரிய. தடுத்தாட்கொண்ட. 140.)

(பி - ம்.) 'வோவ மெழுசிறைய' 'கற்பகத்தின் கொந்து'

266. கலாபத்து - தோகையையுடைய. இளந்தோகை - இளைய மயில் போல்வாள். தெருளாக்களி - தெளிய முடியாத மயக்கம். தேறல் - தெளிவு, தேன்.

(பி - ம்.) 'இளந்தோகை யார்க்கும்'

267. (பி - ம்.) 'அமுதம் பொருந்திய'

268. மணிமண்டபத்து - மணிகளாலாகிய மண்டபத்தில். வேலை - கடலைப் போல.

(பி - ம்.) 'தூது வர வந்த மாலைப்பொழுதின் கண்'

269. விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த பனிக்கற்றை தூங்கப்—பரிந்துழையோர்

270. பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவன் முருகுயிர்ப்பத்—தேசியப்

271. பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடும்
சேர வினிதிருந்த செவ்விக்கண்—நேரியும்

[தசாங்கம்]

272. கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழி யயிரா பதப்பகடும்—ஆழியான்

---

269. விரிந்த - பரப்பையுடைய. நிலாமுன்றில் - நிலாமுற்றத்தில். மகரப்பேழ்வாய் - மகரத்தின் வாயைப் போலப் பெரிய வாயினின் றும்; "நிலவுப் பயன்கொள்ளு நெடுவெண் முற்றத்துக், கிம்புரிப் பகுவா யம்பண நிறையக், கலிழ்ந்துவீ ழருவிப் பாடவிந்து" (நெடுநல். 95-7); "திருந்து வாய்ச்சுறவ நீர்கான் ஞெய்யென, பெருந்தெரு வுதிர்தரு பெய லுறு தண்வளி" (நற். 132 : 2-3); "காதுதாழ், வான்மகர வார்குழை யாய் மாதவர்க் கூணீந்தான், தான்மகர வாய்மாடத் தான்" (ஏலாதி, 43.) உழையோர் - பக்கத்திலுள்ள மகளிர்.

(பி - ம்.) 'நிலா முன்றிலின் கண்' 'மணிக்கற்றை' 'பரிந்திளை யோர்', 'பரிந்திணையோர்'

270. மௌவல் - மல்லிகை. முருகு - வாசனை. தேசியம் - இசை வகையில் ஒன்று; தேசிகம் (பி - ம்.) - ஒளி; சீவக. 1480.

(பி - ம்) 'தேசிகப்'

271. நேரி - சோழனுக்குரிய மலை; 253.

272. கோழி - உறையூர், 328. வேங்கை : கொடி; இராசராச. 91. முப்பணை - மூன்று முரசுகள் : 28, 121. கோரம் : சோழன் குதிரையின் பெயர்; "ஆரந்தழுவுந் தடந்தோ ளகளங்கன், கோரந் தொழுத கொடிக்கு" (தண்டி. 40, மேற்.) பாழி - வன்மை. அயிரா பதப்பகடு : விக்கிரம சோழன் யானை. அரசர் ஏறும் யானையை ஐராவதம் என்றல் மரபு : சீவக. 3046. ஆழியான் : சோழனைத் திருமாலாகக் கூறியது.

273. சூடிய வாரமு மாணையுஞ் சோணாடும்
காடு திரைத்தெறியுங் காவிரியும்—பாடுகெனக்
274. கூன லியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேன லரசனுந்தன் வில்லெடுத்தான்—தேனிமிர்
275. தந்திரி யாழ்ப்பாணன் றைவந்தான் றைவந்தான்
வெந்திறன் மாரனுந்தன் வில்லினாண்—முந்த
276. நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
திறன்மதனு மம்பு தெரிந்தான்—விறலியொடும்

---

273. ஆரம் - ஆத்திமாலை. ஆணை - செங்கோல் அதிகாரம். காடு திரைத்து எறியும் - காடுகளைச் சுருட்டி எறிகின்ற. பாடுகென - பாடுக என்று தெரிவை பணிக்க. கண்ணிகள், 171-73, சோழனுக்குரிய தசாங்கம் கூறுவன.

(பி - ம்.) 'சூடிய மாலையும்' 'திரைதிரைக்கும்' 'திரைத்திருக்கும்', 'திரைத்திரைக்கும்'

274. கூனல் யாழ் - வளைந்த கோட்டையுடைய யாழை. வேன லரசன் - வேனிற் பருவத்துக் கரசனாகிய மன்மதன்; வேனில் வேன லெனவும் வழங்கும்; 109 "இளவேனல் வந்ததா லென்னாங்கொ லின்று, வளவேனற் கண்ணி மனம்" (சிலப். 8 : இறுதிவெண்பா); "தளவேனன் மீதலருந் தாழ்வரைசூழ் நாடற், கிளவேனல் வந்த தெதிர்" (நள. 1. 21.) தேன் நிமிர் - தேனைப்போல நிமிர்ந்த; தேன் இமிர் - வண்டைப்போல ஒலிக்கும் எனினுமாம்.

275. யாழ்நரம்புக்குத் தேனொழுக்கு உவமை: "தீந்தேன், துளக் கறவொழுகி யன்ன துய்யறத் திரண்ட திண்கோல்", தீந்தேன், அணி பெற வொழுகி, யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" (சீவக. 559,722.) தந்திரி - நரம்பை. தைவந்தான்; தைவரல்: 'இசையை எழுப்பும் எண் வகைச் செயல்களுள் ஒன்று' (சிலப். 7 : 5, அரும்பத.) மாரன் தன் வில் லின் நாணைத் தைவந்தான்; தைவந்தான் - தடவினான்.

(பி - ம்.) 'தந்திரி யாழ்ப்பாணன் றடவந்தான்', 'தந்திரியும் பாணன் றடவந்தான்' 'வில்லினு ணூர்ந்து'

276. நிறை நரம்பு - நிறைந்த நரம்புகளை அமைத்து. நிலைதெரிந் தான் - ஸ்வர ஸ்தானங்களை ஆராய்ந்தான். அம்பு தெரிந்தான் - தெரிவையின்மேல் எய்வதற்கேற்ற அம்புகளை ஆராய்ந்தான்; "புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே" (கலி. 39 : 22.)

(பி - ம்.) 'பண்ணி யிசைதெரிந்தான்'

277. பாண ளொருபாணி கோத்தான் பலகோத்தான்
தூணி தொலையச் சுளிந்துவேள்—மாண
278. இசைத்தன பாண னியாழ்ப்பாணி யெய்து
விசைத்தன வேனிலான் பாணி—விசைத்தெழுந்த
279. வீணை யிசையாலோ வேனிலா னம்பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச்—சேணுலாம்
280. வாடை யனைய மலயா நிலந்தனையும்
கோடை யிதுவென்றே கூறினாள்—நீடிய
281. வாரை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்றாள்—ஊரெலாம்
282. காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
தாக்கும் பறையென்றே சாற்றினாள்—சேக்கைதொறும்

---

277. ஒரு பாணி - ஒரு பாட்டை. தூணி தொலைய - அம்புப்புட்டிலிலுள்ள அம்புகள் முற்றும் தொலையும்படி. வேள் சுளிந்து பலகோத்தான் என்க ; சுளிந்து - கோபங்கொண்டு. பல - பல அம்புகளை.

(பி - ம்.) 'தூணிகுலையச் சுளித்துவேள்'

278. யாழ்ப்பாணி இசைத்தன ; பாணி - பாட்டு. வேனிலான் பாணி விசைத்தன ; வேனிலான் பாணி-மன்மதனுடைய கைகள். விசைத்தன - வேகங்கொண்டன.

279. வாணுதல் - தெரிவை. வீழா - விழுந்து. மயங்கா-மயங்கி. சேண்உலாம் - நெடுந்தூரத்திலிருந்து உலாவுகின்ற.

(பி - ம்.) 'மனமயங்காச்'

280. வாடை அனைய-வடகாற்றைப் போன்ற குளிர்ச்சியையுடைய. மலயாநிலம் - தென்றற் காற்று. கோடை - மேல் காற்று.

(பி - ம்.) 'மலையா நிலத்தையும்' 'யிதுவென்று'

281. வாரை - கச்சினை. வனம் - அழகு. பனிநீரை நெருப்பு என்றல் : "செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச், சந்தனமென் றூரோ தடவினர் - பைந்தமிழை, ஆய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல், வேகின்ற பாவியேன் மெய்" (நந்திக்கலம்பகம், மிகைப்பாட்டு, 15.)

282. துடி - உடுக்கை. துடியை வெறுத்தல் : "கூடலன்னான், வடிக்கண் ணிரண்டும் வளாகர் காக்கும்வை வேலினளர், துடிக்கண் ணிரண்டுங்கள் குற்றலை யொன்றுந் துயின்றிலவே" (இறை. 30, மேற்.) மாரன் - மன்மதன். தாக்கும் பறை - அடிக்கின்ற பறை. சேக்கை தொறும் - தங்கு மிடங்களிலெல்லாம் ; சேக்கை - படுக்கையும் ஆம்.

(பி - ம்.) முரசென்றே'

283. வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றாள்—கோழிக்கோன்

284. எங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றாள்—கங்குல்

285. புலருந் தனையும் புலம்பினு ளாங்குப்
புலரும் பணிந்து பரவக்—குலகிரிசூழ்

286. ஆழிப் புவன மடைய வுடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—யாழின்

[யானையை நோக்கிக் கூறுதல்]

287. இசைக்கு மிசைமுதலா மெப்பகைக்கு மாற்று
துழைக்கு முயிர்தழைப்ப வோடிப்—பிழைத்தனளாய்

---

283. வீழும் நிலவை - விரும்புகின்ற நிலாவை. கோழி - உறையூர்.

284. மு: "நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும், நிறையு நிலைதளரா நீர்மை - அறநெறிசூழ், செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர், வெங்கோப மால்யானை வேந்து" (தண்டி. 75, மேற்.) கங்குல் - இரவு.

285. புலருந்தனையும் - விடியுமளவும். பரவ - புகழ. குலகிரி சூழ்தல் புவனத்திற்கு அடை.

(பி - ம்.) 'புலருந்துணையும்'

286. ஆழிப்புவனம் - கடலால் சூழப்பட்ட உலகத்தை. அடைய உடைய - பிறவரசர்க்கும் பொது என்பதின்றி முழுதும் தனக்கே உடைய. சூழி - முகபடாம். கடா - மதம். கடா யானை: 288.

287. இசை முதலான பகைகள்: 279-84-ஆம் கண்ணிகளிற் கூறப்பட்டவை. ஆற்றுது - பொறுக்க முடியாமல். உழைக்கும் உயிர் - வருந்துகின்ற உயிர்; "உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கிலா, தழைத்தய ருலகினுக்கு" (கம்ப. 4. வாலிவதை: 33.)

(பி - ம்.) 'முதலாவெப்பகைக்கும்' 'உயிர் தளிர்ப்ப,' 'உயிர் தளிப்ப'

288. முட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கடவுட் கடாயானை—யெட்டும்

289. தரிக்கு முலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கு மயிரா பதமே—செருக்கிப்

290. பொருந்த நினையாத போர்க்கலிங்க ரோடி
இருந்த வடவரைக ளெல்லாம்—திருந்தா

291. விதையம் பொருதழிந்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே—சிதையாத

---

288. திகிரிகிரி - சக்கரவாளகிரி. சக்கரவாளத்தில் கட்டப்பட்ட யானைகள்: "தறையடித் ததுபோற் நீராத் தகையவித் திசைக டாங்கும், கறையடிக் கழிவு செய்த கண்டகன்" (கம்ப. 4. வாலிவதை : 132.) கண்ணி, 289 : 58-9. கடாயானை ; 286.

(பி - ம்.) 'திகிரி வரையின்'

289. பரிக்கும் - தாங்கும். அயிராபதம்: 304. செருக்கி - தம் பலத்தையே பெரிதாக எண்ணி இறுமாந்து.

(பி - ம்.) 'உலகைத் தனிதரித்த' 'அயிரா பதமே தரிக்கப்'

290. பொருந்த நினையாத - சோழனோடு நட்பாகப் பொருந்த எண்ணுத. இருந்த - ஒளித்திருந்த. தோற்ற அரசர், மலை கடல் முதலியவற்றில் ஒளித்தல் மரபு ; தக்க. 62, உரை. கலிங்கர் வரைகளில் ஓடி ஒளிந்தமை; கலிங்கத். போர் பாடியது. 58-62.

(பி - ம்.) 'தடவரைகள்'

291. விதையம் - மேரு மலையை. பொருது - பகைத்து. அழிந்த-அகத்திய முனிவரால் அமுத்தப் பெற்று அழிவை யடைந்த. விந்தம் - விந்தியமலை ; கந்த. விந்தம் பிலம்புகு படலம் ; கம்ப. 3. அகத்தியப்: 39. புதைய - தரைக்குள் அழுந்தும்படி. வடவரைகளெல்லாம் புதைய நடந்த என இயைக்க ; இதனால் விக்கிரமசோழன் கலிங்கம் எறிந்து வென்றமை புலனாகும் ; 331. சிதையாத - கெடாத.

(பி - ம்.) 'பொருதழித்த', 'பொருதிகழ்ந்த', 'பொருதிழந்த'

292. திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கும்
அங்கட் பழங்குமரி யாற்றிற்கும்—தங்கள்

293. படிக்கும் பொருநிருப பன்னகங்கள் வீழ
இடிக்குந் தனியசனி யேறே—கடிப்பமைந்த

294. யாம முரசா லிழந்த நிறைநினது
தாம முரசு தரப்பெற்றேன்—நாம

---

292. திங்கட் குலத்திற்கும் - சந்திர குலத்தின் பெருமையை நாட்டு தற்கும். தெய்வப் பொதியில் - அகத்திய முனிவர் வாழும் தெய்வப் பொதியில்: "செய்ய தமிழ்முழங்கத் தெய்வப் பொதியிலாய்" (இராச ராச. 67.) அங்கண் - அழகிய இடங்களையுடைய. குமரியாறு: தமிழ் நாட்டின் தெற்கெல்லையாகிய ஓர்யாறு; இது நெடுங்காலத்துக்குமுன்னே கடல் கொள்ளப்பட்டதென்பது; சிலப். 8 : 1-2-ஆம் அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய விரிவுரையால் அறியப்படும். குமரியாறு கடல்கொள்ளப்பட்டு முன் அழிந்ததுபற்றிப் பழங்குமரியாறு என்றார். இந்நதியே கன்னி நதி எனவும் வழங்கும்; 215.

(பி - ம்.) 'அங்கப்பழங்குமரி'

293. தங்கள் படிக்கும் - தங்கள் நாட்டைப் பெறுவதற்கும். நிருப பன்னகங்கள் - பகை அரசர்களாகிய பாம்புகள். அசனி என்பதற்கேற்பப் பன்னகங்கள் என்றார். இடி பாம்புகளை வீழ்த்தல்; "இளைய தாயினுங் கிளையரா வெறியும், அருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅ" (புறநா. 58 : 7-8.) கடிப்பு-குறுந்தடி.

(பி - ம்.) 'நிருபர் பன்னகங்கள்'

294. யாமமுரசால் - யாமந்தோறும் அடிக்கப்படும் முரசால்; "எடகம்பொதி தார்பொருந்திய யாம பேரி யிசைத்தலால்" (கம்ப. 2. கைகேசி சூழ்வினை. 57.) தாமமுரசு - மாலையை யணிந்த முரசு. நாம - அச்சத்தைத் தரும்.

(பி - ம்.) 'பெற்றே நாம,' 'பெற்றே யேழ'

295. விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின்
புடைமணி யோசைப் புலர்ந்தேன்—தடைமுலைமேல்

296. ஆறு மலயக்கா லட்டசூ டுன்செவியில்
மாறுப் பெருங்காற்றுன் மாற்றினேன்—வேறுகக்

297. கூசும் பனித்திவலை கொண்டுபோ மென்னுயிர்நீ
வீசு மதத்திவலை யான்மீட்டேன்—மூசிய

---

295. விடைமணியோசை - காளையின் கழுத்திற் கட்டிய மணியின் ஓசை. செவிப்புண் - காதிலுண்டான புண். காதல் வயப்பட்ட மகளிரை விடைமணி ஓசை வருத்தும் என்பது நூல் வழக்கு. இது, மேயச்சென்று மாலையில் வீடு திரும்பிவரும் நிரையிலுள்ள விடையின் மணி ஓசை. இது அம்மாலைப் போதை அறிவிப்பதால் 'மாலை மலருமிந் நோய்' (குறள், 1227.) என்றபடி, செவியிற் புண்போலத் துயரை எழுப்பி வருத்தும். விடை மணி யோசை வருத்துதல் ; "தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்கும்...அயர்ந் தாள்" (இரத்தினச் சுருக்கம், 6) ; "நிரையுறு மூர்பு மரையிரு ணடுநாள், நல்லே றியங்குதோ றியம்பும், பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே" (குறுந். 190 : 5-7.) நின்புடைமணியோசை - நின்னுடைய இரு பக்கங் களிலுமுள்ள மணிகளின் ஓசையால். புலர்ந்தேன் - தீரப்பெற்றேன். தடை முலை - பெருத்த முலை ; "அம்பணைத் தடைஇய மென்றோள்" (நெடுநல். 149) ; "தடைஇத் திரண்ட நின்றோள்" (அகநா. 218 : 8.)

(பி - ம்.) 'ஓசை புலர்ந்தேன்' 'தடமுலைமேல்'

296. ஆறு மலயக்கால் - வெப்பம் ஆறுத தென்றற்காற்று. சூட்டை மாற்றினேன்.

(பி - ம்.) 'ஊறு மலயக்கால்' 'மாறு மலயத்தால் மாறினேன்'

297. கூசும் - நடுங்கும். பனித்திவலை - பனித் துளிகள். வேறுகக் கொண்டுபோம் - என் உடலைவிட்டு வேறாகப் பிரித்துக் கொண்டுபோம். மதத்திவலை - மதத்துளிகள். மூசிய - நெருங்கிய.

(பி - ம்.) 'வீசுங் கரத்திவலையான்'

298. காருலா மோதக் கடல்முழங்க வந்த துயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன்—பேரிரவில்

299. என்மே லனங்கன் பொரவந்த வின்னலெல்லாம்
நின்மே லனகன்வர நீங்கினேன்—இன்னும்

300. கடைபோக வென்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோகப் போதும் பொருப்பே—விடைபோய்நீர்

301. ஆட்டுந் தடங்கலக்கின் மாரற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய்—கேட்டருளாய்

---

298. காருலாம் - மேகங்கள் உலாவுகின்ற. ஓதக்கடல் முழங்க - நீரையுடைய கடலொலித்தலால்; ஓதக்கடல்; 'காசினியை ஓதக்கடல் கொண்டொளித்ததோ' (கம்பர் தனிப்பாடல்) கடலொலி வருத்தல்: கம்ப. 1. மிதிலைக். 65; "அறைகடலி னிசையுடனே......நேரிழை நின்றூற்று வளோ" (சாஸனப் பாட்டு.) நேரிலா - தனக்கு ஒப்பு இல்லாத. பேரிரவில் - பிரிவினால் பெரிதாகத் தோற்றுமிரவில்; "ஊழியிற் பெரிதா ஞழிகை யென்னும்" (பெரிய திருமொழி, 2. 7 : 4); 'ஊழிபலவோ ரிர வாயிற் றேயென்னும்' (நள. 1 : 108.)

299. அனங்கன் - மன்மதன். அனகன் வர - பாபமில்லாதவனாகிய சோழன் வருதலால்.

(பி - ம்.) 'வரவந்த'

300. கடைபோக - முடிவுவரையிலும். காத்தியேல் - காக்க விரும்புவாயானால். வண்டு புடைபோதல் மதத்தை யுண்ணும் பொருட்டு; "வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறிநுதற் பொலிந்த வயக் களிற் றொருத்தல்" (அகநா. 78 : 3-4.) பொருப்பு-யானை; மலைபோன்ற உருவம் உடைமைபற்றி. விடைபோய் - விடைபெற்றுச் சென்று; 172.

301. தடம் - பகைவர் தடாகம். பகைவர் தடாகங்களைத் தம்மு டைய யானைகளைக் கொண்டு கலக்குதல் புறத்திணை மரபு: "ஒளிறு மருப்பிற் களிறவர, காப்புடைய கயம்படியினை", "கடிதுறை நீர்க் களிறு படீஇ" (புறநா. 15 : 9-10, 16:6.) அயில் வாளி - கூர்மையான அம்பு களை; என்றது தாமரைப் பூவையும், குவளைப் பூவையும். தடம் - தடாகம். தாமரையும் நீலமும் மாரன் கணைகளாதலின், அவை பூக்குந் தடத்தைக் கலக்கு என்றாள்.

302. கார்நாணு நின்கடத்து வண்டொழியக் காமனார்
போர்நாணின் வண்டே புடைத்துதிர்ப்பாய்—பார்நாதன்

303. செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனார்
வெங்கைக் கரும்பே விரும்புவாய்—எங்கட்

304. குயிரா யுடலா யுணர்வாகி யுள்ளாய்
அயிரா பதமேநீ யன்றே—பெயராது

305. நிற்கண்டா யென்றிரந்து நின்றா ளுதலாக
விற்கொண்ட பேரிளம்பெண் வேறொருத்தி—கொற்கையர்கோன்

302, கார்நாணும் - மேகம் நாணுகின்ற. நின்கடத்து வண்டு - உன்னுடைய மதத்தில் மொய்க்கின்ற வண்டுகள். போர்நாணின் வண்டு - போரைச் செய்யும் நாணாகிய வண்டுகளை ; வண்டுகள் மன்மதன் வில்லின் நாண் என்பது கவிமரபு; "நாரியடுத்த வளிமாலை குலையத் தூர்ந்து" (பிரபு. துதிகதி. 3.) பார்நாதன் - சோழனுடைய ; இது ஜனநாதன் என்பதைப் போன்றது.

(பி - ம்.) 'வண்டு புடைத்துகுப்பாய்'

303. செங்கைக் கரும்புஒழிய - சிவந்த கையிலுள்ள கரும்பைத்தவிர ; என்றது சோழன் மருதநிலத்து விளைபொருளாகிய கரும்பைக் கையில் ஏந்தியுள்ளான் என்பது கருத்து ; "பொன்னி வளநாடு பூஞ்சிலையும்" (337) ; "சோழ னுறந்தைக் கரும்பினிது" (ஔவையார் பாடல்.) அனங்கனார் கரும்பென்றது மன்மதன் வில்லாகிய கரும்பை.

304-5. பெயராது நில் - இவ்விடத்தைவிட்டு நீங்காமல் நிற்பாயாக. கண்டாய் : அசை. ஒப்பு : "கொய்தளிர்த்தண்படலைக் கூத்தப் பெருஞ்சேக்தன், வைகலு மேறும் வயக்களிறே - கைதொழுவல், காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெம், சாலேகஞ் சார நட" (நன். 396, மயிலை. மேற்.

(பி - ம்.) 'உறவாகி யுள்ளாய்'

305. நுதல் - நெற்றி. விற்கொண்ட - வில்லைக்கொண்ட. கொற்கையர்கோன் - சோழன்.

(பி - ம்.) 'நிறைஞ்சி நின்றாள்'

306. மல்லற் புயத்தனகன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினாள்—எல்லையில்

307. கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவேய்ந்
தாடும் படமனைய வல்குலாள்—சேடியாய்த்

308. தம்மை யெடுக்கு மிடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்—செம்மை

309. நிறையு மழகா ணிகரழித்துச் செய்யாள்
உறையு மலர்பறிப்பா ளொப்பாள்—நறைகமழும்

310. மாலை பலபுனைந்து மான்மதச் சாந்தெழுதி
வேலை தருமுத்த மீதணிந்து—சோலையில்

---

306. அனகன் - விக்கிரம சோழன்; 178. யானையின் கை கொல்லுதற்குரியது; "அரும்பனைத் தடக்கை யபராகத் திரம்வாய் வாலெயிறைந் தினுங் கொல்வ" (சீவக. 2154.) கொல்ல - அழகால், கண்டவரைக் கொல்லுவதுபோல வருத்தும் என்றுபொருள் கொள்ளலும் ஒன்றும். குறங்கு - தொடை. எல்லையில் கொலை, கோடும் கொலை என்க.

(பி - ம்.) 'புயத்தான்றன்' 'எல்லையிற் கோடும்'

307. கோடும் - நடுவுநிலைமையில் தப்பி வளைந்த. குருமணி - நிறத்தையுடைய மணி. சேடனுடைய படம் என்க.

308. தம்மை - யென்றது கொங்கைகளை. கொம்மை முகம் - குவிந்து வட்டமான முகம்; கொம்மை - பருமையும் ஆம். அறிவுடையோர் பழிக்கு நாணுதல் இயல்பு: "சான்றோர், புகழு முன்னர் நாணுப, பழியாங் கொல்பவோ காணுங் காலே" (குறுந். 252 : 6-8.) செம்மை - சிவந்த நிறம்.

309. நிகர் அழித்து - தனக்கு ஒப்பாதலை அழித்து. பறிப்பாளொப்பா ளென்றது தாமரைமலரைக் கொய்தமை பற்றிக் கூறியது; தனக்குத் தோற்ற திருமகளுடைய இடத்தைத்தான் கைக்கொள்வது போன்றது பேரிளம்பெண் தாமரைப் பூவைக் கொய்தது. நறை - தேன்.

310. மான்மதச் சாந்து - கஸ்தூரிக்குழம்பை. வேலை - கடல்.
(பி - ம்.) 'மான்மதச்செஞ் சாந்தெழுதி'

311. மானு மயிலு மனைய மடந்தையரும்
தானு மழகு தரவிருப்பத்—தேனிமிர்

312. ஊற விளம்பாளை யுச்சிப் படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்—வேருக

313. வாக்கி மடனிறைத்து வண்டு மதினுரையும்
போக்கி யொருத்தி புகழ்ந்துதர—நோக்கி

314. வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரா லெற்றி
அருந்தித் தமர்மே லயர்ந்தாள்—பொருந்தும்

315. மயக்கத்து வந்து மனுதுங்க துங்கன்
நயக்கத் தகுங்கனவு நல்கும்—முயக்கத்து

---

311. *மானும் மயிலும் அனைய* - மருண்ட பார்வையால் மானையும் சாயலால் மயிலையும் போன்ற. *மடந்தையர்* - சேடியர். *தேன்இமிர்* - வண்டுகள் ஒலிக்கின்ற.

(பி - ம்.) ‘*தரவிருப்பாள்*’ ‘*தேனிமிர*’

312. *ஊறல் இளம்பாளை* - ஊறுதலையுடைய இளையபாளையினது. *உச்சிப்படு* - உச்சியில் உண்டான. *கடுந்தேறல்* - கடுப்பையுடைய கள்.

313. *வாக்கி* - வார்த்து. *மடல்* - கள்ளுண்ணும் வாயகன்ற பாத்திரம்; விபூதி மடல் என்பதுபோல. வண்டு மதுவில்வந்து மொய்த்தல்: “*கள்ளைச்சூழ் காளை வண்டு செருச்செயல் காண்ப வொத்த*” (திருவிளை. தருமிக்கு. 167.)

(பி - ம்.) ‘*வண்டு மதுநுரையும்*’

314. *துள்ளி* - துளியை. *வள்ளுகிரால் எற்றி* - கூரிய நகத்தால் தெறித்து; பருகுமுன் கள்ளின் துளியை யுகிரால் தெறித்தல்; 2: 343. *தமர்* - ஆயமகளிர் செவிலியர் முதலினோர். *அயர்ந்தாள்*-சோர்ந்து விழுந்தாள்.

315. *மயக்கத்து* - கள்ளுண்ட மயக்கத்தில். *மனுதுங்கதுங்கன்* - மனுகுலத்தில் உயர்ந்தோர்களில் மேம்பட்டோன். *நயக்கத்தகும்* - விரும்பத்தக்க. கனவு: 321, 324. *நல்கும்* - கொடுக்கும். *முயக்கத்து* - தழுவுதலின்கண்.

(பி - ம்.) ‘*மனதுங்க*’ ‘*திருக்கனவு*’, ‘*தருங்கனவு நல்க*’

316. மிக்க விழைவு மிகுகளிப்பு மத்துயிலும்
ஒக்க விகல வுடனெழுந்து—பக்கத்து
317. வந்து சுடரு மொருபளிக்கு வார்சுவரில்
தந்த தனதுநிழ ருனோக்கிப்—பைந்துகிர்க்
318. காசுசூ ழ்ல்குற் கலேயே கலேயாகத்
தூசு புடைபெயர்ந்து தோணெகிழ்ந்து—வாசஞ்சேர்
319. சூடிய மாலே பரிந்து துணேமுலேமேல்
ஆடிய சாந்தி னணிசிதைந்து—கூடிய
320. செவ்வாய் விளர்ப்பக் கருங்கண் சிவப்பூர
வெவ்வா ணுதலும் வெயரரும்ப—இவ்வாறு

---

316. விழைவு - ஆசை. களிப்பு - கள்ளுண்ட மகிழ்ச்சி. இகல - தம்முள் பகைக்க.

(பி - ம்.) 'ஒக்க வரிதின்', 'ஒக்க வெழமுன்'

317. சுடரும் - ஒளிவிடும். பளிக்கு வார்சுவரில் - நீண்ட பளிக்குச் சுவரில். தனது நிழல் - தனது வடிவத்தை. பைந்துகிர் - செவ்வியோடு கூடிய பவளத்தையுடைய; "பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்" (பெருங். 1. 43 : 146); "நுண்டுகி னுழைந்த வல்குல் பவழமொத் தினிய தொன்றே" (சீவக. 1184.)

(பி - ம்.) 'ஒளிர்பளிக்கு', 'ஒளிப்பளிக்கு' 'பைந்துகிற்'

318. கலேயே கலேயாக - மேகலேயே ஆடையாக; முதற்கலே : முதற்குறை. தூசுபுடை பெயர்ந்து - உடுத்த ஆடை பக்கத்தே நீங்கப் பெற்று; காமுற்ற மகளிர் துகில் சரிந்துவீழ்தல்; "சரிந்த பூந்துகில்க டாங்கார்' (கம்ப. 1. உலாவியற் : 2.)

319. பரிந்து - அற்று; "கோதை பரிந்து" (கலி. 51 : 3); "மாலே பரிந்திட் டழுதாள்" (நாலடி. 397.) துணே - இரண்டு. சாந்தின் அணி - சந்தனத்தாற் செய்த அலங்காரம்.

320. விளர்ப்ப - வெண்மை நிறமடைய. சிவப்பூர - சிவப்பு நிறம் பரவ. செவ்வாய் விளர்த்தல் முதலிய மூன்றும் கூடலின்கண்ணும் நிகழ்வன: "வாயிற் சிவப்பை விழிவாங்க மலர்க்கண் வெளுப்பை வாய் வாங்கத், தோயக்கலவி யமுதளிப்பீர்" (கலிங்கத். 61); "குவளே சிவத்துக் குமுதம் வெளுத்த குறையல்லவே" (தஞ்சை. 67.)

(பி - ம்.) 'வெளுப்பக் கருங்கண் சிவப்பேற', 'கருங்கண்ணிணே சிவப்ப' 'வியரரும்ப', 'வியர்வரும்ப', 'வெயர்வரும்ப'

321. கண்டு மகிழ்ந்த கனவை நனவாகக்
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்—வண்டுசூழ்

322. வேரிக் கமழ்கோதை வேருகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப்—பாரித்த

323. தாமக் கவிகை நிழற்றச் சயதுங்கன்
நாமக் கடாக்களிற்று நண்ணுதலும்—தேமொழியும்

324. கண்டதுங் கெட்டேன் கனவை நனவாகக்
கொண்டது மம்மதுச்செய் கோலமே—பண்டுலகிற்

325. செய்த தவஞ்சிறிது மில்லாத தீவினையேற்
கெய்த வருமோ விவையென்று—கைதொழுது

---

321. குலாவுதலும் - பெருமையோடு பேசுதலும்.

(பி - ம்.) ‘மகிழ்ந்து’ ‘நனவென்று’ ‘வண்டுவீழ்’

322. வேரி - தேனுல். பூரித்த - நிறைந்த. மெய்யுவகை - உண்மையான மகிழ்ச்சி. பாரித்த - விரிந்த.

(பி - ம்.) ‘தன் மனத்தின்’

323. தாமக் கவிகை நிழற்ற - மாலைகளையணிந்த வெண்கொற்றக் குடை நிழலைச் செய்ய. சயதுங்கன்; 168 குறிப். நாமம் - அச்சம்; மெய்யீற்று உரிச்சொல் ஈறு திரிந்தது. களிற்று - யானையின்மீது. தேமொழி - தேன் போன்ற மொழியையுடைய பேரிளம்பெண்.

324. கண்டதும் - யானையின்மேல் விக்கிரம சோழனைக் கண்டவுடன். கெட்டேன்: இரக்கக் குறிப்பில் வரும் ஒரு சொல்.

325. செய்த தவம் என்றது மலையிற் சென்று நோற்றும், கடலாடியும், பூமியை வலம்வந்தும் செய்த தவம்; குலோத். உலா, 263-4: “மலையினலைகடலின் வானரவின் வெய்ய, தலையிற் பயின்ற தவத்தால் - தலைமைசேர், அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர, எம்மா தவம்புரிந்தோ மியாம்” (தண்டி. 59, மேற்.) ‘தீவினையேற் கெய்தவருமோ இவை’; ‘செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா லெய்தவருமோ விருநிதியம்’ (நல்வழி 17.)

(பி - ம்.) ‘வருமே யிவனென்று’ ‘கைதொடுத் தேறி.’

326. தேறி யொருகாலுந் தேறுப் பெருமையல்
ஏறி யிரண்டா வதுமயங்கி—மாறிலாத்

327. தோழியர் தோண்மே லயர்ந்தாளத் தோழியரும்
ஏழுயர் யானை யெதிரோடி—ஆழியாய்

328 மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்கும்
கூடற்குங் கோழிக்குங் கோமானே—கூடலர்

329. சாருந் திகிரி தனையுருட்டி யோரேழு
பாரும் புரக்கும் பகலவனே—சோர்வின்றிக்

330. காத்துக் குடையென்று லெட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே—போர்த்தொழிலால்

---

326. தேறுப் பெரு மையலேறி - தெளியப்பெறுத பெரிய மயக்கத்தை அடைந்து. இரண்டாவதும்: உம்மை இறந்தது தழுவியது; 315. மாறிலாத் தோழியர் - தன் கருத்துக்கு மாறுதலில்லாத தோழியர்.

(பி - ம்.) 'பெருமயல்கொண் டேறி'

327. ஏழுயர் யானை - ஏழு முழம் உயர்ந்த யானை; அல்லது ஏழு உறுப்புக்கள் நீண்ட யானை: "ஏழுயர் போதகம்" (சீவக. 775.); "ஏழுறுப்புறத் தாழ்ந்த...மூரி வெங்களியானை" (வி. பா. சூதுபோர்.79.) ஆழி - ஆக்ஞாசக்கரம்.

328. புகார் - காவிரிப்பூம்பட்டினம். கூடல் - மதுரை. கோழி - உறையூர்; 272. கூடலர் - பகைவர்.

(பி - ம்.) 'பாடலார்', 'பாடலர்'

329. சாரும் - சார்ந்துவந்து வணங்கி ஏவல் கேட்கும். திகிரிதனை - ஆக்ஞா சக்கரத்தை. ஓரேழுபார் - ஏழு தீவுகளை. பகலவன் - சூரியன்; என்றது இவன் சூரிய வமிசத்தான் ஆதல்பற்றி. சோர்வின்றி - மறதியில்லாமல்.

(பி - ம்.) 'ஈரேழு'

330. எட்டுத்திசை கவித்தது: 30. வேத்துக்குலகிரியில் - அரசர்களாகிய சிறந்த மலைகளுக்குள். மேரு - மேருவைப் போன்றவன்.

331. ஏனைக் கலிங்கங்க ளேழனையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே—மானப்போர்

332. இம்ப ரெழுபொழில் வட்டத் திகல்வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே—நம்பநின்

333. பாரிற் படுவன பன்மணியு நின்கடல்
நீரிற் படுவன நித்திலமும்—நேரியநின்

334. வெற்பில் வயிரமும் வேந்தநின் சோணாட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகிலும்—நிற்பணியக்

---

331. கலிங்கங்கள் ஏழு; கலிக்கம் ஏழு பிரிவுடையது: "பாவ கண் வளைத்தெழு கலிங்கமும் விழுங்கப் பகட்டணி துணித்தொரு பெரும்பரணி கொள்ளும், சேவகன பங்கனக ளங்கன் மதலாய்" (குலோத். பிள்ளைத். 88); "கால முற்றி யெழு காலெனும்படி கலக்கினெ னெழு கலிங்கமும்" (வி. பா. இராசசூய. 58.); "கலிங்க மேழுங் கனவெரி பரப்ப" (பெருங். 799.) தானை - சேனை. தியாக சமுத்திரம்: விக்கிரம சோழனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று; 216. மானப்போரைச் செய்யும் வேந்தர் என்க.

(பி - ம்.) 'மான்போரில்' 'மாநேமி'

332. இம்பர் எழுபொழில் வட்டத்து - இவ்வுலகில் ஏழு தீவுகளிலுள்ள. மவுலிச்சிகாமணி - கிரீடத்திலுள்ள முடிமணி போல்வான். நம்ப: விளி.

(பி - ம்.) பைம்பொன்னின்'

333. படுவன - உண்டாவன. நின் கடல் என்றது தென்கடலை. நித்திலம் - முத்து.

334. பொற்பு - பொலிவு. பூந்துகில் - பூத்தொழிலையுடைய ஆடை; பூப்போல் மென்மையும் அழகும் அமைந்த ஆடை என்னலும் ஒன்றும் சோழநாட்டில் 'துகிலி' என்னும் ஓரூர் சிறந்த ஆடைகள் செய்யுமிடமாக உள்ளது. நிற்பணிய - உன்னை வணங்க.

335. கொண்டா யிவடனது கொங்கைக் கொழுஞ்சுணங்கும்
தண்டர் நிறையுந் தளிர்நிறமும்—பண்டைத்

336. துயிலுங் கவர்ந்ததுநின் தொல்குலத்து வேந்தர்
பயிலுந் திருநூற் படியோ—புயல்வளவ

337. மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையும்—கன்னித்

---

335. கொண்டாய் - பேரிளம்பெண்ணிடமிருந்து கொண்டாய். சுணங்கு - பொன்னிறமான தேமல். தண்டா - தடைப்படாத. தளிர் நிறமும் - மாந்தளிர் போன்ற நிறத்தையும். பண்டைத் துயில் - நின்னைக் காணுவதற்குமுன் இருந்த உறக்கம்.

(பி - ம்.) 'தண்டாமரையும்', 'தண்டாமரையின்' 'பண்டத்'

336. தொல்குலம் என்றது சோழர்குலம் படைப்புக்காலம் தொடங்கி மேம்பட்டு வருதல் பற்றி ; குறள், 955, பரிமேல். திருநூல் - நீதிநூல். அரசர் ஆறிலொன்று கொள்ள வேண்டியிருப்ப, பேரிளம் பெண்ணிடமிருந்து மணி முதல் துயிலிறுதியாக வுள்ள பல பொருள்களைக் கவர்ந்தமைபற்றி இவ்வாறு கூறினர்; "என்னெஞ்சு நாணு நலனு மிவை யெல்லாம், மன்னன் புனனாடன் வௌவினான் - என்னே, அரவக லல்குலா யாறிலொன் றன்றே, புரவலர் கொள்ளும் பொருள்" (முத்.) படியோ என்ற ஓகாரம்வினா. பயிலும் திரு நூற்படியோ : "அரக்கரோ ரழிவு செய்து கழிவரேலதற்கு வேறோர், குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ" (கம்ப. 4. வாலிவதைப் : 79.) புயல் வளவ - மேகத்தைப் போற்கொடுக்கும் சோழ.

(பி - ம்.) 'தொல்குலத்து நீங்கள்' 'படியே'

337. வாளி - அம்பு ; என்றது காஞ்சியிலுள்ள மா, திருமுல்லை வாயிலிலுள்ள முல்லை, திருத்தணிகையிலுள்ள கழுநீர் என்பவற்றை. பொன்னிவளநாடு - சோழநாடு. பூஞ்சிலை - கரும்பு. சோழநாட்டுக் கரும்பு சிறந்தது ; 303. குறிப்.

(பி - ம்.) 'வளநாட்டு வாளியும்' 'வளநாட்டுப் பூஞ்சிலையும்'

338. திருநாடு தேருங் குறையறுப்பச் செய்தால்
திருநாண் மடமகளிர் தம்மை—ஒருநாளவ்
339. வேனற் கரசன் விடுமே யவன்சினமிப்
பானற்கண் ணல்லா ளுயிர்ப்பரமே—ஆனக்கால்
340. குன்றே யெனத்தகுநின் கோபுரத்திற் றாங்குமணி
ஒன்றே யுலகுக் கொழிக்குமே—என்றினைய
341. கூறி வணங்கிடு மிவ்வளவிற் கோதையர்மேற்
சீறி யனங்கன் சிலைவளைப்ப—மாறழியக்

---

338. கன்னித்திரு நாடு - பாண்டிய நாடு. தேர்-மன்மதன் தோராகிய தென்றல். குறையறுப்பச் செய்தால் - தலைவியைத் துன்புறுத்தும் குறையில்லாதபடி செய்தால். தொண்டை நாடு, பொன்னிவள நாடு, கன்னி நாடு இவை, உன் ஆட்சிக்கு உள்ளடங்கியவை ஆதலின், நீ, வேனற்கரசன் வாளிகளையும், சிலையையும் தேரையும் கொண்டு வருத்துங் குறை அறுப்பச் செய்தால், அவன் மகளிர்தம்மை விடுவன் என்பதாம். திரு - சிறப்பைத்தரும். நாண் மடமகளிர் - நாணையும் மடத்தையுமுடைய மகளிர்.

(பி - ம்.) 'குறைவறுப்பச்'

339. வேனற்கரசன் : மன்மதன் ; 274. விடுமே - விடுவான். பானற்கண் நல்லாள் - கருங்குவளை மலரைப்போன்ற கண்ணையுடைய பேரிளம் பெண்ணினது. உயிர்ப்பரம் - உயிரினளவினது ; "ஆவியின் பரமல்ல வேட்கையந்தோ" (திருவாய்மொழி, 10. 3 : 2.)

340. கோபுரத்திற்குக் குன்று உவமை. மணி என்றது ஆராய்ச்சி மணியை ; "வாயிற் கடைமணி நடுநா நடுங்க" (சிலப். 20 : 53) ; "மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற், பொன்னணி மணியைச் சென்று கோட்டினுற் புடைத்த தன்றே" (பெரிய. திருவாரூர்ச் சிறப்பு. 27.) உலகுக்கு ஒன்றே ஒழிக்குமே - உலகத்துக்கு ஒரு ஆராய்ச்சி மணியே போதுமே.

(பி - ம்.) 'உலகுக் கொழியுமே', 'உலகிற் கொழியுமே'

341- இவ்வளவில் - இக்காலத்தில். கோதையர்மேல் - மகளிர் மீது. கோதைமேல் (பி - ம்.) - பேரிளம்பெண்ணின்மீது. மாறழிய - பகைவர் அழிய.

(பி - ம்-) 'வணங்குறு மிவ்வளவிற்', 'வணங்கிடு மிவ்வளவும்', 'வணக்கு மிவளளவும்' 'கோதைமேல்' 'அனங்கன் செருப்பெய்ய' 'சிலைவருத்த'

342. குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி
உத்துங்க துங்க னுலா.

[வெண்பா]

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே—வையம்
அளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

---

342. குத்தும் . கொம்பால் குத்துகின்ற ; "கொங்க குடல்கிழியக் குத்தியிரு கோட்டெடுத்து, வெங்க ணழலின் வெதும்புமே - மங்கையர் கண், சூழத்தா மம்புனையுஞ் சுந்தரத்தோண் மீனவனுக், கீழத்தா னிட்ட விறை" (சாஸனப் பாடல்) கொடைச் சென்னி - கொடையால் சிறந்த சோழன் ; "செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம், பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒருநாளும், பூதலத்தார் தம்மைப் பொருணசையாற் பாராவாம், காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்" (தண்டி. 21, மேற்.) உத்துங்க துங்கன் - உயர்ந்தோருள் உயர்ந்தவன் ; 121. உத்துங்க துங்கன் கடாக்களிற்று உலாப்போந்தான்.

(பி - ம்.) 'குலச்சென்னி'

(கு - ரை.) கையும்......திருமாலோ : 158 குறிப். ; "கையும் பதமுந் திருவாயுங் கண்ணுஞ் செய்ய கருமுகிலே" (பகவற்கீதை, 11 : 26.) அகளங்கன் - விக்கிரம சோழன் பெயர். இம்மான் தளர்ந்தாள் ; இம்மான்- இத்தலைவி.

(பி - ம்-) 'ஆலிலை மேற்பாயல்' 'தளர்ந்தாளென்'